# தகவல் தொழில்நுட்பவியல் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

## மானியக் கோரிக்கை எண். 31

2018-2019

## டாக்டர். எம். மணிகண்டன்

### தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2018

# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## மானியக் கோரிக்கை எண்.31

# கொள்கை விளக்கக் குறிப்பு 2018-2019

## பொருளடக்கம்


| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| I | **முன்னுரை** | 1 - 3 |
| II | **தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்)** | 4 - 83 |
| 2.1 | முன்னுரை | 4 - 9 |
| 2.2 | தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (எல்கோசெஸ்கள்) | 10 - 29 |
| 2.2.1 | எல்கோசெஸ் - சோழிங்க நல்லூர், சென்னை | 11 - 12 |
| 2.2.2 | எல்கோசெஸ் - விளாங்குறிச்சி, கோயம்புத்தூர் | 13 - 14 |
| 2.2.3 | எல்கோசெஸ் - இலந்தைகுளம், மதுரை | 15 - 17 |
| 2.2.4 | எல்கோசெஸ்- வடபழஞ்சி, மதுரை | 17 - 19 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 2.2.5 | எல்கோசெஸ்- நவல்பட்டு, திருச்சி | 20 - 23 |
| 2.2.6 | எல்கோசெஸ் - கங்கை கொண்டான், திருநெல்வேலி | 23 - 25 |
| 2.2.7 | எல்கோசெஸ் – ஜாகீர்அம்மா பாளையம், சேலம் | 25 - 28 |
| 2.2.8 | எல்கோசெஸ் - விஸ்வநாதபுரம், ஓசூர் | 28 - 29 |
| 2.3 | தொழில் முனைவோர் மையம், சென்னை மற்றும் கோயம்புத்தூர் | 30 - 31 |
| 2.4 | சோழிங்கநல்லூர் எல்கோசெஸ்ஸில் ஒரு தகவல் தொழில்நுட்ப கட்டடம் அமைத்தல் | 31 - 32 |
| 2.5 | கிராமப்புற வணிக வெளிப்பணி மையங்கள் (Rural Business Process Outsourcing Centres (RBPO) | 32 - 34 |
| 2.6 | கொள்முதல் பிரிவு | 34 - 36 |
| 2.7 | மடிக்கணினி வழங்கும் திட்டம் | 37 - 38 |
| 2.8 | மின் ஆளுமை | 38 - 55 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 2.8.1 | முக்கிய மின்-ஆளுமை திட்டங்கள் | 39 - 42 |
| 2.8.2 | அரசாங்கத் துறைகளுக்கு உருவாக்கப்பட்ட இணையதளங்கள் | 42 - 43 |
| 2.8.3 | ஆதார் நிரந்தர பதிவு மையம் (PECs) | 43 - 45 |
| 2.8.4 | வெளிப்படை அரசு தரவு தளம் | 45 - 47 |
| 2.8.5 | இளைஞர்கள் மற்றும் தொழில் முனைவோருக்கான மேகக்கணினி மற்றும் இணையப் பதிவேற்ற சேவைகள் | 47 - 49 |
| 2.8.6 | மின்னணு (இ-ஸ்மார்ட்) வகுப்பறை | 49 - 53 |
| 2.8.7 | பயிற்சி | 54 - 55 |
| 2.9 | தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு | 56 - 80 |
| 2.9.1 | தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு | 59 - 68 |
| 2.9.1.1 | பின்புலம் | 59 - 60 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 2.9.1.2 | தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் மூன்றாம் கட்டம் | 61 |
| 2.9.1.3 | தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் நோக்கம் | 62 - 63 |
| 2.9.1.4. | தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் வாயிலாக அரசு துறைகளுக்குப் வழங்கப் படும் சேவைகள் | 63 |
| 2.9.1.5 | தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு செங்குத்து இணைப்பு (vertical) | 63 - 65 |
| 2.9.1.6 | மாவட்ட தலைமையகங்களில் தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு மற்றும் தேசிய அறிவு வலைப்பின்னல் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு | 65 - 66 |
| 2.9.1.7 | கிடைமட்ட இணைப்பு (Horizontal connectivity) | 66 - 67 |
| 2.9.1.8 | தமிழ்நாடு பெரும் பரப்பு செங்குத்து வலையமைப் பிற்கான பதிலி இணைப்பு (Redundant Connectivity) | 67 - 68 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 2.9.2 | தேசிய அறிவுத் திறன் வலையமைப்பு (National Knowledge Network) | 68 |
| 2.9.3 | பிற இணைப்பு சேவைகள் | 69 |
| 2.9.4 | தமிழ்நாடு மாநில தரவு மையம் | 69 - 74 |
| 2.9.4.1 | தமிழ்நாடு மாநில தரவு மையம் - I | 70 - 71 |
| 2.9.4.2 | தமிழ்நாடு மாநில தரவு மைய பாதுகாப்பு கட்டமைப்பு | 71 - 72 |
| 2.9.4.3 | தமிழ்நாடு மாநில தரவு மையத்தின் முக்கிய அம்சங்கள் | 73 |
| 2.9.4.4 | தமிழ்நாடு மாநில தரவு மையம் II (TNSDC II) | 74 |
| 2.9.5 | தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையம் (Tamil Nadu Disaster Recovery Centre /TNDRC) | 75 - 79 |
| 2.9.5.1 | தேசிய தரவு மையம், புனே | 75 |
| 2.9.5.2 | தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையம் | 76 - 78 |
| 2.9.5.2.1 | தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையத்தின் முக்கிய அம்சங்கள்: | 77 - 78 |
| 2.9.5.3 | அருகாமை பேரிடர் மீட்பு மையம் (Near Line Disaster Recovery Centre/NLDRC) | 78 - 79 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 2.9.6 | மாநில தரவு மையத்தில் மேகக் கணினிய அமைப்பு (Cloud Computing Setup at TNSDC) | 79 |
| 2.9.7 | மூலக் கணினிப் பண்ணை (Server Farm) | 79 - 80 |
| 2.9.8 | மின்னஞ்சல் தீர்வு (e-Mail Solution) | 80 |
| 2.10 | நிதி செயல்பாடு | 80 - 83 |
| III | **மின் ஆளுமை ஆணையரகம் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை** | 84 - 142 |
| 3.1 | முன்னுரை | 84 - 85 |
| 3.2 | நிர்வாகக் கட்டமைப்பு | 85 - 87 |
| 3.2.1 | மாநில உயர்மட்டக் குழு | 85 - 86 |
| 3.2.2 | தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (Tamil Nadu eGovernance Agency) | 86 - 87 |
| 3.3 | நிறுவன கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப பணியாளர் தொகுப்பு | 87 - 89 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 3.4 | மாநில மின் குறிக்கோள் குழு (State e-Mission Team) | 89 - 90 |
| 3.5 | மாவட்ட மின் ஆளுமை சங்கங்கள் (DeGS) | 90 - 91 |
| 3.6 | திட்டங்கள் | 91 - 104 |
| 3.6.1 | மின் மாவட்ட திட்டம் (e-District) | 91 - 104 |
| 3.7 | அரசு இ- சேவை மையங்கள் | 104 - 106 |
| 3.8 | மாநில சேவை இணையதளம் (State Portal) | 107 |
| 3.9 | திறன் மேம்பாடு (Capacity Building) | 107 - 110 |
| 3.9.1 | பயிற்சி விவரங்கள் | 109 - 110 |
| 3.10 | தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு (TNGIS) | 110 - 115 |
| 3.10.1 | புவிசார் தகவல் அமைப்பினைச் செயல்படுத்துதல் | 111 - 115 |
| 3.11 | முறைப்படுத்தப்பட்ட டிஜிட்டல் முகவரி எண் உருவாக்குதல் | 116 |
| 3.12 | மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம் (SRDH) | 116 - 118 |
| 3.12.1 | மாநில குடியிருப்போர் தகவல் மையத்தின் நோக்கங்கள் | 117 - 118 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 3.13 | மின் அலுவலகம் (e-Office) | 118 - 119 |
| 3.14 | தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் 2017-2018 ஆம் ஆண்டின் செயல்பாடுகள் | 119 - 123 |
| 3.14.1 | அரசுத் துறைகளுக்கான "மின் ஆளுமைக்கான மாண்புமிகு முதலமைச்சரின் உயரிய விருது" | 119 - 120 |
| 3.14.2 | மாணவர்களுக்கான மாண்புமிகு முதலமைச்சரின் மின் ஆளுமைக்கான உயரிய விருது | 121 - 122 |
| 3.14.3 | சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான (MSME Awards) தமிழ்நாடு அரசின் மின் ஆளுமை விருது | 122 - 123 |
| 3.15 | தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பு தணிக்கை (IT Security Audit) | 124 - 125 |
| 3.16 | குறுந்தகவல் மூலமாக சேவை நிலை தெரிந்து கொள்ளும் வசதி (SMS Based Service Tracking Facility) | 125 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 3.17 | திறன் மேம்பாட்டிற்கான சிறப்பு மையம் (Centre of Excellence for Capacity Building) | 126 |
| 3.18 | மின் ஆளுமை தர கையேடு (e-Governance Standard Manual) | 126 - 127 |
| 3.19 | மின் - கையொப்பமிடல் வசதி (e-Sign Facility) | 127 - 128 |
| 3.20 | 2017-2018 ஆம் ஆண்டின் சாதனைகள் | 128 - 131 |
| 3.20.1 | இ-தால் (Electronic Transaction Aggregation and Analysis Layer) | 128 |
| 3.20.2 | மின் மாவட்டங்கள் | 128 - 129 |
| 3.20.3 | ஆதார் நிரந்தர பதிவு மையம் (Aadhaar Permanent Enrolment Centre) | 130 - 131 |
| 3.20.3.1 | பதிவு செய்யப்பட்ட மற்றும் வழங்கப்பட்டுள்ள ஆதார் எண்ணிக்கை | 131 |
| 3.21 | உள்ளங்கையில் சான்றிதழ் திட்டம் (Tiny URL) | 132 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 3.22 | பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சக்ஷார்தா அபியான் (PMGDISHA) | 132 - 134 |
| 3.22.1 | மாநிலத்தின் இலக்கு | 134 |
| 3.23 | அம்மா இ-கிராமம் | 135 |
| 3.24 | அம்மா இ-சேவை கைபேசி செயலி Assured Multi Model Access to e-Services (AMMA) | 136 - 137 |
| 3.25 | புதுயுக ஆளுகைக்கான பொது அலைபேசி செயலி (UMANG-Unified Mobile Application for New Age Governance) | 137 - 138 |
| 3.26 | நமது அரசு (My Gov) | 138 |
| 3.27 | இ-மடல் (e-Newsletter) | 138 - 139 |
| 3.28 | மின் ஆளுமை கொள்கை (eGovernance Policy) | 139 - 140 |
| 3.29 | நிதி நிலை செயல்பாடுகள் | 141 - 142 |
| **IV** | **தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம்** | 143 - 162 |
| 4.1 | முன்னுரை | 143 - 144 |
| 4.2 | நிறுவனத்தின் புனரமைப்பு | 144 - 145 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 4.3 | நிறுவன அமைப்பு | 146 - 147 |
| 4.4 | கேபிள் டிவி சேவை | 147 - 153 |
| 4.4.1 | உட்கட்டமைப்பு | 148 |
| 4.4.2 | டிஜிட்டல் கேபிள் டிவி சேவை | 149 - 150 |
| 4.4.3 | டிஜிட்டல் கேபிள் டிவி சேவை துவக்கம் | 150 - 151 |
| 4.4.4 | செட்டாப் பாக்ஸ் வழங்குவதில் முன்னேற்றம் | 151 - 152 |
| 4.4.5 | டிஜிட்டல் கேபிள் டிவி சேவையின் மாதக் கட்டணம் | 152 |
| 4.4.6 | உயர் வரையறை செட்டாப் பாக்ஸ் சேவை (High Definition Cable TV - HD) | 153 |
| 4.5 | அரசு இ-சேவை மையங்கள் | 153 - 154 |
| 4.6 | நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்கள் (PECs) | 154 - 156 |
| 4.7 | இணையதள சேவைகள் | 156 - 158 |
| 4.7.1 | இலவச பொது WiFi சேவைகள் | 157 - 158 |
| 4.7.2 | பள்ளிகளுக்கு அகண்ட அலைவரிசை இணையம் | 158 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 4.8 | பாரத்நெட் (BharatNet) | 158 - 159 |
| 4.9 | தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் நிதிநிலை செயல்பாடு | 159 - 162 |
| 4.9.1 | தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் இலாப நட்ட விவரம் | 161 - 162 |
| **V** | **தமிழ் இணையக் கல்விக்கழகம்** | 163 - 189 |
| 5.1 | முன்னுரை | 163 - 164 |
| 5.2 | நோக்கம் | 164 - 165 |
| 5.3 | செயல்பாடுகள் | 165 - 167 |
| 5.3.1 | கல்வித் திட்டங்கள் | 165 |
| 5.3.2 | மின்னூலகம் | 165 - 166 |
| 5.3.2.1. | தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளை ஆவணப்படுத்தலும், காப்பதும் | 166 |
| 5.3.3 | கணினித் தமிழ் | 166 |
| 5.3.4 | தமிழ் மென்பொருள் உருவாக்கல் (Tamil Software Development) | 167 |
| 5.4 | கல்வித் திட்டங்கள் | 167 - 171 |
| 5.4.1 | மழலைக் கல்வி | 167 - 168 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 5.4.2 | சான்றிதழ் (1 முதல் 6 ஆம் வகுப்பு வரை) | 168 |
| 5.4.3 | மேற்சான்றிதழ் (7 முதல் 12 ஆம் வகுப்பு வரை) | 168 |
| 5.4.4 | இளநிலைத் தமிழியல் பட்டக் கல்வி | 169 - 171 |
| 5.5 | தமிழர் தகவலாற்றுப்படை | 171 - 172 |
| 5.6 | தமிழ் மின் நிகண்டு | 173 - 174 |
| 5.7 | தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் மின்கற்றலுக்கான இணையதளம் (e-Learning Web Portal) | 174 - 175 |
| 5.8 | மின்நூலகம் உருவாக்குதல் | 175 - 177 |
| 5.9 | ஓலைச்சுவடிகளை மின்னுருவாக்கம் மற்றும் நூலடைவு செய்தல் | 177 - 178 |
| 5.10 | மாதாந்திரச் சொற்பொழிவு | 178 - 179 |
| 5.11 | தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் பரப்புரைப் பணிகள் | 179 - 183 |
| 5.11.1 | கணித்தமிழ்ப் பேரவை | 180 - 181 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 5.11.2 | தமிழ்ப் பெருங்களஞ்சியத் திட்டம் | 181 |
| 5.11.3 | கான் கல்விக்கழகத்தின் கல்விச் சார்ந்த காணொலிகள் | 181 - 182 |
| 5.11.4 | படைப்பாக்கப் பொது முயற்சி | 182 - 183 |
| 5.12 | நடைபெற்றுவரும் திட்டங்கள் | 183 - 188 |
| 5.12.1 | தமிழ் மென்பொருள்கள் உருவாக்கம் | 183 - 185 |
| 5.12.2 | புதியபாடத்திட்டங்கள் உருவாக்குதல் | 185 |
| 5.12.3 | புதிய கல்வித்திட்டம் | 185 - 186 |
| 5.12.4 | மாணவர்களுக்கான குறுஞ்செயலிகள் | 186 |
| 5.12.5 | உரை மற்றும் பேச்சு இயக்க மென்பொருட்கள் | 187 |
| 5.12.6 | இயந்திர மொழி பெயர்ப்பிற்கான தமிழ் மொழியின் சொற்றொடர் அமைப்பு மற்றும் விதிமுறைகள் | 187 - 188 |
| 5.13 | எதிர்காலத்திட்டம் | 188 - 189 |
| 5.13.1 | கணினித் தமிழ்த் துறை | 188 - 189 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| VI | **தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்பவியல் நிறுவனம்** | 190 - 205 |
| 6.1 | முன்னுரை | 190 - 192 |
| 6.2 | செயல்பாடுகள் | 192 |
| 6.3 | ஆசிரியர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் (2017-18) | 192 - 193 |
| 6.4. | திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் (2017-18) | 193 |
| 6.5 | தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (2017-18) | 194 |
| 6.6 | இளைஞர் மேம்பாட்டுத் திட்டம் (2017-18) | 194 - 195 |
| 6.7 | ஆய்வுகள் மற்றும் பிரசுரங்கள் (2017-18 டிஜிட்டல் ஆப்ஜெக்ட் ஐடன்டிபையர் | 195 - 196 |
| 6.8 | டிஜிட்டல் மேம்பாட்டுத் திட்டம் (2017-18) | 197 |
| 6.9 | தொழில் மற்றும் கல்வி நிறுவனங்களின் தொடர்பு திட்டம் (2017-2018) | 197 - 198 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 6.10 | ஐசிடி அகடமியால் கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (2017-18) | 198 - 201 |
| 6.11 | 2017-2018-ல் நிறைவு செய்யப்பட்ட திட்டங்கள் | 201 - 203 |
| 6.12 | 2018-2019-ல் நடைமுறையில் உள்ள தமிழக அரசின் திட்டங்கள் | 203 - 204 |
| 6.13 | 2018-2019-ல் முன்மொழியப்பட்ட பயிற்சிகள் | 204 - 205 |
| **VII** | **தமிழ்நாடு பைபர்நெட் கார்ப்பரேஷன் லிமிடெட் (TANFINET)** | 206 - 208 |

# அத்தியாயம் - I

## முன்னுரை

வளர்ந்த மற்றும் வளர்ந்துவரும் நாடுகள் அனைத்துத் துறைகளிலும் எய்தவேண்டிய இலக்குகளை அதிவிரைவாகவும், துல்லியத்துடனும் மற்றும் எதிர்காலப் பயன்பாட்டிற்கான பெருந்தரவுகளை ஏற்படுத்துவதன் மூலமும் அடைந்திட வழிநடத்துவதோடு அல்லாமல், அனைத்துத் துறைகளிலும் மாற்றத்தகுந்த புதிய மற்றும் புதுமையான தொழில்நுட்பக் கருவிகளைப் புகுத்தி டிஜிட்டல் புரட்சியை உருவாக்கியுள்ள தகவல் தொழில்நுட்பமானது முழுமையான மாற்றத்திற்கான ஒரு தொடர் இயக்கியாகவும் விளங்குகிறது. உலகம் முழுதும் பரவி வரும் தகவல் தொழில்நுட்பப் புரட்சியானது சமமான வளர்ச்சியைத் தூண்டுவதற்கும், புதிய கருவிகள், நடைமுறைகள், வளங்கள், சேவைகள், தயாரிப்புகள், திறன் மற்றும் சமீபத்திய தொழில்நுட்பங்களைச் சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளும் அணுகிடவும் வழிவகுக்கிறது. மேற்கண்ட சூழலில், அதிக வேலைவாய்ப்பு உருவாக்கம், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிக பங்களிப்பு, குடிமக்களுக்கு விரைவான சேவைகளை வழங்குதல்

மற்றும் நேரத்தையும் ஆற்றலையும் சேமிப்பதன் மூலம் ஒவ்வொரு நாளையும் மிக வசதியானதாக தகவல் தொழில் நுட்பவியல் துறை திறம்பட மாற்றியுள்ளது.

மாநிலத்தில் உள்ள திறமையான மனித வளத்தைப் பயன்படுத்தி புதிய தகவல் தொழில்நுட்ப முயற்சிகள் மற்றும் மின்னாளுமைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழகம் இந்தியாவில் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. குடிமக்களுக்கான அரசின் சேவைகளை விரைவாகவும் மற்றும் வெளிப்படையான முறையிலும் வழங்குவதே அரசின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

ஒவ்வொரு துறையிலும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் சமூக கைபேசி பகுப்பாய்வு மேகக்கணினியம் (SMAC) ஆகியவை வளர்ந்து வரும் தொழில்நுட்பமாகத் திகழும் சூழலில், தமிழக அரசின் தகவல் தொழில் நுட்பவியல் துறை, அமையப்பெற்ற தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புகளை மேம்படுத்தி விரிவுபடுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தற்காலத் துறைகளான மேகக்கணினியம், இயந்திரக் கற்றல், செயற்கை நுண்ணறிவு, ரோபோ தொழில்நுட்பம், முப்பரிமாண அச்சிடுதல், வங்கி மற்றும் வணிக சேவைகளில் தகவல் தொழில்நுட்பவியல் பயன்பாடுகள், வணிக தொழில்நுட்பம், மருத்துவத் தொழில்நுட்பம், வேளாண் தொழில்நுட்பம், பல்பொருள் இணையம், மின்னணு அமைப்பு வடிவமைப்பு மற்றும் உற்பத்தி (ESDM), அனிமேஷன் மற்றும் விளையாட்டு, தரவுப் பகுப்பாய்வு, வணிக நுண்ணறிவு மென்பொருள், தரவுக் கிடங்கு மற்றும் தமிழகத்தில் முதலீடுகள் சார்ந்த தரவு மையங்கள் ஆகியவைத் தொடர்ந்து ஊக்குவிக்கப்படுகிறன. தமிழகம் இத்தகைய தற்கால மற்றும் மற்றும் மாறாத் தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவது, வருங்காலத்தில் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவது மட்டுமன்றி, சமூக, பொருளாதார நலத்திட்டங்களைத் திறமையுடனும், குறைந்த செலவிலும் மற்றும் வெளிப்படையாகவும் மாநிலக் குடிமக்களுக்கு அளித்திட உதவும்.

## அத்தியாயம் - II

## தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்)

### 2.1 முன்னுரை

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் இந்திய நிறுவனங்கள் சட்டம் 1956-ன் கீழ் 21.03.1977 அன்று நிறுவப்பட்ட, தமிழ்நாடு அரசுக்கு முழுவதும் சொந்தமான ஒரு தொழில் நிறுவனமாகும்.

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சேவை சார்ந்த நிறுவனங்களை உருவாக்குதல், அரசு துறைகளுக்கு வன்பொருள் கொள்முதல் செய்தல், மின்னாளுமை மற்றும் வன்பொருள் சேவைகள் ஆகியவற்றுக்குத் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல் ஆகியன தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முதன்மையான பணிகளாகும். மேலும், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களை உருவாக்குதல்,


தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN), தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் (TNSDC), பேரிடர் மீட்பு மையம் (DRC), அருகாமை பேரிடர் மீட்பு மையம் (NLDRC), மின்னஞ்சல் தீர்வு (e-mail Solution), மேகக்கணினியம் (Cloud Computing), தொழில் முனைவோர் மையங்களை ஏற்படுத்துதல், மடிக்கணினி வழங்குதல், இணையதளங்களை உருவாக்குதல், ஆதார் நிரந்தர பதிவு மையங்களை ஏற்படுத்துதல் போன்ற திட்டங்களை அமைத்து வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது.

தமிழக அரசின் விருப்பக் கொள்முதல் முகமையாகவும், மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறையிடமிருந்து நிதியுதவி பெறும் பெரிய தகவல் தொழில்நுட்பவியல் திட்டங்களைச் செயல்படுத்தும் நிறுவனமாகவும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) விளங்குகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளுக்கான தகவல் தொழில்நுட்பவியல் மென்பொருள் ஏற்றுமதியில்

முதன்மையாகத் திகழும் முதல் நான்கு மாநிலங்களின் விவரங்கள் பின்வருமாறு:-

(மதிப்பு கோடியில்)




Source: STPI & Ministry of Commerce

படம் - 1

எல்கோசெஸ் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள தகவல் தொழில்நுட்பம் மற்றும் சேவை சார்ந்த நிறுவனங்களின் முதலீட்டின் விவரங்கள் பின்வருமாறு:-

(மதிப்பு கோடியில்)




Source: STPI & Ministry of Commerce

படம் - 2

எல்கோசெஸ் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள தகவல் தொழில்நுட்பம் மற்றும் சேவை சார்ந்த நிறுவனங்களின் ஏற்றுமதி விவரங்கள் பின்வருமாறு:-

(மதிப்பு கோடியில்)





Source: STPI & Ministry of Commerce

படம் - 3

எல்கோசெஸ் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள தகவல் தொழில்நுட்பம் மற்றும் சேவை சார்ந்த நிறுவனங்களின் வேலைவாய்ப்பு விவரங்கள் பின்வருமாறு:-

(மதிப்பு இலட்சத்தில்)




Source:STPI & Ministry of Commerce

படம் – 4

## 2.2 தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (எல்கோசெஸ்கள்)

தமிழக அரசின் முன்முயற்சியின் படி, எல்காட் சென்னை, கோயம்புத்தூர், மதுரை (இரண்டு இடங்கள்), திருச்சி, சேலம், திருநெல்வேலி மற்றும் ஓசூரில் 8 தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்கி உள்ளது.

மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் அவர்கள் எல்காட் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளுக்கான (IT/ITeS) சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு வியாபாரக் குறியாக "எல்கோசெஸ்" என பெயரிட்டார். இவை தமிழ்நாட்டில் IT/ITeS முதலீடுகளை ஈர்ப்பதற்கான ஒரு சிறந்த விருப்ப இடமாகவும் உருவாகியுள்ளது.

### 2.2.1 **எல்கோசெஸ் - சோழிங்கநல்லூர், சென்னை**

சென்னை சோழிங்கநல்லூரில், 377.08 ஏக்கர் நிலப்பரப்பில் எல்காட் நிறுவனம் ஒரு எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது. இந்த எல்கோசெஸ்சில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நிர்வாக கட்டடம் கட்டுவதற்கான செலவையும் சேர்த்து எல்காட்டின் மொத்த முதலீடு ₹195.35 கோடி ஆகும்.

- இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் 7 நிறுவனங்களுக்குக் குத்தகை அடிப்படையில் 259 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:-

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | விப்ரோ லிட். | 80 |
| 2 | எச்.சி.எல் | 50 |
| 3 | சத்யம் | 50 |
| 4 | போர்டு மோட்டார் பிரைவேட் லிமிடெட் | 28 |
| 5 | காக்னிசன்ட் டெக்னாலஜிஸ் சொலுஷன்ஸ் லிமிடெட் | 20 |
| 6 | சதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ் லிட். | 15 |
| 7 | தமிழ்நாடு மின்சார வாரியம் | 16 |

- இந்த நிறுவனங்கள் 95.30 இலட்ச சதுர அடியில் தகவல் தொழில்நுட்ப கட்டடத்தைக் கட்டி முடித்து 57,125 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

- திருவாளர்கள் ஃபோர்ட் மோட்டார் பிரைவேட் லிட். 26.06 இலட்ச சதுர அடியில் தங்களுடைய குளோபல் டெக்னாலஜி மற்றும் வணிக வளாக கட்டடத்தைக் கட்டி வருகின்றது. திருவாளர்கள் விப்ரோ நிறுவனம் மேலும் 9.50 இலட்ச சதுர அடியில் தகவல் தொழில்நுட்ப கட்டட விரிவாக்கப் பணிகளை மேற்கொண்டுள்ளது.





**படம் – 5**

### 2.2.2. எல்கோசெஸ்- விளாங்குறிச்சி, கோயம்புத்தூர்

கோயம்புத்தூர் விளாங்குறிச்சி கிராமத்தில் 62 ஏக்கர் நிலப்பரப்பில் எல்காட் ஒரு எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது. இந்த எல்கோசெஸ்சில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நிர்வாக கட்டடம் கட்டுவதற்கான செலவையும் சேர்த்து மொத்த முதலீடு ₹72.50 கோடி ஆகும்.

- இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் 2 நிறுவனங்களுக்குக் குத்தகை அடிப்படையில் 19 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | விப்ரோ லிட். | 9.5 |
| 2 | டைடல் பார்க் கோயம்புத்தூர் லிட். | 9.5 |

- இந்த நிறுவனங்கள் 20.50 இலட்ச சதுர அடியில் தகவல் தொழில்நுட்ப கட்டடத்தைக் கட்டி முடித்து 13,500 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

- இந்த எல்கோசெஸ்சில் திருவாளர்கள் விப்ரோ நிறுவனம் மேலும் 1.60 இலட்ச சதுர அடியில் தகவல் தொழில்நுட்ப கட்டட விரிவாக்க பணிகளை மேற்கொண்டுள்ளது.





**படம் -6**

### 2.2.3. எல்கோசெஸ்- இலந்தைகுளம், மதுரை

மதுரை இலந்தைகுளம் கிராமத்தில், 28.91 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு எல்கோசெஸ்ஸை எல்காட் உருவாக்கியுள்ளது. 60,205 சதுர அடி கொண்ட தகவல் தொழில்நுட்ப கட்டடம் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றைக் கட்டுவதற்காக எல்கோசெஸ்ஸில் ₹34.41 கோடியை முதலீடு செய்துள்ளது.

- இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் 5 நிறுவனங்களுக்குக் குத்தகை அடிப்படையில் 20.89 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | ஹனிவெல் டெக்னாலிஜிஸ் லிட். | 11.25 |
| 2 | எச்.சி.எல் இன்போ சிஸ்டம்ஸ் லிட். | 6.75 |
| 3 | செல்லா சாஃப்ட்வேர் பிரைவேட் லிட். | 2.25 |
| 4 | தமிழ்நாடு மின்சார வாரியம் | 0.58 |
| 5 | ரேபார் டிசைன் & டீடைல் பிரைவேட் லிட். | 6000 சதுர அடி |

- இந்த நிறுவனங்கள் 2.30 இலட்ச சதுர அடியில் தகவல் தொழில்நுட்ப கட்டடத்தைக் கட்டி முடித்து 3,200 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

- இந்த எல்கோசெஸ்சில் திருவாளர்கள் எச்.சி.எல் இன்ஃபோசிஸ்டம்ஸ் லிட். நிறுவனம் 3.80 இலட்ச சதுர அடியில் தகவல் தொழில்நுட்ப கட்டட விரிவாக்க பணிகளை மேற்கொண்டுள்ளன.

- இந்த எல்கோசெஸ்சில் உள்ள 60,205 சதுர அடி கொண்ட தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் பின்வரும் 5 நிறுவனங்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவை 630 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | இட ஒதுக்கீட்டின் அளவு (சதுர அடியில்) |
|---|---|---|
| 1 | கேலக்சி இன்ஃபோடெக் | 2,508 |
| 2 | ஏ.எம்.பி.சி. டெக்னாலஜீஸ் பிரைவேட் லிட். | 3,277 |
| 3 | சாய் பி.பி.ஓ சர்வீசஸ் லிட். | 15,181 |
| 4 | நியாமோ என்டர்பிரைசஸ் சொலுஷன்ஸ் பிரைவேட் லிட். | 30,103 |
| 5 | சிவிஜஏசி கன்சல்டிங் | 9,136 |

இந்த எல்கோசெஸ்ஸில் நிலம் மற்றும் கட்டடத்தில் 100 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




படம் - 7

### 2.2.4 **எல்கோசெஸ்- வடபழஞ்சி, மதுரை**

மதுரை வடபழஞ்சி கிராமத்தில், 245.17 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு எல்கோசெஸ்ஸை எல்காட் உருவாக்கியுள்ளது. 72,000 சதுர அடி கொண்ட தகவல் தொழில்நுட்ப நிர்வாக கட்டடம், இரயில்வே மேம்பாலம் கட்டுதல் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்குதல், ஆகியவற்றிற்கு எல்கோசெஸ் ₹66.51

கோடியை முதலீடு செய்துள்ளது. இந்த இரயில்வே மேம்பாலம் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 04.01.2018 அன்று தொடங்கி வைத்தார்கள்.

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் 7 நிறுவனங்களுக்குக் குத்தகை அடிப்படையில் 144 ஏக்கர் நிலம் ஒதுக்கீடும், 25 ஏக்கர் நிலம் சிறப்புப் பொருளாதார மண்டல அந்தஸ்து அல்லாத இடத்தில் ஒரு நிறுவனத்திற்கும நிலம் ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

**அ) சிறப்புப் பொருளாதார மண்டலம்**

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | எச்.சி.எல் | 60 |
| 2 | சத்யம் | 50 |
| 3 | செயின்-சிஸ் சாஃப்ட்வேர் எக்ஸ்போர்ட்ஸ் (பி) லிட். | 20 |
| 4 | சதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ் லிட். | 5 |

| | | |
|---|---|---|
| 5 | காலிபர் பாய்ண்ட் | 5 |
| 6 | ஹெல்த் பிளான் சிஸ்டம்ஸ் (இந்தியா) பிரைவேட் லிட் | 2 |
| 7 | காக்சிடெல் டெக்னாலஜிஸ் பி.லிட் | 2 |

**ஆ) சிறப்பு பொருளாதார மண்டலம் அல்லாத பகுதி**

| **வ. எண்** | **நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்)** | **நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்)** |
|---|---|---|
| 1 | எம்பயர் ஃபோட்டோ வோல்டிக் சிஸ்டம்ஸ் பி. லிட்., சென்னை | 25 |



**படம் – 8**

### 2.2.5. எல்கோசெஸ்- நவல்பட்டு, திருச்சி

திருச்சி நவல்பட்டு கிராமத்தில், 147.61 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு எல்கோசெஸ் உருவாக்கப் பட்டுள்ளது. இதில் 123.23 ஏக்கர் பரப்பளவிற்குச் சிறப்புப் பொருளாதார மண்டல அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளது. சுமார் 60,000 சதுர அடி கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்ப கட்டடம் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை கட்டுவதற்காக ₹60.08 கோடியை எல்கோசெஸ் முதலீடு செய்துள்ளது.

- இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் 8 நிறுவனங்களுக்குக் குத்தகை அடிப்படையில் 34 ஏக்கர் நிலம் ஒதுக்கீடும் 2 ஏக்கர் நிலம் சிறப்புப் பொருளாதார மண்டல அந்தஸ்து அல்லாத இடத்தில் ஒரு நிறுவனத்திற்கும் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அ) சிறப்புப் பொருளாதார மண்டலம்**

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | சதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ் லிட். | 10 |
| 2 | டபிள்யு என்.எஸ். குளோபல் சர்வீசஸ் பிரைவேட் லிட். | 5 |
| 3 | ஜைலாக் சிஸ்டம்ஸ் லிட் | 5 |
| 4 | அன்லிமிடெட் இனொவேஷன்ஸ் இந்தியா பி.லிட் | 5 |
| 5 | அசிஸ்ட் இண்டர்நேஷனல் பி.லிட் | 3 |
| 6 | ஐ.லிங்க் மல்டிடெக் சொலுஷன்ஸ் பி. லிட். | 2 |
| 7 | விடார்ட் டெக்னாலிஜிஸ் | 2 |
| 8 | ஹெல்த் பிளான் சிஸ்டம்ஸ் (இந்தியா) பி.லிட் | 2 |

**ஆ) சிறப்புப் பொருளாதார மண்டலம் அல்லாத பகுதி**

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | எச்.சி.எல் இன்ஃபோ சிஸ்டம்ஸ் | 2 |

- இந்த எல்கோசெஸ்சில் உள்ள 60,000 சதுர அடி கொண்ட தகவல் தொழில்நுட்ப கட்டடத்தில் பின்வரும் 7 நிறுவனங்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவை 1,535 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | இட ஒதுக்கீட்டின் அளவு (சதுர அடியில்) |
|---|---|---|
| 1 | ஐ.லிங்க் சிஸ்டம்ஸ் பி. லிட். | 6,668 |
| 2 | சயின்டிபிக் பப்ளிஷிங் நிறுவனம் | 30,250 |
| 3 | ஊரம் டெக்னாலஜி சொலுஷன்ஸ் பி. லிட். | 5,976 |
| 4 | விடார்ட் டெக்னாலஜிஸ் | 3,643 |
| 5 | பேரிடர் மீட்பு மையம் | 5,963 |
| 6 | ஜிஐ டெக் கேமிங் கோ. இண்டியா பி. லிட். | 4,919 |
| 7 | விஆர் டெல்லா ஐடி சர்வீசஸ் பி. லிட். | 2,541 |

இந்த எல்கோசெஸ்சில் உள்ள கட்டடத்தில் 100% ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



படம் - 9

### 2.2.6 எல்கோசெஸ் - கங்கைகொண்டான், திருநெல்வேலி

திருநெல்வேலி கங்கைகொண்டான் கிராமத்தில் 500 ஏக்கர் நிலப்பரப்பளவிற்கு ஒரு எல்கோசெஸ் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் 290 ஏக்கர் பரப்பளவிற்குச் சிறப்புப் பொருளாதார மண்டல அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளது. 56,720 சதுர அடி கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்ப கட்டடம் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை

உருவாக்குவதற்கு ₹55.88 கோடியை எல்கோசெஸ் முதலீடு செய்துள்ளது.

- இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் 3 நிறுவனங்களுக்குக் குத்தகை அடிப்படையில் 112 ஏக்கர் நிலம் ஒதுக்கீடும் மற்றும் 25 ஏக்கர் நிலம் சிறப்புப் பொருளாதார மண்டல அந்தஸ்து அல்லாத இடத்தில் ஒரு நிறுவனத்திற்கும் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அ) சிறப்புப் பொருளாதார மண்டலம்**

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | சின்டெல் இன்டர்நேஷனல் பி.லிட் | 100 |
| 2 | சதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ் லிட். | 10 |
| 3 | டெக்கான் ஐ சர்வீசஸ் | 2 |

### ஆ) சிறப்புப் பொருளாதார மண்டலம் அல்லாத பகுதி

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | ஏ அன்ட் டி காஸ்மிக் பவர் | 25 |




படம் - 10

### 2.2.7 எல்கோசெஸ்- ஜாகீர்அம்மாபாளையம், சேலம்

சேலம் ஜாகீர்அம்மாபாளையம் கிராமத்தில், 164.26 ஏக்கர் நிலப்பரப்பளவிற்கு ஒரு எல்கோசெஸ் உருவாக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 53.33 ஏக்கர் நிலப்பரப்பளவிற்கு உட்கட்டமைப்பு வசதிகள்

ஏற்படுத்தப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 110.93 ஏக்கர் நிலம் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்க ஏதுவாக இல்லாத காரணத்தினால் தமிழக அரசுக்குத் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. 62,000 சதுர அடி கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்ப கட்டடம் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள், ஆகியவற்றைக் கட்டுவதற்காக ₹37.58 கோடியை எல்கோசெஸ் முதலீடு செய்துள்ளது.

- இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் 8 நிறுவனங்களுக்குக் குத்தகை அடிப்படையில் 31.62 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. | டி.பி.பிரொபஷனல் | 3 |
| 2. | மகிமா டெக்னாலிஜிஸ் பி.லிட் | 3 |
| 3. | வீ. டெக்னாலிஜிஸ் | 9.49 |
| 4. | ஜி.டி.பி இன்ஃபோடெக் சொலுஷன்ஸ் லிட். | 2.5 |
| 5. | செனோவெட் இன்ஃபோடெக் பி.லிட் | 1.25 |

| | | |
|---|---|---|
| 6. | தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் | 7.88 |
| 7. | இ-முத்ரா லிட். | 2.5 |
| 8. | சாஸ்தா டெக் சொலுஷன்ஸ் பி. லிட். | 2 |

- இந்த எல்கோசெஸ்சில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஒரு தகவல் தொழில்நுட்ப நிறுவனம், 20,000 சதுர அடியில் தகவல் தொழில்நுட்ப கட்டடம் கட்டி 300 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றது.

- இந்த எல்கோசெஸ்சில் 62,000 சதுர அடி கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்ப கட்டடத்தில் பின்வரும் 3 நிறுவனங்களுக்கு 17,510 சதுர அடி இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்)** | **இட ஒதுக்கீட்டின் அளவு (சதுர டியில்)** |
|---|---|---|
| 1 | செனோவெட் இன்ஃபோடெக் பி.லிட். | 3500 |
| 2 | மெம்சிஸ் டெக்னாலஜிஸ் பி. லிட், சேலம் | 3448 |
| 3 | ஈ.ஆர்.பி லாஜிக் (இந்தியா) பி. லிட். | 10562 |





படம் - 11

### 2.2.8 எல்கோசெஸ்- விஸ்வநாதபுரம், ஓசூர்

ஓசூர் விஸ்வநாதபுரம் கிராமத்தில், 174.47 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு எல்கோசெஸ் உருவாக்கப் பட்டுள்ளது. 62,000 சதுர அடி கொண்ட தகவல் தொழில்நுட்ப கட்டடம் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை கட்டுவதற்காக ₹41.75 கோடியை எல்கோசெஸ் முதலீடு செய்துள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் 3 நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் 15 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | ஓகாயா இன்போகாம் பி. லிட். | 10 |
| 2 | சி.ஆர்.எம். ஐ.டி.சொல்யூஷன்ஸ் பி. லிட். | 3 |
| 3 | சி.ஆர்.எம் இன்போடெக் இந்தியா பி. லிட். | 2 |





படம் - 12

## 2.3. தொழில்முனைவோர் மையம், சென்னை மற்றும் கோயம்புத்தூர்

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை வழங்கும் நிறுவனங்களில் மனித வள மேம்பாட்டினை உயர்த்த, எல்காட் நிறுவனம், சென்னையிலுள்ள டைடல் பார்க்கில் 90 இருக்கை வசதி கொண்ட தொழில்முனைவோர் மையத்தை அமைத்துள்ளது.

இதில் தற்போது 17 நிறுவனங்கள் இயங்கி வருகின்றன மற்றும் 13 நிறுவனங்கள் வெற்றிகரமாக உருவாக்கப்பட்டு தொடக்க நிலையிலிருந்து விடுபட்டு தொழில்முனைவோர் மையத்திலிருந்து வெளியேறி உள்ளன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி 50 இருக்கை வசதி கொண்ட ஒரு தொழில்முனைவோர் மையம் ₹2.07 கோடி முதலீட்டில் டைடல் பார்க் கோயம்புத்தூர் லிட், கோயம்புத்தூரில் வாடகை அடிப்படையில் நிறுவப்பட உள்ளது. இந்த

தொழில்முனைவோர் மையத்திற்கு 'நாஸ்காம்' நிறுவனம் ஒரு அறிவுசார் பங்குதாரராகச் செயல்படும்.



படம் - 13

## 2.4. சோழிங்கநல்லூர் எல்கோசெஸ்ஸில் ஒரு தகவல் தொழில் நுட்ப கட்டடம் அமைத்தல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி சோழிங்கநல்லூரில் உள்ள எல்கோசெஸ்ஸில் 2.33 இலட்ச சதுர அடியில் ₹84.42 கோடி மதிப்பீட்டில் தகவல் தொழில்நுட்ப கட்டடம் கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதல், அரசு ஆணை எண் 18, தகவல் தொழில்நுட்பவியல் துறை, நாள் 9.10.2017ல் வெளியிடப்பட்டது. இதற்கான விரிவான திட்டம் மற்றும்

ஒப்பந்தபுள்ளி படிவம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதற்கான ஒப்பந்தபுள்ளி விரைவில் கோரப்பட உள்ளது.

## 2.5. கிராமப்புற வணிக வெளிப் பணி மையங்கள் (RBPO)

மேம்படுத்தப்பட்ட வணிக வெளிப்பணிக் கொள்கை-2012, 01.06.2012 அன்று வெளியிடப்பட்டது. அதிக எண்ணிக்கையிலான தொழில்முனைவோர்களை ஈர்த்து கிராமப்புற பகுதிகளில் புதிய வணிக வெளிப்பணி மையங்கள் அமைத்து, அதன் மூலம் தமிழ்நாட்டில் கிராமங்களின் தொழில்நுட்ப வளர்ச்சியை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும். மேலும், நகரங்கள் மற்றும் கிராமங்கள் இடையே ஒரு இணைப்பு பாலமாக இருந்து கிராமப்புற முன்னேற்றத்தை ஊக்குவிக்கிறது.

சமுதாய மற்றும் பொருளாதார வசதிகளில் பின் தங்கியுள்ள தகுதி வாய்ந்த கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புகள் வழங்கி அதன் மூலம் அவர்கள் நகரங்களுக்குக் குடிபெயராமல் இருக்க

செய்வது இந்த கொள்கையின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும்.

வணிக வெளிப்பணி நிறுவனங்கள்/ தொழில் முனைவோர்கள், கிராம பஞ்சாயத்துகளில் அமைந்துள்ள சொந்த / வாடகை வளாகத்தில் அல்லது கல்வி நிறுவனங்களில் அவர்களது கிராமப்புற வணிக வெளிப்பணி மையங்களை நிறுவ இம்மையம் ஊக்கப்படுத்துகிறது.

ஒவ்வொரு கிராமப்புற வணிக வெளிப்பணி மையத்திற்கும் அதிகபட்சமாக ₹5 இலட்சத்திற்குட்பட்ட மூலதன மானியமும் (வன்பொருள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்) ₹2.25 இலட்சத்திற்குட்பட்ட பயிற்சி மானியமும் அளிப்பதற்கு இக்கொள்கையில் வழிவகை உள்ளது. இக்கொள்கையின்படி மானியம் பெற ஒவ்வொரு கிராமப்புற வணிகவெளிப்பணி மையமும் குறைந்தபட்சம் 50 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும்.

எல்காட் நிறுவனத்தின் வழிகாட்டுதல் மற்றும் ஒத்துழைப்புடன் திருவாளர் சதர்லேண்ட் குளோபல்

சர்வீஸஸ், தங்களது கிராமப்புற வெளிப்பணி மைய நிறுவனத்தை நாவலூர் - குட்டப்பட்டு கிராமம், திருவரங்கம், திருச்சி மாவட்டத்தில் அமைத்து, அது முன்னாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 03.06.2013-ல் திறந்து வைக்கப்பட்டது.

**2.6. கொள்முதல் பிரிவு**

அரசுத் துறைகளுக்குத் தகவல் தொழில்நுட்பப்பிரிவு சார்ந்த வன்பொருள்களைத் துறைகளுக்குக் கொள்முதல் செய்யவும் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளை வழங்கவும், விருப்பக் கொள்முதல் முகமையாக எல்காட் நிறுவனத்தை தமிழக அரசு நியமித்துள்ளது. எல்காட் நிறுவனம் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வன்பொருள்களை மூலக்கணினிகள் (Servers), மேசைக்கணினிகள் (Desktop Computers), மடிக்கணினிகள் (Laptop Computers), அச்சுப்பொறிகள் (Printers), ஒளிஉணரி (Scanner) தடையில்லா மின்சாதனம் (UPS), படவீழ்த்தி (Projector),

திறன்பேசி (Smart Phone), தகவல் தொழில்நுட்ப நுகர்வுப் பொருட்கள் (IT Consumables) மற்றும் அனைத்து வலையமைப்பு சார்ந்த கருவிகளை (Network Devices) மலிவான விலையில் கொள்முதல் செய்து பல துறைகளுக்கும் வழங்கி வருகிறது.

மேலும் எல்காட் நிறுவனம் இணைய நெறி முறை சார்ந்த ஒளிப்படக் கண்காணிப்புக் கருவி (IP Camera Surveillance System), மற்றும் சிறப்புப் பொருட்களான ஊர்தி கண்காணிப்பு முறை (Vehicle Monitoring System), தொலை மருத்துவ உபகரணங்கள் (Telemedicine Equipments) முதலியவற்றைக் கொள்முதல் செய்து வழங்கி வருகிறது.

எல்காட் நிறுவனம், அனைத்து தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த உற்பத்திப் பொருட்களை முக்கிய அரசுத் துறைகளான வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நில அளவை மற்றும் நிலத்தீர்வைத் துறை, பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை, போக்குவரத்துத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்

துறை, வனத்துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, வேளாண்மை துறை, பள்ளிக் கல்வித் துறை, உயர்கல்வித் துறை, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், பெருநகர சென்னை மாநகராட்சி, அரசு கேபிள் டிவி நிறுவனம், சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் தமிழகத்திலுள்ள அனைத்து நீதி மன்றங்கள், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை போன்ற நிறுவனங்களுக்கு வழங்கி வருகிறது.

மின்ஆளுமை திட்டத்தின் மூலம் அறிவிக்கப்படும் அரசின் அனைத்து திட்டங்களுக்கும் தேவையான மின்னணு உபகரணங்கள் (மின்னணு வருகைப் பதிவேடு மற்றும் ஆதார் இணைப்பு, ஆதார் வழி விரல் ரேகை பதிவு சாதனங்கள்) அனைத்தும் விலைப்புள்ளி ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொள்முதல் செய்து வழங்கப்பட்டு வருகின்றன.

## 2.7. மடிக்கணினி வழங்கும் திட்டம்

மாநிலத்தில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்குச் சிறந்த திறன்களைப் பெறுவதற்கு தமிழ்நாடு அரசு இலவச மடிக்கணினி வழங்கும் திட்டத்தை செயல்படுத்துகிறது. இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், 15.09.2011-ல் தொடங்கி வைக்கப்பட்டது.

| **வரிசை எண்** | **கல்வி ஆண்டு** | **வழங்கப்பட்ட மடிக்கணினிகள் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | 2011-12 | 8,98,866 |
| 2 | 2012-13 | 7,56,000 |
| 3 | 2013-14 | 5,65,000 |
| 4 | 2014-15 | 4,96,999 |
| 5 | 2015-16 | 5,19,029 |
| 6 | 2016-17 | 5,58,238 |

ஏழாவது கட்டமாக, 2017-18 கல்வி ஆண்டுக்காக, அரசு ஆணை வழங்கப்பட்டு, போட்டித் தேர்வுகள் எழுதுவதற்குப் பதிவு செய்தவர்கள் உட்பட 42,473

மாணவர்களுக்கு மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. மேலும், 4.73 இலட்சம் மடிக்கணினிகள் கொள்முதல் செய்ய உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிகள் ஜூன் 2018-க்குள் கோரப்பட்டு, வழங்கும் பணி செப்டம்பர் 2018 முதல் தொடங்கும்.

## 2.8. மின்-ஆளுமை

தமிழக அரசு துறைகள் மற்றும் தமிழக அரசு நிறுவனங்களில், மின்னணுச் சார்பு இடைவெளியைக் குறைப்பதிலும், தகவல் தொழில்நுட்பங்களை விரிவுபடுத்துவதிலும் முக்கிய ஊக்கியாக எல்காட் செயல்பட்டு வருகிறது. எல்காட், அரசு துறைகளுக்கு, தகவல் தொழில்நுட்ப தீர்வு மற்றும் ஆதரவு சேவைகள் வழங்குவதால் துறைகளுக்கு இடையேயும் மற்றும் துறைகளுக்கு உள்ளேயும் செயல்திறன் மேம்படுத்தப்பட்டு குறுகிய கால அளவில், குடிமக்களுக்குச் சேவைகள் சிறப்பாகக் கிடைக்க வழி வகுக்கிறது. அரசு துறைகள் தடைகளற்ற சேவைகள் வழங்குவதற்கு ஏதுவாக எல்காட்,

திட்டத்தின் தொடக்கத்தில் இருந்தே, துறைகளின் வெவ்வேறு நடவடிக்கை தேவைகளை ஆய்வு செய்து திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தும் வரை ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது. வசதி மேலாண்மை சேவைகளையும் (FMS) வழங்கிவருகிறது.

### 2.8.1.. முக்கிய மின்-ஆளுமை திட்டங்கள்

| வ. எண் | திட்டப்பணி பெயர் மற்றும் துறையின் பெயர் | திட்ட செலவு மற்றும் நோக்கம் |
|---|---|---|
| 1 | இணைய மின்தூக்கி உரிமம் மேலாண்மை அமைப்பு மற்றும் ஜெனரேட்டர் மூலம் உற்பத்தி செய்த மின்சாரத்திற்கான வரி வசூல் செய்தல் தமிழ்நாடு அரசு மின்ஆய்வு துறை. | ₹13,87,000 - இந்த வலைதளம் மின் தூக்கி உரிமம் வழங்குதல் மேலும் ஜெனரேட்டர் வாயிலாக உற்பத்தி செய்த மின்சாரத்திற்கான வரி செலுத்தவும் உதவுகிறது. |

| | | |
|---|---|---|
| 2 | ஒருங்கிணைந்த இணைய மென்பொருள் விதை சான்றிதழ் மற்றும் அங்ககச் சான்றிதழ் துறை கோயம்புத்தூர் | ₹11,40,000 - இந்த மென்பொருளானது பல்வேறு விதைகளின் உற்பத்தி விவரம் (விதை வகை, பயிரிடப்பட்ட பரப்பளவு, பயிரிடப்பட்ட நாள், விதை மூலம் உள்ளிட்ட விதைப்பு அறிக்கை) விளை நிலங்கள் மற்றும் விதைகளை ஆய்வு செய்தல் போன்ற நடவடிக்கைகளைக் கண்காணித்தல், ஆய்வின் அறிக்கை அடிப்படையில் விதைகளை வகைப்படுத்தி சான்றிதழ் வழங்கவும் வழிவகை செய்கிறது. |
| 3 | இணையதள பண்ணை மேலாண்மை அமைப்பு தோட்டக்கலை இயக்குநரகம் | ₹7,47,000 - 18 பூங்காக்களிலும், 50 பண்ணைகளிலும் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளைக் |

| | | |
|---|---|---|
| | | (நாற்றுகள் உற்பத்தி, உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் விற்பனை) கண்காணிக்க வழிவகை செய்கிறது. |
| 4 | இணையதள மென் பொருள் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரகம் | ₹27,88,075 - புதிய தொழிற்சாலைகள் நிறுவுவதற்கான திட்ட ஒப்புதல், உரிமம் வழங்குதல் மேலும் நிறுவப்பட்ட தொழிற்சாலைகளுக்கு உரிமம் புதுப்பித்தல் ஆகியவற்றைச் செய்ய இந்த மென்பொருள் வழிவகை செய்கிறது |
| 5 | தானியங்கி கட்டிடத் திட்ட ஆய்வு மற்றும் ஒப்புதல் அமைப்பு. நகர மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநரகம் | ₹49,20,016 e-Development Control Regulations (e-DCR) என்பது கட்டிடத் திட்ட வரை படங்களைக் கட்டுபாட்டு விதிகளுக்கு உட்படுத்தி தானியங்கி ஆய்வு மற்றும் ஒப்புதல் அளிக்கவல்ல தனித்துவமான தீர்வாகும். |

| | | |
|---|---|---|
| 6 | புவியியல் தகவல் அமைப்புடன் (GIS( ஒருங்கிணைக்கப் பட்ட வலை அடிப்படையிலான மெய்நிகர் சுற்றுலா தமிழ்நாடு தொல்லியல் துறை | ₹24,44,024 - தமிழகத்தின் தொல்லியல் முக்கியத்துவம் பெற்ற 75 நினைவுச் சின்னங்களான கோயில்கள், சுற்றலா தளங்கள், கோட்டைகள், கல்வெட்டுகள், சித்திரங்கள் மற்றும் கல்லறைகள் போன்றவைகளில் மெய்நிகர் சுற்றுலா உருவாக்கப்பட்டு இணைய தளத்தில் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது. |

### 2.8.2. அரசாங்கத் துறைகளுக்கு உருவாக்கப்பட்ட இணையதளங்கள்

- பள்ளிக்கரணை சதுப்பு நில பாதுகாப்புத் துறை
- தமிழக வனத்துறை
- தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை
- நிதித் (BC) துறை

- தமிழ்நாடு கட்டுமான வளர்ச்சி வாரியம்
- ஆதிதிராவிடர் நல வாரியம்
- தொல்லியல் துறை
- அரசு அருங்காட்சியகம்

**2.8.3. ஆதார் நிரந்தர பதிவு மையம் (PECs)**

ஆதார் பதிவு செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்காக எல்காட் நிறுவனம், இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் (Unique Identification Authority of India (UIDAI)) அங்கீகாரத்துடன் செயல்படுகிறது. எல்காட் கீழ்க்கண்ட 217 நிரந்தர ஆதார் பதிவு மையங்களைக் கொண்டுள்ளது:

- மாவட்ட ஆட்சியர் அலுவலகம் - 32
- மாநகராட்சி தலைமையகம் - 11
- மாநகராட்சி மண்டல அலுவலகம் - 45
- நகராட்சி அலுவலகம் - 124
- பேரூராட்சி அலுவலகம் - 3
- வருவாய் கோட்ட அலுவலகம் – 2

இந்த மையங்கள் 03.10.2016 முதல் இயக்கப்பட்டு தற்போது குடிமக்களுக்குப் பின்வரும் சேவைகளை வழங்குகிறது:

- ஆதார் பதிவு
- 5 வயது நிரம்பியவுடனும், 15 வயது நிரம்பியவுடனும் கட்டாயமாக, கைரேகை மற்றும் கருவிழி பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல்
- ஏனையோருக்கும் கைரேகை மற்றும் கருவிழி பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல்
- பெயர், முகவரி, தொலைபேசி எண் திருத்தம்
- ஆதார் நகல் அச்சிடல்
- ஆதார் விவரம் தேடுதல்

மேற்கண்ட 6 சேவைகள் மூலம் ஒரு நாளைக்கு 6000 முதல் 8000 குடிமக்கள் பயன்பெறுகிறார்கள். இந்தச் சேவைகள் Enrolment Client Multi Protocol (ECMP) மற்றும் Update Client Lite (UCL) மூலம் வழங்கப்படுகிறது.

31.03.2018 வரையிலான பரிவர்த்தனை எண்ணிக்கை பின்வருமாறு:

| வ. எண் | விளக்கம் | பரிவர்த்தனை எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஆதார் பதிவு | 12,11,793 |
| 2 | ஆதார் திருத்தம் | 9,61,033 |
| மொத்தம் | | **21,72,826** |

**2.8.4. வெளிப்படை அரசு தரவு தளம்**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்ப துறை அமைச்சர், சட்டப்பேரவையில் 2017-2018 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை கூட்டத்தொடரில் 'தமிழக அரசின் நலத்திட்டங்களின் தரவு தொகுப்புகளைப் பகிர்ந்து கொள்ளவும், இந்தத் தரவுகளைப் பயன்படுத்தி மென்பொருள் போட்டிகளை நடத்தவும் வெளிப்படை அரசுத் தரவு தளத்தை அனைத்து தமிழக அரசு துறைகளிலும் செயல்படுத்துதல் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

இம்முனையத்தின் செயல்பாட்டிற்காக, இரண்டு வருடங்களுக்கு, அரசாணை எண் 21, நாள் 24.11.2017 மூலமாக, தமிழக அரசு, ₹2.12 கோடி நிர்வாக ஒப்புதல் வழங்கி, முதல் ஆண்டு செயல்பாட்டிற்கென ₹1.06 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

அரசுத் துறைகள் மற்றும் தமிழக அரசு நிறுவனங்களில் சேகரிக்கப்பட்ட தரவுத் தொகுப்புகள், ஆவணங்கள், சேவைகள், மென்பொருள் கருவிகள் மற்றும் செயலிகளைப் பொது மக்களின் பயன்பாட்டிற்காக வெளியிடுவதே இந்த வெளிப்படை அரசு தரவு முனையத்தின் சீரிய நோக்கமாகும். இந்த அரசு தரவு தளம் உருவாக்கப்பட்டு https://tn.data.gov.in/ என்னும் இணைய முகவரியில் (URL) இயங்கி வருகிறது.

ஆரம்பக்கட்டமாக 118 துறைகளிலிருந்து 240 அரசு அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு பணிமுகாம் சென்னையில் 11.10.2017 அன்று நடத்தப்பட்டது. 20.03.2018 அன்று வரை, 64 துறைகளிலிருந்து முதன்மை தரவு அலுவலர்கள் பதிவு

செய்துள்ளனர். 17 அரசுதுறைகளின் 486 வெவ்வேறு தரவுத் தொகுப்புகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. மேலும் அடுத்தடுத்த மறு ஆய்வு கூட்டங்கள், உடனடி பகிரப்படக்கூடிய தரவுகளைச் சேகரிப்பதற்காக நடத்தப்பட்டு வருகின்றன.

### 2.8.5. இளைஞர்கள் மற்றும் தொழில் முனைவோருக்கான மேகக்கணினி மற்றும் இணையப் பதிவேற்றச் சேவைகள்

தமிழக அரசு, இளைஞர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் பயனடையும் பொருட்டு, கட்டணமின்றி சுயசேவை முறையில் இணையப் பதிவேற்றச் சேவைகளைச் செய்து கொள்ள மேகக்கணினி சேவையைச் செயல்படுத்தியுள்ளது.

**மேகக்கணினி:**

வியத்தகு முறையில் எளிமைப்படுத்தப்பட்ட கட்டமைப்பு மற்றும் கணினி வளங்களைப் பகிர்ந்து கொள்ள, மேகக்கணினி சேவையானது உறுதி செய்கிறது.

இத்திட்டத்தின் இரண்டு முக்கிய நன்மைகள்:

1. எளிய பயன்பாடு
2. பயன்மிகு கட்டணம்

- இத்திட்டமானது உட்கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கிய சேவையகம், சேமிப்பு செய்வதற்கான கணினி சேவைகள் ஆகியவற்றை வழங்குகிறது.
- இந்தத் திறமூல இயங்குதளமானது திறமூல மென்பொருள்களான BOSS, Ubuntu மற்றும் CentOS ஐ வழங்குகிறது.
- இந்த மேகக்கணினியானது திறந்த அடுக்குகள் அடிப்படையிலான 'மேகதூத்' திறந்த வள மேகக்கணினி சூழலில் உருவாக்கப்பட்டுள்ளது.
- மாணவர்கள் தாங்கள் உருவாக்கிய மென்பொருளை வழங்கப்பட்டுள்ள இந்த மேகக்கணினியில் நிறுவலாம்.

- இந்தச் சேவைகளை www.tnstudentcloud.elcot.in என்ற வலைமுகவரி மூலம் பெற முடியும்.
- 01.03.2018 இருந்து இதுவரை 100 மாணவர்கள் பதிவு செய்து, இந்த மேகக்கணினி சேவையைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

**2.8.6. மின்னணு (இ-ஸ்மார்ட்) வகுப்பறை**

இ-ஸ்மார்ட் வகுப்பறை தற்போதைய கற்பிக்கும் முறை பயிற்சிகள் மற்றும் கற்றுக் கொள்ளும் சூழல் ஆகியவற்றில் முன்னுதாரண மாற்றத்தை அறிமுகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இ-ஸ்மார்ட் வகுப்பறை ஆசிரியர்கள், மேம்படுத்தப்பட்ட கற்பிக்கும் முறைகளைப் பல்லூடக (Multimedia) துணை கொண்டு தமிழ் மற்றும் ஆங்கிலத்தைச் சிறந்த முறையில் கற்றுக் கொடுக்கிறார்கள்.

இ-ஸ்மார்ட் வகுப்பறை திட்டம், வன்பொருள், மென்பொருள், ஊடாடும் வெண்திரை, பல்லூடக தொகுப்பு


ஆகியவற்றை வழங்கி நிர்மாணம் செய்து செயல்படுத்தப்படுகிறது. மேலும் உயர்நிலைப் பள்ளிகள் / மேல்நிலைப் பள்ளிகள் / உண்டு உறைவிடப்பள்ளிகள் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி, மூன்று வருடத்திற்கும் அதற்கு மேற்பட்ட காலத்திற்கும் வன்பொருள் (Hardware) பராமரிப்பு மற்றும் அவ்வப்போது அரசு பரிந்துரைக்கும் பாடத் திட்டத்திற்கு ஏற்ப பல்லூடகத் தொகுப்புகளை மேம்படுத்துவது / மாற்றியமைப்பது ஆகியவை இத்திட்டத்தில் அடங்கியுள்ள செயல்முறைகள். எல்காட் e-Smart Class Room (e-SCR) என்றழைக்கப்படும் இ-ஸ்மார்ட் திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் 231 பள்ளிகளில் ஆறு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்குச் செயல்படுத்தியுள்ளது. இத்திட்டமானது கணினி சார்ந்த சேவைகள் பெறுதலில் நிலவிய பிளவுகளை வெற்றிகரமாக இணைத்துள்ளது.

**மாணவர்களுக்கான பயன்கள்:**

- புதிய மற்றும் புதுமையான வகையில் கற்றுக் கொள்ளும் சூழலை உருவாக்குவது
- தொடுதிரை மற்றும் தொடுபலகை ஆகிய மேம்படுத்தப்பட்ட புதிய தகவல் தொழில்நுட்பங்களுடன் பணியாற்றுவது
- மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான முறையில் கற்றுக்கொள்வது மேலும் பாடசம்மந்தமான அறிவை ஆழமாக மேம்படுத்திக் கொள்வது
- முப்பரிமான படங்கள் மற்றும் அனிமேஷன் உதவியுடன் பாடத்திட்டத்தை எளிதாக புரிந்து கொள்வது
- மாணவர்களின் நவீன தகவல் தொழில்நுட்பத் திறன் மற்றும் செயல்திறனை மேம்படுத்திக் கொள்வது

**ஆசிரியர்களுக்கான பயன்கள்:**

- பலவிதமான கற்பித்தல் முறைகளையும், சிக்கல் தீர்க்கும் திறன்களையும் பெறுவது மற்றும் புதுமையான தொழில்நுட்பத்திற்குப் பழகுவது
- தன்னியல்பான விநாடி வினா நடத்துவது மற்றும் பல்லூடகங்கள் (Multimedia) மற்றும் படங்களுடன் கூடிய தேர்வுகளைத் திட்டமிடுவது
- மாணவர்களுக்கேற்ற வகையில் கற்பிக்க உதவுவது
- ஆசிரியர்கள் பாடத்திட்டத்தைப் பகிர்ந்து கொள்வது, பாடங்களைத் திட்டமிடுவது, தேர்வுகள் மற்றும் அறிக்கைகளை உடனடியாக தயார் செய்வது




## ஆங்கில வழிப் பாட பொருளடக்கம்

**படம் - 14**




## தமிழ் வழிப் பாட பொருளடக்கம்

**படம் - 15**

### 2.8.7. பயிற்சி

2007 ஆம் ஆண்டிலிருந்து, தமிழக அரசின் துறைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்குக் கணினி சார்ந்த பயிற்சி வழங்கி வருவதில் எல்காட் பெரும்பங்கு வகிக்கிறது. மேலும், இதற்காக எல்காட், பெருங்குடி, சென்னையில் 75 நபர் அமர்ந்து பயிற்சி பெறும் வகையிலும், மாவட்டங்களில் 15 நபர் அமர்ந்து பயிற்சி பெறும் வகையிலும், போதுமான கட்டமைப்பு வசதிகளைச் செய்துள்ளது.

- பயிற்சியாளரைப் பயிற்றுவித்தல் திட்டத்தின் மூலமாக, windows மற்றும் Linux இயக்கிகள் (Suse Linux, BOSS, etc.,) பயன்பாட்டு மென்பொருள் ஆகியவற்றிற்கு விரிவான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பயிற்றுநருக்குப் பயிற்சி திட்டத்தின் மூலமாகப் பயன்பாட்டு மென்பொருள் பயிற்சி வழங்கப்படுகிறது. பயிற்சி நிறைவுறும் பொழுது, அப்பயிற்சியில் கலந்து

கொண்டோருக்குத் சான்றிதழ் வழங்கப்படுகிறது. குறிப்பிட்ட பயன்பாட்டு மென்பொருள்களுக்குப் பயிற்சி வழங்குவதற்காக அந்தந்தத் துறைகளுக்கு ஏற்ற கட்டமைப்பு வசதிகளையும் வழங்கி வருகிறது. தமிழ்நாடு மாநிலம் முழுவதிலும் பல்வேறு அரசுத் துறைகளிலிருந்து இதுவரை 1,17,726 பேர் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர்.



மதுரை மாவட்டத்தில் உள்ள எல்காட் பயிற்சி மையத்தில், நகர மற்றும் ஊரகமைப்பு துறையினருக்கு பயிற்சி வழங்குதல்

**படம் – 16**

## 2.9. தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு

தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு என்பது தகவல் தொழில்நுட்ப சேவைகளையும், பராமரிப்பையும் வழங்கும் அடித்தளம் / கட்டமைப்பு ஆகும். இது அனைத்து வன்பொருள், மென்பொருள், வலையமைப்பு, பயன்பாடுகள் மற்றும் தரவுத்தளங்களின் ஒருங்கிணைந்த கட்டமைப்பு ஆகும். அதிகரித்து வரும் தகவல் தொழில்நுட்ப சூழ்நிலையில், பெரும்பாலான அரசு துறைகள் தங்கள் சேவைகளைத் தகவல் தொழில்நுட்ப செயல்முறைகளின்படி வழங்கி பராமரித்து வருகின்றன.

பல அரசு துறைகளின் டிஜிட்டல் முறை நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்து, தடையற்ற ஆன்லைன் சேவைகளை உறுதிப்படுத்துவதற்கான தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புகளைத் தமிழக அரசு நிறுவியுள்ளது.

எல்காட் நிறுவனம் வாயிலாக கீழ்க்கண்ட தகவல் கட்டமைப்புகளைத் தமிழக அரசு நிறுவி செயல்படுத்தி வருகிறது.

| திட்டவிவரம் | செயல் படுத்தப் பட்ட நாள் | திட்ட மதிப்பீடு |
|---|---|---|
| **தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு** (TNSWAN)<br>➢ செங்குத்து இணைப்பு<br>➢ கிடைமட்ட இணைப்பு<br>➢ பதிலி இணைப்பு | 01.12.2007 | பிரிவு 2.9.1.1-ல் உள்ள அட்டவணை யின்படி |
| **தமிழ்நாடு மாநிலத் தரவு மையம்** (TNSDC)<br>➢ தமிழ்நாடு மாநிலத் தரவு மையம்-1<br>(42 அடுக்குகள் கொண்ட வசதி - 1300 சதுர அடியில்) | 01.08.2011 | முதல் நிலை<br>(2011-2017)<br>₹60.80 கோடி<br>இரண்டாம் நிலை<br>(2017-2022)<br>₹77.23 கோடி |
| ➢ தமிழ்நாடு மாநிலத் தரவு மையம்-1 – BSNL தரவு மையத்திற்கு நீட்டிப்பு<br>(25 அடுக்குகள்) | 09.07.2015 | |
| ➢ தமிழ்நாடு மாநிலத் தரவு மையம்-1 விரிவாக்கம்<br>(21 அடுக்குகள் கொண்ட வசதி - 700 சதுர அடியில்) | 01.03.2016 | |

| திட்டவிவரம் | செயல் படுத்தப் பட்ட நாள் | திட்ட மதிப்பீடு |
|---|---|---|
| ➢ தமிழ்நாடு மாநிலத் தரவு மையம்-2 (195 அடுக்குகள் கொண்ட வசதி - 5000 சதுரஅடியில் – முன்னேற்ற மாதிரி) | பணிகள் நடைபெற்று வருகின்றன | ₹40.00 கோடி |
| **பேரிடர்மீட்பு மையம்-திருச்சி**<br>➢ முழுமையான பேரிடர் மீட்பு மையம்<br>(2750 சதுர அடி சர்வர் பண்ணை)<br>50 அடுக்குகளிலிருந்து 100 அடுக்குகள் வரை விரிவாக்கம் | 09.02.2018 | ₹59.85 கோடி |
| **தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் சார்ந்த திட்டங்கள்**<br>➢ தேசியத் தரவு மையம், புனே வாயிலாக பேரிடர் மீட்பு பணிகள் | 12.05.2015 | -- |
| ➢ தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் மேகக்கணினிய அமைப்பு | 01.03.2016 | ₹11.39 கோடி |
| ➢ அருகாமை பேரிடர் மீட்பு மையம், பிஎஸ்என்எல் (BSNL), சென்னை | 20.06.2016 | ₹5.00 கோடி |
| ➢ தமிழக அரசுத் துறைகளுக்கான மின்னஞ்சல் தீர்வு | 15.09.2015 | ₹78.25 இலட்சம் |

### 2.9.1. தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு

#### 2.9.1.1. பின்புலம்

இந்திய அரசாங்கம் மாநில பெரும்பரப்பு வலையமைப்பை நாடு முழுவதும் நிறுவுவதற்கான திட்டத்திற்கு 31.3.2005 அன்று ஒப்புதல் அளித்தது. இந்த திட்டத்தின் கீழ் மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களின் தலைமையகங்களை, மாவட்டங்கள் வாயிலாக வட்டார வளர்ச்சி அலுவலகங்களுடன் மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் செங்குத்து (vertical) இணைப்பு மூலம் இணைப்பதற்கான தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு, தேசிய மின்னாளுமைத் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள மின்னாளுமை கட்டமைப்புகளுள் ஒன்றாகும். தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு, மத்திய மாநில அரசுகளின் பங்கேற்புடன் நிறுவப்பட்டுள்ளது.


தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு தனது செயல்பாட்டினை 01.12.2007 அன்று தொடங்கி

வெற்றிகரமாக பதினோறாவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

| விவரம் | காலம் | செலவினம் (₹கோடியில்) | |
|---|---|---|---|
| முதலாம் கட்டம் (5 ஆண்டுகள்) | 01.12.2007 முதல் 30.11.2012 வரை | 140.25 | இந்திய அரசு – ₹55.73 மாநில அரசு – ₹84.52 |
| இடைக்கால செயற்பாடுகள் (9 மாதங்கள்) | 01.12.2012 முதல் 08.09.2013 வரை | 16.42 | இந்திய அரசு - ₹7.51 மாநில அரசு - ₹8.91 |
| இரண்டாம் கட்டம் Phase-2 (3 ஆண்டுகள்) | 09.09.2013 முதல் 08.09.2016 வரை | 74.69 | மாநில அரசு - ₹74.69 |
| இடைக்கால செயற்பாடுகள் (interim period operations) | 09.09.2016 முதல் நாளது வரை | | நடைபெற்று கொண்டிருக் கிறது |

### 2.9.1.2. தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் மூன்றாம் கட்டம்

தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை சாராத வன்பொருள் மேம்பாட்டுடன் தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் மூன்றாம் கட்ட செயல்பாட்டை ₹443.64 கோடி மதிப்பில் நிறுவிட, ஒரு விரிவான திட்ட அறிக்கை நிர்வாக ஒப்புதலுக்காகவும் நிதிநிலை பெறுவதற்காகவும் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.




**தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் கட்டமைப்பு**

**படம் - 17**

### 2.9.1.3. தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் நோக்கம்

- மாநில அரசின் அனைத்து நிர்வாக நிறுவனங்களையும் வட்டார வளர்ச்சி / வட்டாட்சியர் அலுவலகங்களையும் ஒன்றிணைக்க ஒரு நம்பகமான மற்றும் பாதுகாப்பான இணைப்பினை வழங்கி, மாநில தரவு மையத்தில் இடம் பெற்றுள்ள மின் ஆளுமை பயன்பாடுகளை அணுகுவதற்கான உள்கட்டமைப்பை வழங்குதல்.
- அரசாங்க சேவைகள் உடனடியாக வழங்க ஏதுவாக, அரசுத் துறைகளுக்கிடையே தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கு வசதியளித்தல்.
- வலையமைப்பில் இணைக்கப்பட்ட அனைத்து அலுவலகங்களுக்கும் VoIP தொலைபேசி வாயிலாக குரல் இணைப்பு வழங்குதல்.
- மாவட்ட தலைமையகம், தலைமைச் செயலகம் மற்றும் பிற முக்கிய மையங்களுக்கிடையே காணொலி உரையாடல் வசதிகளைச் செயல்படுத்தி நேர்காணலில் விரயமாகும் பயண நேரம் மற்றும் செலவினத்தை வெகுவாக குறைத்தல்.

- வலையமைப்பின் பயனர்களுக்கு இணைய அணுகலை வழங்குதல்.


**2.9.1.4. .தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் வாயிலாக அரசு துறைகளுக்குப் வழங்கப்படும் சேவைகள்**

- பாதுகாப்பான அக-இணைய / இணைய சேவைகள்
- நெருங்கிய பயனர் குழு குரல் சேவைகள்
- காணொலி காட்சி சேவைகள்

**2.9.1.5. தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு செங்குத்து இணைப்பு** (vertical)

தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு 821 இருப்பு முனைகளை உள்ளடக்கியது. தலைநகரில் அமைந்துள்ள இருப்பு முனையானது இதர இருப்பு முனைகளை இணைக்கும் மையமாக உள்ளது. இவ்வலையமைப்பின் இயக்கு மையம் மாநில தலைநகரில் அமைந்துள்ள இருப்பு முனையில் அமைக்கப்பட்டுள்ளது. இதர இருப்பு முனைகள், தலைமைச் செயலகம், ராஜ்பவன், தமிழ்நாடு காவல் துறை இயக்குநர் அலுவலகம், சென்னை

மாநகர காவல் ஆணையர் அலுவலகம், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகம், பள்ளிக்கல்வி இயக்குநரகம், மருத்துவக்கல்வி இயக்குநரகம், எழிலகம், பனகல் மாளிகை, குறளகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், வருவாய்த்துறை அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், கோட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ளது.



**தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் இயக்க மையம்**

**(படம் – 18)**



**தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு அறை**

**(படம் – 19)**

**2.9.1.6. மாவட்ட தலைமையகங்களில் தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு மற்றும் தேசிய அறிவு வலைப்பின்னல் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு**

மத்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் (MeitY, GoI) வழிகாட்டுதல்கள்படி தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு மற்றும் National Knowledge Network (NKN) வலையமைப்பு ஆகியவை மாவட்ட தலைமையகங்கள்

அளவில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இந்த ஒருங்கிணைப்புக் காரணமாக, மாவட்ட தலைமையகங்களில் உள்ள அலைவரிசையை (Bandwidth) 34 Mbps / 100 Mbps / 1 Gbps தேவைக்கேற்ப அதிகரித்துள்ளது.

**2.9.1.7. கிடைமட்ட இணைப்பு (Horizontal connectivity)**

தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் இருப்பு முனைகளில் இருந்து பல்வேறு அரசு துறைகளுக்கு வழங்கப்படும் இணைப்பு கிடைமட்ட இணைப்பாகும். அரசுத் துறைகளுக்குக் குரல், தரவு, இணையம் மற்றும் வீடியோ போன்ற சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், அரசுத் துறைகள் மாநில தரவு மையத்தில் இடம் பெற்றுள்ள கணினி பயன்பாடுகளைப் பாதுகாப்பான முறையில் அணுகி மக்களுக்கான சேவைகளை வழங்க உதவுகிறது. இதுவரை 5000 க்கும் அதிகமான பல்வேறு அரசு துறை அலுவலகங்கள் தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு

வலையமைப்புடன் குத்தகை இணைப்பு (Leased Line Connectivity) அல்லது LAN வழியாக இணைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பில் வணிக வரித் துறை , பதிவுத் துறை, தமிழ்நாடு அரசு சுகாதார திட்டம் , கருவூலங்கள் மற்றும் கணக்குத் துறை, தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், பொதுப்பணித் துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை மற்றும் பல அரசுத் துறைகள் இணைக்கப்பட்டுள்ளன.

**2.9.1.8. தமிழ்நாடு பெரும் பரப்பு செங்குத்து வலையமைப்பிற்கான பதிலி இணைப்பு (Redundant Connectivity)**

மாவட்ட தலைமையகத்தில் (முதல் அடுக்கு-இருப்பு முனை) NKN / BSNL மூலம் அலைவரிசை வழங்கப்படுகிறது. தமிழ்நாடு பெரும் பரப்பு வலையமைப்பின் இறுதி பயனர்களுக்குத் தடையற்ற இணைப்பினை வழங்குவதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு அதிகமான கிடைமட்ட இணைப்புகளைக்

கொண்டுள்ள 210 இரண்டாம் கட்ட இருப்பு முனைகளில் (வட்டாட்சியர் அலுவலகங்கள் / கோட்டாட்சியர் அலுவலகங்கள் / வட்டார வளர்ச்சி அலுவலகங்கள்) பதிலி இணைப்பாக 2 Mbps MPLS – VPN (1:1) இணைப்பு வழங்கப்படுகிறது.

### 2.9.2 தேசிய அறிவுத் திறன் வலையமைப்பு (National Knowledge Network)

தேசிய அறிவுத் திறன் வலையமைப்பு என்பது, நாட்டின் அனைத்து பல்கலைக்கழகங்களையும், கல்லூரிகளையும், ஆராய்ச்சி நிறுவனங்களையும் இணைக்கும் நோக்கில், உருவாக்கபட்ட ஜிகா-பிட் வலையமைப்பு ஆகும். தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு மற்றும் மாநில தரவு மையம் ஆகிய இரண்டும் 1 Gbps வேகம் கொண்ட NKN வலையமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அரசுத் துறைகள் தேசிய அளவில் வழங்கப்படும் மென்பொருள் பயன்பாடுகளை அணுக இயலும்.

### 2.9.3. பிற இணைப்பு சேவைகள்

அரசு அலுவலகங்களுக்குத் தேவையின் அடிப்படையில் இணைய குத்தகை இணைப்பு (Internet leased line), MPLS, VPNoBB போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன.

### 2.9.4. தமிழ்நாடு மாநில தரவு மையம்

தமிழ்நாடு மாநில தரவு மையம் (TNSDC), அரசின் மின்-ஆளுமை சேவைகளைத் திறம்பட ஒருங்கிணைத்து வழங்குவதற்கான முக்கிய மின்னாளுமை உள்கட்டமைப்பு ஆகும். இந்த உட்கட்டமைப்பு மூலம், மின்னாளுமை சேவைகள் அரசு நிறுவனங்கள், குடிமக்கள் மற்றும் வணிகத்திற்கு தமிழ்நாடு மாநில பெரும் பரப்பு வலையமைப்பு வாயிலாக வழங்கப்படுகிறது..

தமிழ்நாடு மாநில தரவு மையமானது அரசுத் துறைகளின் மின் பயன்பாடுகளைப் பொதுவாக மேம்படுத்தப்பட்ட, பாதுகாக்கப்பட்ட மற்றும்

கட்டுப்படுத்தப்பட்ட கட்டமைப்பில் ஏற்றம் செய்து எளிய ஒருங்கிணைப்புக்கும், சிறப்பான நடைமுறைப்படுத்தலுக்கும் உதவிகரமாக உள்ளது.

**2.9.4.1. தமிழ்நாடு மாநில தரவு மையம் - I**


தமிழ்நாடு மாநில தரவு மையம் – I தேசிய மின்னாளுமை திட்டத்தின் கீழ் மாநில மற்றும் மத்திய அரசுக்கும் இடையே ஒரு பகிர்வு திட்டமாக நிறுவப்பட்டது. இம்மையத்தின் செயற்பாடுகள் 01.08.2011 அன்று துவக்கப்பட்டது. இந்தியாவில் முதல் ISO சான்றிதழ் பெற்ற மாநில தரவு மையம் ஆகும் (21.02.2012 அன்று ISO சான்றிதழ் பெறப்பட்டது). மேலும் பிப்ரவரி 2018 ஆம் ஆண்டில் மறு சான்று பெறப்பட்டது.

தமிழ்நாடு மாநில தரவு மையத்தின் முதல் நிலை செயல்பாடுகள் 31.07.2016 அன்று நிறைவு பெற்றது. இடைக்கால செயற்பாடுகள் நிறைவு பெற்ற பின் (01.08.2016 முதல் 31.10.2017 வரை) இரண்டாம் நிலை செயல்பாடுகள் 01.11.2017 அன்று தொடங்கப்பட்டது. தற்போது தமிழ்நாடு

மாநில தரவு மையம் வெற்றிகரமாக 7 வது ஆண்டில் செயல்பட்டு வருகிறது.

### 2.9.4.2. தமிழ்நாடு மாநில தரவு மைய பாதுகாப்பு கட்டமைப்பு

அனைத்து அரசாங்க பயன்பாடுகளும் தரவுகளும் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய உயர் பாதுகாப்பு கட்டமைப்பு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.




தமிழ்நாடு மாநில தரவு மைய பாதுகாப்பு அம்சங்கள்
படம் - 20

இதுவரை 50-க்கும் மேற்பட்ட அரசுத் துறைகளின் 124 பயன்பாட்டு மென்பொருள்கள் தரவேற்றம் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இணை-இடம், இணை-பதிவேற்றம் மற்றும் மேகக் கணினியப் பதிவேற்ற சேவைகள் வழங்கப்படுகின்றன.

| **காலம்** | **மொத்தப் பயன்பாட்டு மென்பொருட்கள் பதிவேற்றம்** | **மேகக் கணினி பதிவேற்றம்** |
|---|---|---|
| 2011 | **4** | |
| 2012 | **10** | |
| 2013 | **14** | **1** |
| 2014 | **30** | **2** |
| 2015 | **75** | **5** |
| 2016 | **98** | **16** |
| 2017 | **112** | **25** |
| 2018 | **124** | **28** |

### 2.9.4.3. தமிழ்நாடு மாநில தரவு மையத்தின் முக்கிய அம்சங்கள்

- தமிழ்நாடு மாநில தரவு மையமானது Tier-II தரநிலையுடன் எல்காட் பெருங்குடி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு மாநில தரவு மையத்தின் முழுமையான தரவு மீட்பு மையம் திருச்சியில் நிறுவப்பட்டுள்ளது. இந்த மையத்தினை இணை-இட தரவு மைய சேவைகளுக்கும் பயன்படுத்தலாம்.

- Firewall மற்றும் ஊடுருவல் தடுப்பு அமைப்பு வாயிலாக பலஅடுக்கு பாதுகாப்பு அமைக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு மாநில தரவு மையத்தில், பாதுகாப்பு தகவல் (ம) நிகழ்வு மேலாண்மை, பாதிப்பு மதிப்பீடு மற்றும் ஊடுருவல் சோதனை கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன.

- பாதுகாப்பு அம்சங்களான WAF மற்றும் **DDoS** (Distributed Denial of Services) வசதிகள் நிறுவப்பட்டுள்ளன.

### 2.9.4.4. தமிழ்நாடு மாநில தரவு மையம் II (TNSDC II)

பல்வேறு அரசுத் துறைகளின் முன் முயற்சிகளுக்கு உதவிகரமாக அமைக்கப்பட்ட தமிழ்நாடு மாநில தரவு மையம்-I தனது உள்கட்டமைப்பின் உச்ச வரம்பான 100 சதவீதத்தை அடைந்துள்ளது. மேலும், ₹40 கோடி திட்ட செலவில் தமிழ்நாடு மாநில தரவு மையம்-II நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கட்டட வேலைகள் முடிக்கப்பட்டு, தரவு மையத்தின் கொள்முதல் நிறுவுதல், செயல்பாடு மற்றும் மேலாண்மை ஆகியவற்றிற்கான தரவு மைய இயக்கு நிறுவனத் (Data Centre Operator) தெரிவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.



**தமிழ்நாடு மாநில தரவு மையம்-II**
**படம் - 21**

### 2.9.5 தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையம் (Tamil Nadu Disaster Recovery Centre /TNDRC)

#### 2.9.5.1 தேசிய தரவு மையம், புனே

தேசிய பேரிடர் மீட்பு திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தின் தரவு மீட்பு மையமாக தேசியத் தரவு மையம், புனே தெரிவு செய்யப்பட்டு, தேசிய அறிவு சார் தள வலையமைப்பு இணைப்பின் மூலம் இணைக்கப்பட்டு, புனேவில் உள்ள தேசிய தரவு மையம் தமிழ்நாடு மாநில தரவு மையத்தின் பேரிடர் மீட்பு மையமாக இயங்கி வருகிறது. குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலையமைப்பு திட்டம், மாநில சுகாதார துறை, பத்திர பதிவு துறை, மாநில குடியிருப்போர் தரவு மையம் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையில் மின் மாவட்டத்திட்டம் ஆகியவற்றின் பேரிடர் மீட்பு வசதிகள் தேசிய தரவு மையம் புனேயில் வழங்கப்பட்டு வருகிறது.

### 2.9.5.2. தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையம்

தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள அரசுத் துறைகளின் பணிகள் மற்றும் மின் ஆளுமை பயன்பாடுகள் தடையின்றி தொடர்ச்சியாக நடைபெற ஏதுவாக மாநில தரவு மையத்திற்கான பேரிடர் மீட்பு மையம், மாறுபட்ட நில அதிர்வு மண்டலத்தில் திருச்சியில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையம் இயற்கை தொடர்பான பேரிடர்களின்பொழுது மாநில தரவு மையத்தின் தடையற்ற தொடர் சேவையை உறுதி செய்கிறது.

முழுமையான பேரிடர் மீட்பு மையத்தை அமைத்துள்ள முதல் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. இந்த பேரிடர் மீட்பு மையம் ₹59.85 கோடி மாநில அரசு நிதியுதவியுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 11.10.2017 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

### 2.9.5.2.1. தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையத்தின் முக்கிய அம்சங்கள்:

- தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள மின் பயன்பாடுகள் தரவுகளின் பிரதிபலிப்பினை உருவாக்க உதவுகிறது.
- Tier-III தரநிலையுடன் வடிவமைக்கப்பட்டு, உருவாக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது.
- இயற்கை தொடர்பான பேரிடர்களின் பொழுது தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள மின் பயன்பாடுகளின் தொடர் 24X7 மின் பரிவர்த்தனைக்கு ஏதுவான நம்பகமான, வலுவான, மற்றும் பாதுகாப்பான தகவல் உட்கட்டமைப்பாக அமைந்துள்ளது.
- தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள முக்கியமான தரவுகளைப் பாதுகாக்கும் பொருட்டு மாறுபட்ட நில அதிர்வு மண்டலத்தில் அமைக்கப்பட்டுள்ளது.



**தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையம், திருச்சிராப்பள்ளி - தொடக்க விழா படம் - 22**

**2.9.5.3. அருகாமை பேரிடர் மீட்பு மையம் (Near Line Disaster Recovery Centre/NLDRC)**

எளிமையாக உடனுக்குடன் தரவுகளை மீட்கும் பொருட்டு, அருகாமை தரவு மீட்பு பணிகளுக்காக BSNL தரவு மையத்திலுள்ள தகவல் தொழில்நுட்ப கட்டமைப்புகளை பயன்படுத்தும் நோக்கில் எல்காட் சென்னையில் உள்ள BSNL தரவு மையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. அதற்குத் தேவையான பொது தகவல் தொழிற்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் இணைப்பு வசதிகள் BSNL தரவு மையத்தில்

நிறுவப்பட்டுள்ளது. அரசு துறைகளின் தேவைகளுக்கேற்ப சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### 2.9.6 மாநில தரவு மையத்தில் மேகக் கணினிய அமைப்பு (Cloud Computing Setup at TNSDC)

தகவல் தொழில்நுட்பத்தின் முன் உதாரணமாக, மின்ஆளுமை பயன்பாடுகளை விரைவில் செயல்படுத்தும் வகையில், எளிய மேலாண்மையுடன், பகிர்ந்து கட்டமைக்கக் கூடிய கணினி வளங்ளை விரைவில் அணுகுவதற்கான மேககணினியமைப்பு ₹11.39 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளது. மேககணினி சேவைகள் 19.09.2016 முதல் பயன்பாட்டில் உள்ளன. இதுவரை 28 பயன்பாட்டு மென்பொருள்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

### 2.9.7. மூலக் கணினிப் பண்ணை (Server Farm)

தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில், அரசுத் துறைகள் தங்கள் பயன்பாட்டு மென்பொருளை ஏற்றம் செய்வதற்கு ஏதுவாக தரவு ஏற்ற நடுநிலைமை, firewall, antivirus போன்ற

வசதிகளுடன் பாதிப்பு மதிப்பீடு மற்றும் ஊடுருவல் மதிப்பீட்டுச் சோதனை கருவிகள் கொண்ட மூலக் கணினி பண்ணை அமைக்கப்பட்டுள்ளது.

### 2.9.8. மின்னஞ்சல் தீர்வு (e-Mail Solution)

மின்னஞ்சல் தீர்வானது, அரசாங்க செயல்பாட்டை மின்னணு வாயிலாக செயல்படுத்துவதற்கான ஒரு முக்கிய அங்கமாக மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் நிறுவப்பட்டு 18.09.2015 முதல் "tn.gov.in" இன் கீழ் செயல்பட்டு வருகிறது.

### 2.10. நிதி செயல்பாடு

தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் அமைந்துள்ள தகவல் தொழில் நுட்பவியல் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட 99 வருடகால நிலக் குத்தகைக்கான வைப்புத் தொகைகள், கீழ்க்கண்ட விகிதங்களில் ஆண்டு வருமானமாக கணக்கில் கொள்ளப்படுகிறது.

- முதல் ஆண்டு – 15 சதவிகிதம்
- இரண்டாம் ஆண்டு – இல்லை
- மூன்றாம் ஆண்டு – இல்லை
- நான்காம் ஆண்டு முதல் 17 ஆம் ஆண்டு வரை – ஆண்டொன்றுக்கு 5 சதவிகிதம்
- மீதமுள்ள 15 சதவிகிதம் குத்தகைக்கால முடிவில் நிலக்குத்தகை பெற்ற தகவல் தொழில் நுட்பவியல் நிறுவனங்களுக்கு திருப்பி அளிக்கப்படுகிறது.

2012-13 முதல் 2016-17 வரை மற்றும் 2017-18 (தணிக்கை செய்யப்படாதது) ஆண்டுகளுக்கான எல்காட் நிறுவனத்தின் நிதி செயல்பாடு பின்வருமாறு

(₹ இலட்சங்களில்)

| | 2012-13 | 2013-14 | 2014-15 | 2015-16 | 2016-17 | 2017-18 (தணிக்கை செய்யப்படாதது) |
|---|---|---|---|---|---|---|
| **வரவினம்** | | | | | | |
| விற்பனை | 837.43 | 853.17 | 891.51 | 930.82 | 863.16 | 984.41 |
| சேவைகள் | 621.49 | 907.22 | 1432.75 | 842.52 | 549.71 | 1209.19 |
| இதர வருவாய் | 2897.36 | 3400.54 | 4155.64 | 10157.63 | 5858.25 | 5712.34 |
| **மொத்த வரவினம்** | **4356.28** | **5160.93** | **6479.90** | **11930.97** | **7271.12** | **7905.94** |
| **செலவினம்** | | | | | | |
| நிர்வாகம் | 1326.47 | 1508.90 | 1686.75 | 1712.48 | 1713.59 | 1934.98 |
| தேய்மானம் | 241.86 | 326.68 | 409.92 | 552.27 | 553.30 | 553.30 |
| நிதி செலவு (அரசு முன்பணங்கள் மீதான வட்டி) | 809.45 | 1111.16 | 1134.52 | 1034.55 | 953.44 | 853.44 |
| இதர | 919.58 | 550.28 | 625.65 | 1107.69 | 1075.44 | 1321.98 |
| **மொத்த செலவினம்** | **3297.36** | **3497.02** | **3856.84** | **4406.99** | **4295.77** | **4663.70** |
| **நிகர வருவாய்** | **1058.92** | **1663.91** | **2623.06** | **7523.98** | **2975.35** | **3242.24** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **வருமான வரி** | **294.04** | **468.79** | **701.72** | **1616.49** | **923.66** | **869.87** |
| **அரசுக்கு செலுத்திய தொகைகள்** | | | | | | |
| வட்டி/ நியமன கட்டணம் | 796.91 | 1109.29 | 1132.65 | 1032.69 | 951.58 | * |
| பங்காதாயம் | 0.00 | 777.92 | 777.92 | 1772.24 | 777.92 | ** |
| **அரசுக்கு செலுத்திய மொத்த தொகைகள்** | **796.91** | **1887.21** | **1910.57** | **2804.93** | **1729.50** | **-** |
| *அரசிடமிருந்து செலுத்தப்பட வேண்டிய வட்டித்தொகை குறித்த ஆணைகள் பெறப்பட்ட பின் அரசு முன்பணங்கள் மீதான வட்டித்தொகை செலுத்தப்படும். | | | | | | |
| **கணக்குகள் முடிவு செய்யப்பட்டவுடன் ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்காதாயம் அறிவிக்கப்படும். | | | | | | |

# அத்தியாயம் - III

# மின் ஆளுமை ஆணையரகம் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை

## 3.1. முன்னுரை

**மின் ஆளுமை ஆணையரகம்**, மாநில அளவில் மின் ஆளுமை முயற்சிகளை ஊக்குவித்து, தகவல் தொழில்நுட்பத்தின் இணையம் மற்றும் நம்பகமான அணுகுமுறைகள் வாயிலாக மின் ஆளுமை செயற்பாடுகளைத் தொலைதூரக் கிராமப்பகுதிகளுக்குக் கொண்டு செல்ல உருவாக்கப்பட்டுள்ளது. தொலைநோக்கு பார்வை 2023-இன் படி அனைத்து அரசு சேவைகளையும் குடிமக்களுக்கு அவர் தம் வசிப்பிடத்தில் வழங்குவதே அதன் குறிக்கோளாகும். மேலும், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையுடன் இணைந்து மாநில அரசின் மின் ஆளுமை முயற்சிகளுக்கு ஆலோசனைகளை வழங்கி, தகவல் தொழில்நுட்பச் செயல்திட்டங்களை மாநில அளவில் செயல்படுத்துகிறது.

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) பல்வேறு மின் ஆளுமை திட்டங்களைத் திறம்படவும், வெளிப்படையாகவும் பொது மக்களுக்கு வழங்குவதைக் குறிக்கோளாகக் கொண்டு அரசின் ஆளுமையைச் செயல்படுத்தி வருகிறது. இந்த எளிமையான முறையில் அரசின் சேவைகளை வழங்குவதன் மூலம் குடிமக்களின் அன்றாட வாழ்க்கை எளிதாக்கப்பட்டுள்ளது.

### 3.2. நிர்வாகக் கட்டமைப்பு

#### 3.2.1. மாநில உயர்மட்டக் குழு

மாநில அளவில் மின் ஆளுமை முயற்சிகளை முழுமையாக ஊக்குவிக்கும் வகையில், பல்வேறு கொள்கை முயற்சிகள் மற்றும் தேசிய மின் ஆளுமை திட்டத்தின் (NeGP) குறிக்கோள் திட்டங்கள் மூலம் மின் ஆளுமை நடைமுறைப்படுத்தப்படுகிறது.

தலைமை செயலாளரின் தலைமையின் கீழ் அமைந்த உயர்மட்டக் குழு (State Apex Committee) மாநில

அளவிலான மின் ஆளுமை முயற்சிகளை மேற்பார்வையிடவும், அரசு துறைகளுக்குக் கொள்கை ரீதியில் வழிகாட்டுதலை வழங்கி அரசு துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பை உறுதிபடுத்துகிறது. திட்ட மேலாண்மை மூலம் தரநிலை மற்றும் நிலைத்தன்மையை வழங்க மாநில மின் ஆளுமை குழு (State e-Governance Group) துணைபுரிகிறது.

### 3.2.2. தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (Tamil Nadu eGovernance Agency)

தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச்சட்டம் 1975-இன் கீழ் பதிவு செய்யப்பட்ட தன்னாட்சி அமைப்பாகும். தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் (TNeGA) ஆளுமை குழுவானது தகவல் தொழில்நுட்பவியல் துறை செயலாளர் தலைமையில் 11 குறிக்கோள் திட்டத் துறைகளின் செயலாளர்களை உறுப்பினர்களாகவும், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் முதன்மை செயல் அலுவலரை உறுப்பினர் செயலராகவும், தேசிய தகவலியல் மையம் (NIC)


,சென்னையின் மாநில தகவலியல் அலுவலரை முதன்மை தொழில்நுட்ப அலுவலராகவும் கொண்டுள்ளது.

## 3.3. நிறுவன கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப பணியாளர் தொகுப்பு

தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் பொதுமக்களின் தினசரி தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசு துறைகள் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. ஒருங்கிணைந்த பாதுகாப்பான தகவல் தொழில்நுட்ப சூழலை உருவாக்கி அவற்றிற்கு வழிகாட்டவும், நிலைப்படுத்தவும் நிறுவனத்தை வலுப்படுத்துவது அவசியமாகிறது. அதனைத் தொடர்ந்து தகவல் தொழில்நுட்பத் தொகுப்பில் (IT Cadre) 98 பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு தேர்வாணையத்தின் வாயிலாக 60 உதவி கணினி பகுப்பாய்வாளர்கள் / உதவி கணினி பொறியாளர்கள் பணியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


கீழ்க்காணும் வரைபடங்கள் மின்னாளுமை ஆணையரகம் மற்றும் மின்னாளுமை முகமை நிறுவன கட்டமைப்பபை விளக்குகிறது.

**மின் ஆளுமை ஆணையரகம்**




படம் - 23

## தமிழ்நாடு மின் ஆளுமை முகமை




படம் - 24

### 3.4. மாநில மின் குறிக்கோள் குழு (State e-Mission Team)

மாநில மின் குறிக்கோள் குழு (SeMT), மாநில அரசுகளின் மின் ஆளுமை திறனை மேம்படுத்தும் நோக்கில் தேசிய மின் ஆளுமை திட்டத்தின் (NeGP) திறன் மேம்பாட்டு முயற்சியின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ளது. SeMTயில் திட்ட மேலாண்மை, தொழில்நுட்ப மேலாண்மை, நிதி மேலாண்மை மற்றும் மாற்று மேலாண்மை போன்ற ஆலோசகர்களைக் கொண்டுள்ளது. மாநில அளவில் செயல்படுத்தப்படும் மின்-

ஆளுமை முயற்சிகளுக்குத் திட்ட மேலாண்மை மூலம் ஒட்டுமொத்த வழிகாட்டுதல், தரநிலை, நிலைத்தன்மை ஆகியவற்றை இக்குழு வழங்கி வருகிறது.

### 3.5. மாவட்ட மின் ஆளுமை சங்கங்கள் (DeGS)

மாவட்ட மின் ஆளுமை சங்கங்கள் (DeGS) அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் இயங்கி வருகிறது. சென்னையைப் பொறுத்தவரை, சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையர் தலைமையில் இயங்கி வருகிறது. மாவட்ட அளவிலான மாநில மின்-ஆளுமைத் திட்டங்களைச் செயல்படுத்த மற்றும் மேம்படுத்துவதற்கு மாவட்ட மின் ஆளுமை சங்கங்கள் உதவுகின்றன. மாவட்டங்களில் மின்ஆளுமை சேவைகளை வழங்கும் துறை சார்ந்த மாவட்ட அலுவலர்கள் இச்சங்கத்தின் உறுப்பினர்களாவர். தொடக்க நிலையில் ஒவ்வொரு சங்கத்திற்கும் ₹ 10 லட்சம் ஆதார நிதியுதவியை அரசு வழங்கியுள்ளது. மேலும், இச்சங்கங்கள் நன்முறையில் இயங்கிட அனைத்து

சங்கங்களுக்கும் ஒரு வருவாய் பங்கு மாதிரி உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

### 3.6. திட்டங்கள்

#### 3.6.1 மின் மாவட்ட திட்டம் (e-District)

மின் மாவட்ட திட்டமானது தேசிய மின் ஆளுமை திட்டத்தின் கீழ் மாநில அளவில் நடைமுறைப் படுத்தப்பட்டது. இது மாநில அளவில் செயல்படும் குறிக்கோள் திட்டங்களில் ஒன்றாகும். மின் மாவட்ட திட்டம் பொதுமக்களை மையப்படுத்திய சேவைகளை, இ-சேவை மையங்கள் மூலம் இணைய வழியில் வழங்குகிறது.

மத்திய அரசு, மின் மாவட்ட திட்டத்தைச் செயல்படுத்த மாதிரி மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாட்டைத் தேர்வு செய்தது. தொடக்கத்தில், மின் மாவட்ட மென்பொருள் உருவாக்கப்பட்டு பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர் மரபினர் நலத்துறை மற்றும் ஆதி திராவிடர்

நலத்துறையின் கல்வி உதவித் தொகை திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

மின்மாவட்டம், இ-சேவை மற்றும் அப்னா CSC திட்டங்கள் வாயிலாக மொத்தம் 209 சேவைகள் இணையவழியில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. வழங்கப்படும் சேவைகளின் விபரம் :

<table>
<tr><th>அரசுத் துறைகள்</th><th>வழங்கப்படும் சேவைகளின் பெயர்</th></tr>
<tr><td rowspan="10">வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை – 34)</td><td>வருமானச் சான்றிதழ்</td></tr>
<tr><td>பிறப்பிடச் சான்றிதழ் / இருப்பிடச் சான்றிதழ்</td></tr>
<tr><td>சாதிச் சான்றிதழ்</td></tr>
<tr><td>குடும்பத்தில் பட்டதாரி இல்லை என்பதற்கான சான்றிதழ்</td></tr>
<tr><td>கணவனால் கைவிடப்பட்டவர் என்ற சான்றிதழ்</td></tr>
<tr><td>கிராமப் பிறப்பு சான்றிதழ் அச்சிடுதல்</td></tr>
<tr><td>கிராம இறப்பு சான்றிதழ் அச்சிடுதல்</td></tr>
<tr><td>குடும்ப இடப்பெயர்வு சான்றிதழ்</td></tr>
<tr><td>வேலையில்லா சான்றிதழ்</td></tr>
<tr><td>விதவை சான்றிதழ்</td></tr>
</table>

| | |
|---|---|
| | விவசாய வருமானச் சான்றிதழ் |
| | கல்வி ஆவணங்கள் தொலைந்தமைக்கான சான்றிதழ் |
| | ஆண் வாரிசு இன்மைச் சான்றிதழ் |
| | திருமணம் ஆகவில்லை என்பதற்கான சான்றிதழ் |
| | கலப்புத் திருமணச் சான்றிதழ் |
| | வாரிசு சான்றிதழ் |
| | சொத்து மதிப்பு சான்றிதழ் |
| | அடகு பிடிப்போர் சட்டத்தின் உரிமம் கீழ் வழங்குதல் |
| | வட்டிக்கு பணம் கொடுப்போர் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்குதல் |
| | இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சான்றிதழ் |
| | சிறு/குறு விவசாயி சான்றிதழ் |
| | இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம். |
| | இந்திரா காந்தி தேசிய விதவைகள் ஓய்வூதிய திட்டம் |
| | இந்திரா காந்தி தேசிய மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம் |

| | |
|---|---|
| | மாற்றுதிறனாளி ஓய்வூதியத் திட்டம் |
| | ஆதரவற்ற, கணவரால் கைவிடப்பட்டபெண்கள் ஓய்வூதியத் திட்டம் |
| | மணமாகாத பெண்கள் ஓய்வூதியத் திட்டம் |
| | ஆதரவற்ற விதவை ஓய்வூதியத் திட்டம் |
| | தமிழ் நிலம் - முழுநில பட்டா மாறுதல் |
| | தமிழ் நிலம் - கூட்டு பட்டா மாறுதல் |
| | தமிழ் நிலம் - உட்பிரிவு |
| | குறைதீர் நாள் மனு |
| | தமிழ் நிலம் - அ,பதிவு விவரம் |
| | தமிழ் நிலம்- சிட்டா விவரம் |

| | |
|---|---|
| **சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை - 7)** | அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம் |
| | முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் I |
| | முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் II |
| | டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண உதவித் திட்டம் |
| | டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம் |
| | ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண உதவித் திட்டம் |
| | மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம் |

| | |
|---|---|
| **உணவுப் பொருள் வழங்குதல் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -8)** | பொது விநியோகத் துறை அல்லாத நுகர்வோர் புகார்கள் |
| | பொது விநியோக துறை தொடர்பான புகார்கள் |
| | புதிய அட்டைக்கு விண்ணப்பித்தல் |
| | அட்டை மாற்றல் (முகவரி மாற்றம், கார்டு வகை மாற்றம், சிலிண்டர் மாற்றம், குடும்பத் தலைவர் உறுப்பினர் மாற்றம், பயனாளியின் புகைப்படம் மாற்றம்) |
| | குடும்ப அட்டை ஒப்படைத்தல் / ரத்து செய்தல் |
| | புதிய பயனர் பதிவு செய்தல் |
| | குடும்ப அட்டை தடுத்தல் / விடுவித்தல் |
| | மின்னணு அட்டை அச்சிடுதல் |

| | |
|---|---|
| **காவல் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை - 8)** | சமூக சேவை பதிவேடு நிலை |
| | முதல் தகவல் அறிக்கை நிலை |
| | நிகழ்நிலை புகார் பதிவு செய்தல் |
| | புகார் நிலை அறிதல் |
| | வாகன விவரம் அறிதல் |
| | முதல் தகவல் அறிக்கை பார்வையிடுதல் |
| | சாலைவிபத்து வழக்குகளில் ஆவணங்களை பதிவிறக்கம் செய்தல் |
| | தொலைந்த ஆவணங்களின் அறிக்கை |
| **போக்குவரத்து துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை - 3)** | ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கான நியமன பதிவு |
| | கற்கும் உரிமம் பெறுவதற்கான நிகழ்நிலை விண்ணப்பம் |
| | கற்கும் உரிமம் பெறுவதற்கான நிகழ்நிலை விண்ணப்பம் மறு அச்சசிடுதல் |

| | |
|---|---|
| **பதிவுத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை - 4)** | அகல்நிலையில் கட்டணம் செலுத்துவதற்கு விண்ணப்பித்தல் |
| | அகல்நிலை கட்டண செலுத்துசீட்டு அச்சிடுதல் |
| | நிகழ்நிலை திருமண ஆவண முன் பதிவு |
| | முன்பதிவு ஒப்புகை அச்சிடுதல் |
| **ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -4)** | தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான பள்ளிமேற்படிப்பிற்கு, மைய அரசின் கல்வி உதவித் திட்டம். |
| | பழங்குடியின மாணவர்களுக்கான பள்ளி மேற்படிப்பிற்கு, மைய அரசின் கல்வி உதவித் திட்டம். |
| | பள்ளி மேற்படிப்பிற்கான மாநிலஅரசின் சிறப்புக் கல்வி உதவித் திட்டம். |
| | மேற்படிப்பிற்கான சிறப்பு கல்வி உதவித் திட்டம். |

| | |
|---|---|
| **பிற்படுத்தப் பட்டோர், மிக பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மை யினர் நலத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -4)** | பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் திட்டங்கள். |
| | தொழிற்கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குக் கல்வி உதவி |
| | பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான பட்டப்படிப்பிற்கான நிதியுதவித் திட்டம். |
| | பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான பட்டயப்படிப்பிற்கான நிதியுதவித் திட்டம். |
| **சுகாதாரத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -1)** | மகப்பேறு முன்பதிவு |

| | |
|---|---|
| **கொதிகலன் இயக்குனரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -4)** | கொதிகலன் சட்டத்தின் கீழ் உரிமம் பதிவு செய்தல் |
| | கொதிகலன் சட்டத்தின் கீழ் உரிமம் புதுப்பித்தல் |
| | உற்பத்தி மற்றும் புதுப்பிப்பு அனுமதி கோரி விண்ணப்பித்தல் |
| | கட்டடம் புதுப்பிப்பு அனுமதி கோரி விண்ணப்பித்தல் |
| **நகராட்சி நிர்வாக ஆணையரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -5)** | வரி இல்லா இதர கட்டணங்கள் |
| | தொழில் வரி வசூலித்தல் |
| | சொத்து வரி வசூலித்தல் |
| | பாதாள வடிகால் வரி வசூலித்தல் |
| | குடிநீர் வரி வசூலித்தல் |
| **சென்னை பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -1)** | நீர் மற்றும் கழிவுநீர் வரி |

| | |
|---|---|
| **சென்னை மாநகராட்சி (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -6)** | பிறப்பு சான்றிதழ் அச்சிடுதல் |
| | இறப்பு சான்றிதழ் அச்சிடுதல் |
| | வர்த்தக உரிமம் புதுப்பித்தல் |
| | நிறுவன வரி வசூலித்தல் |
| | தொழில் வரி வசூலித்தல் |
| | சொத்து வரி வசூலித்தல் |
| **தீ மற்றும் மீட்பு இயக்குநரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -5)** | பல மாடிக் கட்டிடத்திற்கான தடையின்மை இணக்கச் சான்றிதழ் |
| | பல மாடிக் கட்டடம் கட்டுவதற்கான திட்ட அனுமதி கோரும் தடையின்மைச் சான்றிதழ் |
| | பல மாடிக் கட்டிடம் அல்லாத கட்டிடம் கட்டுவதற்கான திட்ட அனுமதி கோரும் தடையின்மைச் சான்றிதழ் |
| | பல மாடிக் கட்டடத்திற்கான தீ பாதுகாப்பு உரிமம் பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் |
| | பல மாடிக் கட்டடம் அல்லாத கட்டடம் கட்டுவதற்கான தீ உரிமம் பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் |

| | |
|---|---|
| **தமிழ்நாடு மின்சார வாரியம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -3)** | மின் கட்டணம் செலுத்துதல் |
| | புதிய குறைந்த மின் அழுத்தம் இணைப்பு பதிவு செய்தல் |
| | புதிய குறைந்த மின் அழுத்தம் இணைப்புக்கான கட்டணம் செலுத்துதல் |
| **அண்ணாப் பல்கலைக்கழகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -1)** | தமிழ்நாடு பொறியாளர் சேர்க்கை நிகழ்நிலை பதிவு |
| **வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -4)** | பதிவு அடையாள அட்டை அச்சிடுதல் |
| | சுயவிவர புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் |
| | சுய விவரம் திருத்தம் செய்வதற்கான விண்ணப்பம் |
| | பதிவு செய்ய விண்ணப்பித்தல் |

| | |
|---|---|
| **மருந்து கட்டுபாட்டு நிர்வாக இயக்குநரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -5)** | அலோபதி மருந்துகளை வழங்குவதற்கான உரிமம் / புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் |
| | ஓமியோபதி மருந்துகளை வழங்குவதற்கான உரிமம் / புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் |
| | தடைசெய்யப்பட்ட மருந்துகளை வழங்குவதற்கான உரிமம் / புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் (அலோபதி) |
| | மருந்துகளை வழங்குவதற்கான உரிமம் / புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் (அட்டவணை x-ல் குறிப்பிட்ட மருந்துகள்) |
| | உரிமம் நகல் பெறுவதற்கான விண்ணப்பம் |
| **தமிழ்நாடு மின்-ஆளுமை முகமை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -1)** | பொது விநியோக திட்டத்திற்கான ஆதார் ஒருங்கிணைப்பு |

மேற்கண்ட சேவைகளைத் தவிர அப்னா CSC வாயிலாக பொது மக்களை மையமாகக் கொண்ட பயன்பாட்டு சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன,


### 3.7. அரசு இ- சேவை மையங்கள்

இணைய வழியில் இ-சேவை மையங்களின் மூலமாக, தொலைதூர கிராமத்திலிருக்கும் பொதுமக்களின் இருப்பிடத்திற்கு அருகாமையிலேயே அனைத்து சேவைகளையும் வழங்க வேண்டும் என்ற அரசின் நோக்கம் நிறைவேறியுள்ளது. தற்போதைய நிலையில் அரசு இ-சேவை மையங்கள் மின் மாவட்டம் மற்றும் இதர பயன்பாட்டு சேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றன. கிராமப்புற பொது சேவை மையங்களின் பயன்களைக் கருத்திற்கொண்டு, இத்திட்டம் நகர்ப்புறப் பகுதிகளிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மாநிலத்தின் வெவ்வேறு அரசுத் துறைகளின் மின் சேவைகளை ஒருங்கிணைந்த முறையில், நகர்ப்புறப் பகுதிகளில் ஒரு பொதுவான

இடத்தில் வழங்கும் நோக்கில் நகர்ப்புற அரசு இ-சேவை மையங்கள் செயல்படுகின்றன.

தற்போது, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் (PACCS), புது வாழ்வு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கிராமப் புற வறுமை ஒழிப்பு சங்கங்கள் (VPRC) மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் (TACTV), கிராமப் புற தொழில் முனைவோர் (VLE) மற்றும் வேளாண்மை அபிவிருத்திக்கான சர்வதேச நிதி நிறுவனம் (IFAD) ஆகியவற்றின் மூலம் இ-சேவை மையங்கள் நடத்தப்படுகின்றன.

நகர்ப்புற அரசு இ-சேவை மையங்களை அமைப்பதற்கான முதல் நிலை மாதிரி செயல் திட்டம் கடந்த 24-02-2014 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டது. தற்போது, மாநில முழுவதும் 10,423 அரசு இ-சேவை மையங்களில் 10,862 செயலிட முகப்புகள் இயங்கி வருகின்றன.


தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்
பொது இ-சேவை மையம்
புகார் தெரிவிக்க
கட்டணமில்லா தொலைபேசி எண்
1800 425 2911

**படம் – 25**


தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்
பொது இ-சேவை மையம்
புகார் தெரிவிக்க
கட்டணமில்லா தொலைபேசி எண்

**படம் – 26**

**3.8. மாநில சேவை இணையதளம் (State Portal)**

தமிழ்நாடு அரசின் தகவல்கள் மற்றும் இணைய சேவைகளை வழங்கும் ஓரிட அணுகலாக செயல்படும் மாநில சேவை இணையதளமானது கடந்த 24.02.2014 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. ஒருங்கிணைந்த மின் மாவட்ட சேவைகள், உள்ளடக்க மேலாண்மை அமைப்பு, இதர துறைகளின் சேவைகளுக்கான இணைப்புகள், கைபேசி இணக்கமுறை, பொதுமக்களின் பதிவுகள் ஆகியவற்றை மாநில சேவை இணையதளம் உள்ளடக்கியிருக்கும்.

**3.9. திறன் மேம்பாடு (Capacity Building)**

திறன் மேம்பாடு என்பது அரசு அலுவலர்களுக்கும் பொதுமக்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தில் உருவாக்கப்பட்ட குறிக்கோள் திட்டங்களில் ஒன்றாகும்.

அரசியல் மற்றும் கொள்கை அளவிலான முடிவுகளை எடுப்பவர்களுக்கு துணைபுரிவது திறன் மேம்பாட்டு திட்டத்தின் குறிக்கோளாகும். பொதுமக்கள் மற்றும் வணிக நிறுவனங்களை மையப்படுத்திய சூழலை உருவாக்குவதன் மூலம், பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதை மின் ஆளுமை செயல்திட்டங்கள் நோக்கமாக கொண்டுள்ளது. அனைத்து மட்டங்களிலும் உள்ள அரசு அலுவலர்களின் திறன் வளர்ச்சி மற்றும் நிர்வாக அறிவினைக் கவனம் செலுத்துவதன் மூலம் இத்திட்டம் திறம்பட செயல்படுத்தப்படும்.

பயிற்சி மற்றும் தீர்வு பகிர்வு

- சிறப்பு பயிற்சி அறிவு வகுப்புகள்
- மென்பொருள் பயிற்சி
- உள்ளூர் தேவைக்கேற்ப பயிற்சிகளில் மாற்றங்கள்
- மின் ஆளுமை சார்ந்த இணையவழி பயிற்சிகள்

- மின் மாவட்ட மேலாளர்கள் சார்ந்த பயிற்சிகள்
- பயிற்றுநர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள்

நிதி ஆதாரம் வழங்கப்படுபவை

- மாவட்ட அளவிலான அதிகாரிகளுக்கான பயிற்சிகளை வலுப்படுத்தல்
- மாவட்ட மேலாளர் களுக்கான பயிற்சி
- பயிற்சி மற்றும் திறன் பகிர்வு முயற்சிகள்
- வெளிப்புற வளங்கள் / வெளிப்புற பயிற்றுநர்கள்
- CSC ஆப்ரேட்டர் களுக்கான பயிற்சிகள்
- இதர பயிற்சிகள்

**3.9.1. பயிற்சி விவரங்கள்**

தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் கீழ் பின்வரும் தலைப்புகளின் கீழ் 303 அரசு அலுவலர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

1. மின்னாளுமை

2. இணைய பாதுகாப்பு (Cyber Security)

3. மின் கையொப்பம் விழிப்புணர்வு பயிற்சி

## 3.10. தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு (TNGIS)

புவிசார் தகவல் அமைப்பு இடம்சார் அல்லது புவிசார் தரவுகளைக் கண்டறிந்து சேமிக்கவும், கையாளவும், பகுப்பாய்வு செய்யவும், நிர்வகிக்கவும் உருவாக்கப்பட்ட அமைப்பாகும். புவியியல் தகவல்களை ஒருங்கிணைத்தல், சேமித்தல், பகுப்பாய்தல், பகிர்தல் மற்றும் வெளிக்காட்டுதல் ஆகியவற்றைச் செய்யும் ஒரு தகவல் மேலாண்மை அமைப்பாகும். GIS அமைப்புகளானது பயனர்கள் ஊடாடும் வினவல்களை (பயனர் உருவாக்கிய தேடல்களை) உருவாக்க, இடஞ்சார்ந்த தகவலைப் பகுப்பாய்வு செய்ய, வரைபடங்களில் உள்ள தரவைத் திருத்த மற்றும் கொள்கை நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறு முடிவுகளை அளிக்க உதவும் கருவிகள் ஆகும்.

### 3.10.1. புவிசார் தகவல் அமைப்பினைச் செயல்படுத்துதல்

தரவுகளில் பிரதிகள் உருவாதலைத் தவிர்க்க, தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பிற்குள் (TNGIS) தமிழ்நாடு மாநில இடம்சார் தரவு உட்கட்டமைப்பை (TNSSDI) உருவாக்கி, மாநிலத்தின் பல்வேறு துறைகளிலிருந்து பெறப்படும் புவிசார் தரவுத் தொகுப்புகளை ஒருங்கிணைத்து ஒற்றைத் தளத்தில் பயன்படுத்தும் முடிவை அரசு எடுத்துள்ளது. TNGIS அமைப்பின் இடம்சார் தரவு அடுக்குகளை www.tngis.tn.gov.in எனும் இணைய முகவரி மூலம் அனைத்து பங்குதாரர்களும் அணுக வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அனைத்து இடம்சார் தரவுகளை ஒருங்கிணைப்பதற்கு முன்னர், பின்வரும் முக்கிய பிரச்சனைகள் பரிசீலிக்கப்பட்டன.

1. செயல்திட்ட அபிவிருத்தி: செயலியானது பல்வேறுபட்ட இடம்சார் தரவுத் தொகுப்புகள், பல தரப்பட்ட

பயனர்கள் மற்றும் பொறுப்புகள் சார்ந்த அணுகலைக் கொண்டு தரவுகளைப் பார்வையிடவும் / திருத்தவும் வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.

2. அடிப்படை தரவுகளை வடிவமைத்தல்

3. தரவு மாதிரிகளை வடிவமைத்தல்

4. வரைபடங்கள் மற்றும் பல அடுக்குகளின் வெவ்வேறு அளவுகள்

**நிறைவுப் பெற்றவை** :

இத்திட்டத்திற்காக இதுவரை 29 துறைகள் / நிறுவனங்கள் தங்களது அடுக்குகளைப் பகிர்ந்துள்ளன.

1. TNGIS வலைதளத்தில் 348 அடுக்குகள் நிறுவப்பட்டுள்ளன.

2. 473 பயனர் அங்கீகாரத் தகவல்கள் அரசு முகமைகளின் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

3. சிப்காட்டின் 31 அடுக்குகள் TNGIS வலைதளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

4. இணைய தொகுதிகள் உருவாக்கப்பட்டு www.tngis.tn.gov.in எனும் இணைய முகவரியில் பல கட்டம் /தொகுப்பு/ இடையக பகுப்பாய்வுகளாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது

5. ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்டத்தின் அங்கன்வாடி மையங்கள், பொது சேவை மையங்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆகிய அரசுத் துறைகள் TNGIS இணையதளத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

6. சிட்கோ, சிப்காட் (ம) டிட்கோ திட்டங்கள் தேசிய புவியியல் தகவல் மையத்தில் (NCOG) பதிவிட உதவுகிறது.

7. நில அளவை துறை உதவி இயக்குனர் மற்றும் மின்மாவட்ட மேலாளர்கள் உதவியுடன் வருவாய்/ பஞ்சாயத்து அளவிலான கிராம வரைப்படங்கள் திருத்தப்பட்டு அவை வலைதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

8. மொத்தமுள்ள 17,652 வருவாய் கிராமங்களில், 16,721 வருவாய் கிராமங்களின் வரைபடங்கள் புவிசார் தகவலமைப்புடன் இணைக்கப் பட்டுள்ளன.

9. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் கீழ் சென்னையில் உள்ள விளையாட்டு மைதானங்கள் குறித்த வரைபடங்கள் இணைக்கப்பட்டுள்ளன.




**படம் – 27**

**திட்டம் நடைபெற்று வருபவை :**

1. **தமிழ்நாடு காவல்துறை குடியிருப்பு மனைகள்**

**2. மருத்துவத் துறை : கர்ப்பிணி பெண்கள் / தாய்மார்கள், அவசர சிகிச்சைக்காக மருத்துவமனைகளை காட்டும் வரைபடங்கள்**

## 3.11. முறைப்படுத்தப்பட்ட டிஜிட்டல் முகவரி எண் உருவாக்குதல்

முறைப்படுத்தப்பட்ட டிஜிட்டல் முகவரி எண் (Standard Digital Address Number) திட்டமானது 2016-17-ஆம் ஆண்டு சட்டப்பேரவையில் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் ஒன்றாகும். இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளானது தமிழகத்தில் முகவரியுடன் கூடிய அல்லது முகவரியற்ற அனைத்து இருப்பிடங்களுக்கும் எண்-எழுத்து (Alpha-Numeric) வடிவக் குறியீட்டு எண் வழங்குவதாகும். இத்திட்டம் மாநில நிதியிலிருந்து ₹6.34 கோடி உத்தேச செலவினத்தில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 3.12. மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம் (SRDH)

மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையமானது, தமிழ்நாட்டில் வாழும் அனைத்து குடிமக்களின் இருப்பிட விவரங்கள் அடங்கிய ஒரு தகவல்

தொகுப்பு ஆகும். இத்தகவல் களஞ்சியமானது குறிப்பிட்ட கால இடைவெளியில் பல்வேறு துறைகளின் தரவுகளை ஒருங்கிணைத்து கட்டமைக்கப்பட்டது. இதன் வாயிலாக, அரசால் திட்டங்களுக்கான இலக்கினை நிர்ணயம் செய்யவும், சிறந்த சேவைகளை வழங்கவும், திட்டங்களை கண்காணிக்கவும் இயலும். இத்திட்டத்திற்காக ₹25.93 கோடி அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

### 3.12.1. மாநில குடியிருப்போர் தகவல் மையத்தின் நோக்கங்கள்:

- மாநில அளவிலான குடிமக்கள் தகவல்களை மின்னாக்கம் செய்து, மையப்படுத்தப்பட்டு பாதுகாப்பான முறையில் உருவாக்குதல் மற்றும் நிர்வகித்தல்
- ஆதார் எண்ணை தனித்த அடையாளமாக பயன்படுத்தி, குடிமக்களைக் கண்டறிதல். இதன் வாயிலாக சரியான பயனாளிகளை அடையாளம் காண இயலும்.

- ஆதார் எண் இணைக்கப்பட்ட தேசிய மக்கள் தொகை பதிவேட்டுடன் அரசுத் துறைகளின் தரவுத் தளங்களை நிகழ்நிலையில் பயன்படுத்துதல்.
- அனைத்து பயன்பாடுகளையும் ஆதார் எண் வாயிலாக சரிபார்த்தல்.

இதுவரை முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம் (CMUPT) முதலமைச்சர் விரிவான மருத்துவக் காப்பீடுத் திட்டம் (CMCHIS), கருவூல இணையவழி ஓய்வூதியத் திட்டம் (Treasury e-Pension) மற்றும் நில பதிவேட்டு துறை போன்ற துறைகளின் தரவுகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

### 3.13. மின் அலுவலகம் (e-Office)

மின் அலுவலகம் (e-Office) செயலியின் முக்கிய குறிக்கோளானது அரசு அலுவலகங்களைக் காகிதமற்ற அலுவலகமாக மாற்றும் சூழலை உருவாக்குவதும், மேலும் அதன் வழியாக அனைத்து அரசுத்துறைகளிலும் வெளிப்படைத் தன்மை, பொறுப்புடைமை மற்றும்

அலுவலக கோப்புகளைத் தடையின்றி பரிமாற்றம் செய்துக்கொள்ள வழிவகுப்பதாகும்.

மின் அலுவலக (e-Office) மென்பொருளானது தகவல் தொழில்நுட்பவியல் துறையிலும், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையிலும் முன்மாதிரியாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இச்செயலியை படிப்படியாக இதர அரசு துறைகளிலும் / முகமைகளிலும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 3.14. தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் 2017-2018 ஆம் ஆண்டின் செயல்பாடுகள்

### 3.14.1. அரசுத் துறைகளுக்கான "மின் ஆளுமைக்கான மாண்புமிகு முதலமைச்சரின் உயரிய விருது"

அரசுத் துறைகளில், மின் ஆளுமையின் உபயோகத்தினை, உரிய வகையில் அங்கீகரித்து, ஊக்குவிக்கும் வகையில் **"மின் ஆளுமைக்கான மாண்புமிகு முதலமைச்சரின் உயரிய விருது"** ஆண்டுதோறும் அரசுத் துறைகளுக்கு வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

2013-14 மற்றும் 2014-15 ஆம் ஆண்டிற்கான பரிந்துரைகள், அரசுத் துறைகள் மற்றும் மாவட்டங்களிடமிருந்து கீழ்காணும் மூன்று பிரிவுகளில் பெறப்பட்டுள்ளன.

1. அரசின் சேவைகளை மறுவடிவமைத்தலில் சிறந்து விளங்குதல்

2. தொழில் நுட்பத்தைத் பயன்படுத்தி மக்களை மையப்படுத்திய சேவையை மிகச்சிறந்த முறையில் வழங்குதல்

3. மாவட்டங்கள் மற்றும் அரசுத் துறைகளால் மாவட்ட அளவில் மின்-ஆளுமை முயற்சிகள்

விருதுகளைத் தேர்வு செய்ய ஆய்வுக் குழுவின் இறுதி அறிக்கை, அரசின் பரிசீலனையில் உள்ளது.

### 3.14.2. மாணவர்களுக்கான மாண்புமிகு முதலமைச்சரின் மின் ஆளுமைக்கான உயரிய விருது

மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் மின் ஆளுமை ஆர்வலர்களிடையே மின் -ஆளுமையின் விழிப்புணர்வை ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசானது, மாணவர்களுக்கான "மாண்புமிகு முதலமைச்சரின் மின்-ஆளுமைக்கான உயரிய விருது" அறிவிக்கப்பட்டுள்ளது.

2015-16-ஆம் ஆண்டிற்கான அனைத்து பிரிவுகளிலும் பங்கேற்க திருத்தி அமைக்கப்பட்ட நெறிமுறைகளின் அடிப்படையில் பரிந்துரைகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு, (i) மாவட்ட அளவில் (ii) மாநில அளவில் என இரண்டு நிலைகளில் பின்வரும் தலைப்புகளில் நடத்தப்பட்டு மாவட்ட அளவிலான விருது இறுதி செய்யப்பட்டது.

1. கைபேசி தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் செயலிகள்.

2. மாற்றுத்திறனாளி நபர்களுக்காகப் புதுமையான செயலிகள்.

3. நரம்பியல் வலையமைப்பு (Neural Network) தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் செயலிகள்.

### 3.14.3. சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான (MSME Awards) தமிழ்நாடு அரசின் மின் ஆளுமை விருது

மேம்படுத்தப்பட்ட மின் ஆளுமை தீர்வுகளை அங்கீகரித்து ஊக்குவிக்கும் வகையிலும், சமூக தேவைகளுக்கேற்ப புதிய முயற்சிகள், தொழில்நுட்பப் பங்களிப்பினை கருத்திற்கொண்டு செயல்திட்டங்களை உருவாக்கும் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் நிறுவனங்களைக் கண்டறியவும், தமிழ்நாடு அரசானது சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இவ்விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

2015-16 ஆண்டிற்கான பின்வரும் 3 பிரிவுகளிலும் பங்கேற்க பரிந்துரைகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

1. பல்வேறு துறைகளில் சிறந்த மின் ஆளுமை மென்பொருள் பயன்பாடு.

2. கைபேசி சேவைகள் / பொதுமக்கள் சேவைகளை வழங்கும் சிறந்த மின் ஆளுமை மென்பொருள் பயன்பாடு.

3. நூதன மின் ஆளுமை தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுக்கான மின் ஆளுமை விருது

தேர்வுக்குழுவானது சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து பெற்ற பரிந்துரைகளை மறுசீராய்வு செய்துள்ளது. விருதுகளின் இறுதிப்பட்டியலுக்கான பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

### 3.15. தகவல் தொழில் நுட்பப் பாதுகாப்பு தணிக்கை (IT Security Audit)

உலகளவில் இணையவழி தாக்குதல் மற்றும் ஊடுருவல் அதிகரித்து வருகிறது. இதிலிருந்து அரசு இணையதளங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப மென்பொருட்களைப் பாதுகாத்திட, தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பு தணிக்கை ₹1.76 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ் நாடு மின் ஆளுமை முகமையானது, CERT-IN நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களைத் தேர்வு செய்து தகவல் தொழில்நுட்பத் தணிக்கையினை மேற்கொண்டு வருகிறது.

இந்நாள் வரை பல துறைகளிலிருந்து 212 இணையதள முகவரிகள் பாதுகாப்பு தணிக்கைக்கான கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளது. இதுவரை 120 இணையதள முகவரிகளின் பாதுகாப்பு தணிக்கை நிறைவு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள இணைய தளங்களின்

பாதுகாப்பு தணிக்கைக்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

### 3.16.குறுந்தகவல் மூலமாக சேவை நிலை தெரிந்து கொள்ளும் வசதி (SMS Based Service Tracking Facility)

குடிமக்களுக்கு சேவை தொடர்பான தகவல்களை அளிப்பதும், பெற்றிடுவதும் என இருவழி தகவல் தொடர்பு வசதிகளாகும். அரசு இ-சேவை மையங்களில் பயனாளர்கள் தங்களின் விண்ணப்பத்தினைப் பதிவு செய்தவுடன் குறுந்தகவல் மூலமாக விண்ணப்பம் குறித்த தகவல் அனுப்பப்படும். பின்னர், விண்ணப்பத்தின் ஒப்புதல், நிராகரிப்பு அல்லது திருப்பி அனுப்புதல் போன்ற தகவல்களும் குறுந்தகவல் மூலமாக பயனாளர்களுக்கு அனுப்பப்படுகின்றது. பயனாளர்கள் 155250 என்ற எண்ணிற்கு விண்ணப்ப எண்ணை அனுப்புவதன் மூலம் அதன் தற்போதைய நிலையை உடனடியாக அறிந்து கொள்ளும் வசதியை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை அறிமுகப்படுத்தியுள்ளது. இச்சேவை மூலம் 20.05.2018 வரை 6.68 இலட்சப் பயனாளர்கள் பயனடைந்துள்ளனர்.

### 3.17. திறன் மேம்பாட்டிற்கான சிறப்பு மையம் (Centre of Excellence for Capacity Building)

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் 2013-14 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட அறிக்கையில், அரசு ஊழியர்களின் தகவல் தொழில்நுட்ப திறன்களை வளர்ப்பதற்கு உதவியாக "திறன் மேம்பாட்டு சிறப்பு மையம்" நிறுவப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டார். இத்திட்டத்திற்கு ₹94.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை அண்ணா சாலையில் P.T.Lee செங்கல்வராயன் மாளிகையின் ஏழாவது தளத்தில் "திறன் மேம்பாட்டு சிறப்பு மையம்" உருவாக்கப்பட்டு பயிற்சிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.18. மின் ஆளுமை தர கையேடு (e-Governance Standard Manual)

தேசியத் தர நிர்ணய வழிமுறைகளுக்கு ஏற்ப தேசியத் தகவலியல் மையம் (NIC), தமிழ்நாடு இணையக் கல்விக்கழகம் (TVA), எல்காட் (ELCOT), மேம்பட்ட கணினி

வளர்ச்சி மையம் (CDAC) மற்றும் மாநில தரக் கட்டுப்பாட்டு நிறுவனம் (STQC) ஆகியவற்றுடன் இணைந்து தமிழ்நாடு மின்-ஆளுமை முகமையால் (TNeGA) தயாரிக்கப்பட்டுள்ளது.

**3.19. மின் - கையொப்பமிடல் வசதி (e-Sign Facility)**

ஆதார் மூலமாக இணையவழியில் கோப்புகளில் டிஜிட்டல் முறையில் கையொப்பமிட வழிவகை செய்கிறது. மின் கையொப்பமானது ஆதார் விவர சரிபார்ப்பு சேவை மூலம் இணையவழியில் மிக எளிதாக சரிபார்க்கப்படும். மின் கையொப்பமிடல் வசதியைப் பயன்படுத்த ஆதார் எண்ணுடன் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண் அல்லது ஆதார் எண்ணுடன் புலன்சார் அங்கீகாரக் கருவி கொண்டு பயன்படுத்தலாம். பாதுகாப்பு மற்றும் சரிபார்ப்பு வசதிகள், இதன் முக்கிய நன்மைகளாகும்.

பத்திரப் பதிவுத் துறை, தொழிலாளர் நலத்துறை, சர்வ சிக்க்ஷா அபியான் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை உள்ளிட்ட துறைகளுக்கு மின் கையொப்பமிடல்

வசதியினை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 3.20. 2017-2018 ஆம் ஆண்டின் சாதனைகள்

### 3.20.1. இ-தால் (Electronic Transaction Aggregation and Analysis Layer)

இ-தால் (eTaal) என்பது மத்திய மற்றும் மாநில அளவிலான திட்டங்களின் மின் பரிவர்த்தனை புள்ளி விவரங்களை காட்டும் இணையத் தரவுத்தளமாகும்.

நமது மாநிலத்தை பொறுத்த வரை இ-தாலில் கடந்த ஆண்டு இ-தால் இணையதளத்தில் 14 கோடி பரிவர்த்தனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 38 கோடி பரிவர்த்தனைகளாக உயர்ந்து தேசிய அளவில் நமது மாநிலம் நான்காம் இடத்தில் உள்ளது.

### 3.20.2. மின் மாவட்டங்கள்

மின் மாவட்ட திட்டம் மூலம் வழங்கப்படும் சேவைகளில் நடைபெற்ற பரிவர்த்தனைகளின் விவரம்:

| நிதி ஆண்டு | அரசு இ-சேவை மையங்களில் பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | APNA CSC சேவைகளின் பரிவர்த்தனை எண்ணிக்கை (இலட்சத்தில்) | வாக்காளர் அடையாள அட்டை விண்ணப்பங்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | மொத்தம் (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 2011-12 | 0.83 | -- | -- | 0.83 |
| 2012-13 | 1.98 | -- | -- | 1.98 |
| 2013-14 | 9.85 | -- | -- | 9.85 |
| 2014-15 | 24.75 | -- | -- | 24.75 |
| 2015-16 | 110.10 | 20.27 | -- | 130.37 |
| 2016-17 | 116.33 | 41.79 | 11.31 | 169.44 |
| 2017 -18 | 117.34 | 49.02 | 16.40 | 182.77 |
| **மொத்தம்** | 381.20 | 111.09 | 27.71 | 520.01 |

### 3.20.3. ஆதார் நிரந்தர பதிவு மையம் (Aadhaar Permanent Enrolment Centre)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 23.09.2016 அன்று தமிழகம் முழுவதும் ஆதார் பதிவுகள் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் (TNeGA) வாயிலாக மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI), நிரந்தர ஆதார் பதிவு மையங்களை தமிழகத்தில் செயல்படுத்த, மின் ஆளுமை இயக்குநரகம் / தமிழ்நாடு மின் ஆளுமை முகமையை ஆதார் பதிவுகள் மேற்கொள்வதற்கான பதிவாளராகவும், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் (TACTV) மற்றும் எல்காட் நிறுவனத்தையும் ஆதார் பதிவுகள் மேற்கொள்ளும் முகவர்களாகவும் நியமித்தது.

தமிழகம் முழுவதும் உள்ள வட்டாட்சியர் அலுவலகங்கள், சென்னை மாநகராட்சி தலைமையகம் மற்றும் மண்டல அலுவலகங்களில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வாயிலாக நிரந்தர பதிவு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், சென்னை நீங்கலாக அனைத்து மாநகராட்சி மண்டல அலுவலகங்களிலும்,

மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் எல்காட் வாயிலாக நிரந்தர ஆதார் பதிவு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மற்றும் எல்காட் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் இந்தப் பதிவு மையங்கள் வாயிலாக பொதுமக்கள் அனைவரும் தங்களது வாழ்விடம் சார்ந்த தரவுகளை மாற்றுதல் மற்றும் புதுப்பித்தலை மேற்கொண்டு வருகின்றனர்.

**3.20.3.1. பதிவு செய்யப்பட்ட மற்றும் வழங்கப்பட்டுள்ள ஆதார் எண்ணிக்கை:**

| பதிவு மையங்கள் | மொத்த பதிவுகளின் எண்ணிக்கை (01.10.2016– 31.03.2018) இலட்சத்தில் | உருவாக்கப்பட்டுள்ள ஆதார் எண்ணிக்கை (01.10.2016–31.01.2018) UIDAI வலைதளத்திலிருந்து பெறப்பட்டது. இலட்சத்தில் |
|---|---|---|
| தமிழ்நாடு அரசு கேபிள் டிவி | 22.36 | 17.99 |
| எல்காட் | 12.15 | 9.27 |
| **மொத்தம்** | **34.51** | **27.27** |

### 3.21. உள்ளங்கையில் சான்றிதழ் திட்டம் (Tiny URL)

"**உள்ளங்கையில் சான்றிதழ்**" திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 23.05.2017 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. "இணைய முகவரி சுருக்கம் (tiny url)" பயன்பாடு CDAC உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட சான்றிதழின் விவரம் பதிவு செய்யப்பட்ட கைப்பேசி எண்ணிற்குக் குறுஞ்செய்தியாக (SMS) இணைய முகவரி சுருக்கமாக அனுப்பி வைக்கப்படும். இதன் மூலம் பொதுமக்கள் இணையத்தின் உதவியுடன் இ-சேவை மையங்களுக்குச் செல்லாமல் அவர்களது உள்ளங்கையில் உள்ள ஸ்மார்ட் போன்கள் மூலமாக சான்றிதழ்களைத் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

### 3.22. பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சக்க்ஷார்தா அபியான் (PMGDISHA)

மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள 6 கோடி மக்களை 31 மார்ச் 2019-க்குள் டிஜிட்டல் கல்வியறிவு பெற்றவர்களாக மாற்றவும், 40% கிராமப்புறக் குடும்பங்களிலிருந்து

குறைந்தது ஒரு நபர் டிஜிட்டல் கல்வியறிவு பெற்றவராகவும் உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சக்க்ஷார்**தா** அபியான் (PMGDISHA) திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் கிராமப்புறங்களில் உள்ள குடிமக்கள் கணினி இயக்க மற்றும் டிஜிட்டல் சாதனங்களான டேப்லட், ஸ்மார்ட் போன் போன்றவற்றை இயக்க, மின் அஞ்சல் அனுப்ப/பெற, இதர அரசு சேவைகளைப் பெறவும் மற்றும் ரொக்கமில்லா பணப் பரிவர்தனைகள் செய்யவும் வழிவகை செய்யும். இத்திட்டமானது கிராமப்புறங்களில் குறிப்பாக ஒதுக்கப்பட்ட சமூக பிரிவுகளான அட்டவணை பிரிவினர் / பழங்குடியினர், சிறுபான்மையினர், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள், பெண்கள் மற்றும் மாற்று திறனாளிகள் என அனைவரும் பயன்பெற உதவுகின்றது.

### 3.22.1.. மாநிலத்தின் இலக்கு

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராம மற்றும் நகர்புறங்களில் (சென்னை, மதுரை மற்றும் கோவை மாநகராட்சிகள் நீங்கலாக) உள்ள 26.79 இலட்சம் மக்கள் டிஜிட்டல் கல்வியறிவு பெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு கிராம பஞ்சாயத்திலிருந்தும் சராசரியாக 200-300 பயனாளிகள் பயன் பெறுவர். இப்பயனாளிகளை மாவட்ட மின் ஆளுமை சங்கம், மாவட்டத்தின் மக்கள் தொகை மற்றும் அப்பகுதியின் தேவைக்கேற்ப தேர்ந்தெடுக்கும். மேலும், டிஜிட்டல் படிப்பறிவு இல்லாத ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒருவர் மற்றும் 14-60 வயதுக்குட்பட்டவர்கள் இத்திட்டத்தில் பயிற்சி பெற தகுதியானவர்கள் ஆவார்கள்.

தமிழ் நாட்டில் உள்ள அனைத்து கிராமம் மற்றும் நகர்புறங்களில் இத்திட்டத்திற்கான பயிற்சி வகுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3.23. அம்மா இ-கிராமம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டபேரவை விதி எண் 110 கீழ் ‘அம்மா இ-கிராமம்’ திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தில் முன்னோடியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் நோக்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் உள்ள மக்களுக்குத் தொலைத்தொடர் மருத்துவம், தொலைத்தொடர் கல்வி, LED மின்விளக்குகள், WIFI-Hotspot, திறன் மேம்பாடு சேவை, டிஜிட்டல் அறிவாற்றல் மையம், பொது சேவை மையம் போன்ற சேவைகளைக் கொண்டு சேர்ப்பதாகும்.

இத்திட்டம் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் CSR நிதியின் மூலம் செயல்படுத்தபடவுள்ளது. இது நாள் வரை ₹1.62 கோடி நிதி பெறப்பட்டுள்ளது. முதற்கட்டமாக இத்திட்டம் 6 கிராமங்களில் செயல்படுத்தப்படும்.

### 3.24. அம்மா இ-சேவை கைபேசி செயலி

**Assured Multi Model Access to e-Services (AMMA)**

மக்களை மையமாக கொண்ட 25 இ-சேவைகளை அம்மா இ-சேவை கைபேசி செயலி (Mobile App) மூலம் உருவாக்க அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. மின் மாவட்ட திட்டத்தின் மூலம் வழங்கப்படும் குடிமக்களை மையப்படுத்திய சேவைகளை கைபேசி செயலி மூலம் வழங்குவதே இதன் முக்கிய நோக்கம் ஆகும். இந்தக் கைபேசி செயலி மூலம், குடிமக்கள் எங்கிருந்தும் எந்த நேரத்திலும் சேவைகளைப் பெற முடியும்.

இ-சேவை திட்டத்தின் கீழ் வழங்கப்படும் 11 பயன்பாட்டு சேவைகள் முதற்கட்டமாக அம்மா கைபேசி செயலி மூலம் ஒருங்கிணைத்து வழங்கப்படவுள்ளது. இதன் மூலம் அரசின் சேவைகளை ஸ்மார்ட் போன்களைப் பயன்படுத்தி விண்ணப்பம் செய்து பொதுமக்கள் சான்றிதழ்களை பெற முடியும்.

இச்செயலி வாயிலாக சென்னை குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் கட்டணம் செலுத்தும் சேவை விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

**3.25. புதுயுக ஆளுகைக்கான பொது அலைபேசி செயலி (UMANG- Unified Mobile Application for New Age Governance)**

இந்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் (Meity) கீழ் செயல்பட்டுவரும் தேசிய மின் ஆளுமை திட்டத்தின் மூலம் அலைபேசி ஆளுமைக்காக உமாங் (UMANG) செயலி தேசிய அளவில் உருவாக்கப்பட்டுள்ளது. மத்திய அரசுத்துறைகள் முதல் உள்ளாட்சித் துறைகள் வரை நாடு முழுவதும் மின் ஆளுமை மூலம் வழங்கபட்டு வரும் சேவைகளை ஒரே தரவுதளத்தின் கீழ் இச்செயலி சேவைகளை வழங்கும்.

முதல் கட்டமாக மின்-மாவட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டுவரும் சேவைகளில் வருவாய்த் துறையைச் சார்ந்த மூன்று சேவைகள் உமாங் (UMANG) செயலியில் ஒருங்கிணைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் அரசின் சேவைகளை ஸ்மார்ட் போன்களைப் பயன்படுத்தி விண்ணப்பம் செய்து பொதுமக்கள் சான்றிதழ்களைப் பெற முடியும்.

### 3.26. நமது அரசு (My Gov)

2017-18 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களால் "நமதுஅரசு" திட்டம் அறிவிக்கப்பட்டது. நமதுஅரசு (namadhuarasu.in) திட்டமானது அரசின் குடிமக்கள் தளத்தின் வாயிலாக ஆட்சி மற்றும் கொள்கை தயாரிப்பில், குடிமக்களின் பங்கேற்பை ஊக்குவிக்கிறது. இத்திட்டத்தினை ₹91.80 இலட்சம் செலவில் செயல்படுத்துவதற்கு அரசு நிர்வாகம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

### 3.27. இ-மடல் (e-Newsletter)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 11.10.2017 அன்று இ-மடல் (e-Newsletter)

வெளியிடப்பட்டது. இ-மடல் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடப்படுகிறது. இதுவரை 10 இதழ்கள் வெளிவந்துள்ளன. இதில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் தகவல் தொழில்நுட்பத் திட்டங்கள் பொது கட்டுரைகளாக வெளியிடப்படுகிறது. இதன் மூலம், சமீபத்திய தொழில்நுட்ப நிகழ்வுகளைப் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் எளிதில் அறிந்து கொள்ள உதவும்.

### 3.28. மின் ஆளுமை கொள்கை (eGovernance Policy)

மாண்புமிகு தமிழ்நாடு முதமைச்சர் அவர்களால் மின்-ஆளுமைக் கொள்கை 02.01.2018 அன்று வெளியிடப்பட்டது.

**இக்கொள்கையின் நோக்கங்கள்** :

மாநில அரசின் பல்வேறு துறைகளில் மின்-ஆளுமை செயல்பாடுகளுக்கு வழிகாட்டுதல். கணினி, மென்பொருள் மற்றும் தரவு ஆகியவற்றுக்கு இடையே பொதுவான கட்டமைப்பு தரநிலைகள் மற்றும் தடையற்ற

இடைசெயல்பாட்டு மற்றும் பெயர்வுத்திறனை உறுதிசெய்தல். குடிமக்களுக்கு இணையவழி சேவைகளை செயல்திறனுடன் வழங்குவதை ஊக்குவித்தல்.

மேலும், அரசு துறைகளின் உற்பத்தி திறனை மேம்படுத்துதல். தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் வன்பொருள் ஆதாரங்களை பகிர்வு செய்தல் மற்றும் மீண்டும் பயன்படுத்துதலை எளிதாக்குதல், பிராட்பேண்ட் இணைப்புகளின் ஊடுருவலை அதிகரித்தல். அனைத்து மின்-ஆளுமை பயன்பாடுகள்/ இணையதளங்கள் / வலைதளங்களில் தமிழ் மொழி மற்றும் தமிழ் ஒருங்குறித் தரநிலை பயன்பாட்டை ஊக்குவித்தல். மிக குறைந்த செலவில் அரசு - குடிமக்கள் (G2C), அரசு - ஊழியர்கள் (G2E), அரசு - அரசு (G2G) மற்றும் அரசு - வணிகம் (G2B) சேவைகள் வழங்குவதற்கு ஒரு ஒருங்கிணைந்த சூழலை உருவாக்குதல்.

### 3.29. நிதி நிலை செயல்பாடுகள்

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மாநில அரசால் நிர்வாக செலவுகளுக்கு மானிய உதவி பெற்று செயல்படுகிறது. மின் மாவட்டத் திட்டம், திறன் மேம்பாடு (Capacity building), மாநிலச் சேவைகள் விநியோக நுழைவாயில் (SSDG), மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம் (SRDH) ஆகிய திட்டங்களை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தியுள்ளது.

மேகக் கணினி சொத்து மேலாண்மை திட்டம் (Cloud Based Asset Management System), குறுந்தகவல் மூலமாக சேவை நிலை தெரிந்து கொள்ள வசதி, தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு (TNGIS), திறன் மேம்பாட்டு மையம், தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு தணிக்கை ஆகிய திட்டங்களுக்கு மாநில அரசால் நிதி வழங்கப்படுகிறது.

டிசம்பர் 2016 முன்பு வரை தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் வருவாய் பங்கினை மாவட்ட மின்னாளுமை சங்கங்கள் வாயிலாக பெறப்பட்டு வந்தன. அதன் பின்னர்

மின் பணப்பை (e-Wallet) நடைமுறைப்படுத்தப்பட்டு நேரடியாக தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் வங்கி கணக்கிற்கே வருவாய் பெறப்பட்டு வருகிறது.,

| வருடம் | மொத்த வரவு (ரூபாய் கோடிகளில்) |
|---|---|
| 2015-2016 | 3.04 |
| 2016-2017 | 10.49 |
| 2017-2018 | 14.30 |

மேற்கூறிய வரவானது சரக்கு மற்றும் சேவை வரியினை உள்ளடக்கியது. இந்த வருவாய் பங்கு தொகையில் இருந்து உள்கட்டமைப்பு ,நிர்வாக செலவவினங்கள் மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரம், பயிற்சி போன்ற செலவினங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

# அத்தியாயம் - IV

# தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்

## 4.1. முன்னுரை

அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன் லிமிடெட் இந்திய நிறுவனங்கள் சட்டம் 1956–ன் கீழ் பதிவு செய்யப்பட்டு, குறைந்த விலையில் உயர்தர கேபிள் டிவி சேவைகளைக் கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மூலம் பொதுமக்களுக்கு வழங்கவேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் 04.10.2007 அன்று துவங்கப்பட்டது. இந்நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் தமிழக அரசு இந்நிறுவனத்திற்கு மூலதனப் பங்காக ₹25 கோடியும், கடனாக ₹36.35 கோடியும் வழங்கியது. 2008-ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, மற்றும் வேலூர் என 4 இடங்களில் MPEG2 தொழில்நுட்பத்துடன் கூடிய டிஜிட்டல் கட்டுப்பாட்டு அறைகள் துவங்கப்பட்டன. இந்நிறுவனத்தின் வர்த்தக செயல்பாடு ஜீலை 2008-ல் துவங்கியது. எனினும்,

ஓராண்டுக்குப் பின்னர் பல்வேறு காரணங்களினால் இந்நிறுவனம் செயலிழந்த நிலையில் இருந்தது.

### 4.2. நிறுவனத்தின் புனரமைப்பு

உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படும் என்றும், பொதுமக்களுக்கு உயர்தரமான கேபிள் டிவி சேவை வழங்கப்படும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அளித்த வாக்குறுதியினை நிறைவேற்றும் வகையிலும், இந்நிறுவனத்தினைப் புனரமைப்பதற்காக தமிழக அரசு மே 2011-ல் ₹3 கோடியைக் கடனாக வழங்கியது. மேலும், இந்நிறுவனத்தின் பெயர் " தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் " என மாற்றம் செய்யப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் 30.8.2011 அன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தரமான கேபிள் டிவி சேவையை மாதம் ₹70/- என்ற குறைந்த கட்டணத்தில்


சந்தாதாரர்களுக்கு வழங்கும் எனவும், அதில் ₹20/-ஐ கேபிள் ஆபரேட்டர்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்குச் செலுத்துவார்கள் எனவும் அறிவித்தார்கள்.

இவ்வறிவிப்பினைச் செயலாக்கும் விதத்தில் இந்நிறுவனம் தனது 4 சொந்த டிஜிட்டல் கட்டுப்பாட்டு அறைகளுடன், கூடுதலாக 27 மாவட்டங்களில் அனலாக் கேபிள் டிவி கட்டுப்பாட்டு அறைகளைக் குத்தகைக்கு எடுத்தது. இதன் மூலம், தமிழ்நாடு முழுவதும் (சென்னை தவிர) கேபிள் டிவி சேவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 02.09.2011 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், சென்னை மாநகர கேபிள் டிவி சேவை 20.10.2012 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.


### 4.3. நிறுவன அமைப்பு

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனமானது தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களின் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் கேபிள் டிவி சேவை மட்டுமல்லாமல், பொதுமக்களுக்கு இ-சேவை மற்றும் இணையதள சேவையையும் வழங்கி தன் எல்லையை விரிவுபடுத்திக் கொண்டுள்ளது. இந்நிறுவன அமைப்பு முறை கீழ்வருமாறு:-




**நிறுவன அமைப்பு**

**படம் – 28**




**மாவட்ட அளவிலான நிறுவன அமைப்பு**
**படம் – 29**

## 4.4. கேபிள் டிவி சேவை

இந்நிறுவனத்தின் வருகைக்கு முன்னர் பல தனியார் கேபிள் டிவி நிறுவனங்கள் ₹150/- முதல் ₹250/- வரை மிக அதிகமான மாதாந்திர கட்டணத்தைப் பொதுமக்களிடமிருந்து வசூலித்து வந்தன.

இந்நிறுவனத்தின் மாதம் ₹70/- என்ற குறைந்த கட்டணத்திலான தரமான கேபிள் சேவை, கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மற்றும் பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது. இது இந்நிறுவனத்தின்

சந்தாதாரர்களின் எண்ணிக்கை 02.09.2011 அன்று 4.94 இலட்சத்தில் இருந்து தற்போது 26,474 கேபிள் டிவி ஆபரேட்டர்கள் வாயிலாக 70.52 இலட்சமாக உயர்ந்துள்ளதில் இருந்து தெளிவாகிறது.

**4.4.1. உட்கட்டமைப்பு**

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் சென்னை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய ஐந்து இடங்களில் தனது சொந்த டிஜிட்டல் கட்டுப்பாட்டு அறை மூலமாகவும், மேலும் தமிழகம் முழுவதும் 77 இடங்களில் உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்களின் கட்டுப்பாட்டு அறைகளைக் குத்தகைக்கு எடுத்து அவற்றின் மூலமாகவும், பொதுமக்களுக்குக் கேபிள் டிவி சேவையை வழங்கி வருகிறது.

### 4.4.2. டிஜிட்டல் கேபிள் டிவி சேவை

மத்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்தின் அறிவிப்பின்படி, நாடு முழுவதும் உள்ள கேபிள் டிவி சேவைகள் 4 கட்டங்களாக டிஜிட்டல் மயமாக்கப்பட வேண்டும். இதன்படி, நான்காவது கட்ட கடைசி நாளான 31.3.2017-க்குப் பிறகு நாடு முழுவதும் கேபிள் டிவி சேவைகள் டிஜிட்டல் முறையில் மட்டுமே வழங்கப்பட வேண்டும். எனவே, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், டிஜிட்டல் முறையில் கேபிள் டிவி சேவையை வழங்குவது தொடர்பாக 5.7.2012 அன்று சென்னை மாநகருக்கும், 23.11.2012 அன்று தமிழ்நாட்டின் எஞ்சிய பகுதிகளுக்கும் உரிமம் (DAS Licence) கோரி மத்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்திடம் விண்ணப்பித்தது.

தமிழ்நாடு அரசின் இடைவிடாத தொடர் முயற்சிகளின் காரணமாக மத்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம், 17.4.2017 அன்று தமிழ்நாடு அரசு

கேபிள் டிவி நிறுவனத்திற்கு டிஜிட்டல் ஒளிபரப்பு உரிமம் (DAS License) வழங்கியுள்ளது. இந்தியாவிலேயே மாநில அரசு நிறுவனத்திற்கு டிஜிட்டல் ஒளிபரப்பு உரிமம் வழங்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும்.

### 4.4.3. டிஜிட்டல் கேபிள் டிவி சேவை துவக்கம்

இந்நிறுவனத்திற்கு மத்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் டிஜிட்டல் உரிமத்தினை வழங்கிய பின்னர், தனது டிஜிட்டல் கேபிள் டிவி சேவையைத் தொடங்குவதற்காக இந்நிறுவனத்திற்கு தமிழ்நாடு அரசு நிர்வாக அனுமதி அளித்து ஆணை வெளியிட்டது.

இதற்கிடையே சென்னையிலுள்ள டிஜிட்டல் கட்டுப்பாட்டு அறை MPEG2 என்ற பழைய தொழில்நுட்பத்திலிருந்து MPEG4 என்ற புதிய தொழில்நுட்பத்திற்குத் தரம் உயர்த்தப்பட்டது. இதன்மூலம் துல்லியமான முறையில் அதிக எண்ணிக்கையிலான சேனல்களை டிஜிட்டல் முறையில் வழங்க இயலும்.

MPEG4 தரம் உயர்த்தப்பட்ட சென்னை டிஜிட்டல் கட்டுப்பாட்டு அறை மற்றும் இலவச செட்டாப் பாக்ஸ் வழங்கும் சேவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 01.09.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

### 4.4.4. செட்டாப் பாக்ஸ் வழங்குவதில் முன்னேற்றம்

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் 60 இலட்சம் தரமான வரையறை செட்டாப் பாக்ஸ்கள் (Standard Definition Set Top Box) மற்றும் 10 லட்சம் உயர் வரையறை செட்டாப் பாக்ஸ்கள் (High Definition Set Top Box) கொள்முதல் செய்வதற்கு 06.05.2017 அன்று உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி அறிவித்தது. இதன்மூலம், இரண்டு நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டு, 60 லட்சம் தரமான வரையறை செட்டாப் பாக்ஸ்கள் (Standard Definition Set Top Box) மற்றும் 10 லட்சம் உயர் வரையறை தர செட்டாப் பாக்ஸ்கள் (High Definition Set Top Box) கொள்முதல் செய்வதற்கு ஒப்புதல் கடிதம் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனமானது 26,474 கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மூலம் 70.52 இலட்சம் சந்தாதாரர்களைக் கொண்டுள்ளது. இதுவரை 23.52 இலட்சம் செட்டாப் பாக்ஸ்கள் 15,280 கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளன. இதில் 22.88 இலட்சம் செட்டாப் பாக்ஸ்கள் செயலாக்கம் செய்யப்பட்டுள்ளன.

### 4.4.5. டிஜிட்டல் கேபிள் டிவி சேவையின் மாதக் கட்டணம்

டிஜிட்டல் கேபிள் டிவி சேவையில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் சிறப்பான இரண்டு தொகுப்புகளை அறிவித்துள்ளது. இதன்படி, தொகுப்பு-1-ல் ₹125/- (வரிகள் தனி) என்ற மாதக் கட்டணத்தில் 208 சேனல்களையும் மற்றும் தொகுப்பு-2-ல் ₹175/- (வரிகள் தனி) என்ற மாதக் கட்டணத்தில் 300 சேனல்களையும் வழங்கி வருகிறது.

### 4.4.6. உயர் வரையறை செட்டாப் பாக்ஸ் சேவை (High Definition Cable TV - HD)

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் விரைவில் உயர் வரையறை செட்டாப் பாக்ஸ் சேவையினை (High Definition Cable TV - HD) துவங்க உள்ளது. இதற்காக சென்னையிலுள்ள டிஜிட்டல் கட்டுப்பாட்டு அறை தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

### 4.5. அரசு இ-சேவை மையங்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 4.8.2014 அன்று மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தபடி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், தமிழ்நாடு முழுவதும் 659 அரசு இ-சேவை மையங்களைத் தற்போது செயல்படுத்தி வருகிறது.

அரசு இ-சேவை மையங்களில் போதிய தொழில்நுட்பத்துடன் தேவையான இணையதள வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, பொதுமக்களுக்கான மத்திய மற்றும் மாநில அரசு துறைகளின் பல்வேறு சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மூலம் 2015-ல் துவக்கப்பட்ட அரசு இ-சேவை மையங்கள் வாயிலாகக் கடந்த மூன்று வருடங்களில் 1.52 கோடி மக்கள் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு அரசு துறை சார்ந்த சேவைகளைப் பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

**4.6. நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்கள்**

தமிழ்நாடு அரசு தனது 01.08.2016 நாளிட்ட தகவல் தொழில் நுட்பவியல் துறை அரசாணை எண்.10 மூலம் மின்ஆளுமை இயக்குநரகம்/ தமிழ்நாடு மின்ஆளுமை முகமையை தமிழ்நாட்டில் புதிய ஆதார் சேர்க்கை செய்யும் பணிக்கான பதிவாளராக நியமித்தது. அதன்கீழ், எல்காட் மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் ஆகியவற்றைப் புதிய ஆதார் சேர்க்கை பதிவு செய்யும் நிறுவனங்களாக நியமித்தது.

இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு ஆதார் பதிவு செய்தல் தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ள குறியீட்டு எண்.2193-யை ஒதுக்கீடு செய்துள்ளது.

அதன்படி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் 01.10.2016 முதல் நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தற்சமயம், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்களை 32 மாவட்டங்களிலுள்ள வட்டாட்சியர் அலுவலகங்கள்; சென்னை தலைமைச் செயலகம்; பெருநகர சென்னை மாநகராட்சி தலைமை அலுவலகம்; வருவாய்த்துறை ஆணையர் அலுவலகம்; சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டல அலுவலகங்கள் ஆகியவற்றில் செயல்படுத்தி வருகிறது. இவை தவிர, சென்னையில் நடமாடும் ஆதார் சேர்க்கை மையம் ஒன்று 27.10.2016 முதல் முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நோயுற்று படுக்கையில் உள்ளவர்களின் நலனுக்காகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்சமயம் 32 மாவட்டத்திலுள்ள 309 நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்களில் உள்ள 583 முகப்புகள் (Counters)

மூலம் 1.10.2016 முதல் 31.3.2018 வரை 22.48 இலட்சம் புதிய ஆதார் பதிவுகளும் மற்றும் 16.55 இலட்சம் ஆதார் பதிவு திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**4.7. இணையதள சேவை**

14.9.2015 அன்று மத்திய தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை இந்நிறுவனத்திற்கு இணையதள சேவை வழங்குநர் உரிமம் (ISP License) வழங்கியுள்ளது. இதைத்தொடர்ந்து, "பொதுமக்களுக்குக் குறைந்த கட்டணத்தில் சிறந்த இணைய சேவை வழங்கப்படும்" என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, "இல்லந்தோறும் இணையம்" திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1.3.2016 அன்று மாவட்ட தலைநகரங்களில் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டம் மாநிலத்தின் அனைத்து பகுதிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டு, இதுவரை 5,135 பயனீட்டாளர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

மேலும், இணையதள தொலைக்காட்சி (IPTV) சேவையினை வழங்குவதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, அதற்கான விரிவான திட்ட அறிக்கை (DPR) தயார் செய்யப்பட்டு வருகிறது.

### 4.7.1. இலவச பொது Wi-fi சேவைகள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 23.9.2016 அன்று வெளியிட்ட அறிக்கையில், 'தமிழகம் முழுவதும் அதிக அளவில் மக்கள் கூடும் இடங்களில் அம்மா Wi-Fi மண்டலங்கள் அமைக்கப்படும் என்றும், முதற்கட்டமாக 50 இடங்களில் செயல்படுத்தப்படும்' என்றும் அறிவித்திருந்தார். அதன்படி தமிழக அரசு, 50 இடங்களில் அம்மா Wi-fi மண்டலங்கள் அமைக்க ₹8.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளது. முதற்கட்டமாக இத்திட்டம், சென்னை (உழைப்பாளர் சிலை - மெரினா கடற்கரை), கோவை (காந்தி பேருந்து நிலையம்), சேலம் (மத்திய பேருந்து நிலையம்), திருச்சி (மத்திய பேருந்து நிலையம்), மதுரை (எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம்,

மாட்டுத்தாவணி) ஆகிய 5 இடங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 05-04-2018 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

### 4.7.2. பள்ளிகளுக்கு அகண்ட அலைவரிசை இணையம்

தமிழ்நாட்டில், கல்வியில் பின்தங்கிய வட்டாரங்களில் உள்ள 366 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ₹9.06 கோடி மதிப்பீட்டில் இலவச இணைய சேவை வசதி ஏற்படுத்த நிர்வாக அனுமதி அளித்து அரசு உத்தரவிட்டுள்ளது. முதல் கட்டமாக, 50 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ₹1.23 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மூலம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


### 4.8 பாரத்நெட் (BharatNet)

தமிழ்நாட்டிலுள்ள 12,524 கிராமங்களையும் வட்டார தலைமையிடத்தில் கண்ணாடி இழை வடம் மூலம்

இணைக்கும் பாரத்நெட் திட்டத்தை ₹1230.90 கோடி செலவில் செயல்படுத்த மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் மத்திய மாநில அரசுகளுக்கிடையே 26.12.2017 அன்று புது டெல்லியில் கையெழுத்தானது. திட்டச் செயலாக்கம் தொடர்பான பூர்வாங்கப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

## 4.9. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் நிதிநிலை செயல்பாடு

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தமிழக அரசின் 25 கோடி ரூபாய் பங்கு மூலதனத்தில் தொடங்கப்பட்டது. மேலும் இந்நிறுவனம் ₹33 கோடியை அரசிடமிருந்து கடனாகப் பெற்றுள்ளது. 2008-09 நிதியாண்டில் ₹2.44 கோடி வருவாய் மட்டுமே ஈட்டிய இந்நிறுவனம், 2013-14 நிதியாண்டில் ₹163.92 கோடி வருவாயும், 2014-15 நிதியாண்டில் ₹181.91 கோடி வருவாயும், 2015-16 நிதியாண்டில் ₹223.53 கோடி வருவாயும், 2016-17 நிதியாண்டில் ₹235.9 கோடி வருவாயும் ஈட்டியுள்ளது.





**படம் – 30**

இந்நிறுவனம், தொடங்கப்பட்ட ஆண்டிலிருந்து 2011-12 நிதியாண்டு வரை சுமார் ₹15.03 கோடி நட்டத்தில் இருந்தது. எனினும், 2011-ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் இந்நிறுவனம் புனரமைக்கப்பட்டு, புத்துயிர் அளித்தபின், சந்தாதாரர் எண்ணிகையை அதிகரித்ததன் வாயிலாகவும், உள்ளூர் தொலைக்காட்சி சேனல் வருவாய் மூலமும் 2012-13 முதல் 2016-17 வரை அனைத்து நிதியாண்டுகளிலும் இலாபம் ஈட்டியுள்ளது.

### 4.9.1. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் இலாப நட்ட விவரம்

இந்நிறுவனம் 2016-17 நிதியாண்டில் ₹235.9 கோடி வருவாயுடன், ₹18.22 கோடி இலாபமும் ஈட்டியுள்ளது. 2016-17ஆம் ஆண்டிற்கான ஈவுத்தொகையாக ₹1.25 கோடியை அரசுக்கு செலுத்தியுள்ளது.




**படம் – 31**

இந்நிறுவனம் 2017-18 நிதியாண்டில் ₹248.95 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. மேலும், பொதுமக்களுக்கு இலவசமாக செட்டாப் பாக்ஸ்கள் வழங்கும் பொருட்டு

இதுவரை 24 இலட்சம் டிஜிட்டல் செட்டாப் பாக்ஸ்கள் வாங்கப்பட்டுள்ளன. இதற்காக ₹28 கோடி தேய்மானத் தொகை கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளதால், இந்நிறுவனம் ₹1.68 கோடி (தணிக்கைக்கு முன்) இலாபம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அத்தியாயம் - V

# தமிழ் இணையக் கல்விக்கழகம்

## 5.1. முன்னுரை

இணையம் வழியாக, தமிழ் ஆதாரங்களைத் தமிழ்ச் சமுதாயத்தினரும் தமிழில் ஆர்வமுள்ளவர்களுக்கும் தமிழ் மொழி, இலக்கியம், கலை, பண்பாடு போன்றவைகளை அளிக்கும் உயரிய நோக்கத்துடன் தமிழ் இணையக் கல்விக்கழகம் தொடங்கப்பட்டது. தமிழ் இணையப் பல்கலைக்கழகமாக முதலில் அறியப்பட்டு பின்னர் தமிழ் இணையக் கல்விக்கழகமாக 16.07.2010-ல் பெயர் மாற்றம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது. தமிழ் இணையக் கல்விக்கழகம் 2000 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் தேதி தமிழக அரசால் சங்கப்பதிவுச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் இணையதளம் 2001 ஆம் ஆண்டு பிப்ரவரி 17 ஆம் நாள் துவக்கப்பட்டது.




**படம் – 32**

## 5.2. நோக்கம்

- தமிழ்மொழி, இலக்கியம் மற்றும் பண்பாடு போன்ற ஆதாரங்களைப் புலம் பெயர்ந்த தமிழர்களுக்கும் மற்றும் தமிழ் ஆர்வலருக்கும் இணையம் வழியாக அளித்தல்.

- புலம் பெயர்ந்த தமிழர்களுக்காக தமிழ் பாரம்பரியத்தோடு கூடிய தமிழ் கற்றலுக்கான பாடங்களைத் தொகுத்தல்.

- புலம் பெயர்ந்த தமிழர்களால் உருவாக்கப்பட்ட அனைத்து கல்விப் பொருண்மைகளைத் தொகுத்துப் பொதுமக்களுக்கு வெளியிடுதல்.

- தமிழியியலில் சான்றிதழ், பட்டயம் மற்றும் பட்டம் போன்ற படிப்புகளைத் தஞ்சாவூரிலுள்ள தஞ்சைப் பல்கலைக்கழகம் வழியாக அளித்தல்.

- கணினித்தமிழை வளர்த்தல்

## 5.3. செயல்பாடுகள்

### 5.3.1 கல்வித் திட்டங்கள்

தமிழ் இணையக் கல்விக்கழகம் அரிச்சுவடி முதல் பட்டப்படிப்பு வரையான கல்வித் திட்டங்களை வகுத்து வழங்கி வருகிறது.

### 5.3.2 மின்நூலகம்

அரிய அச்சு நூல்கள், செய்தித்தாள்கள், பருவ இதழ்கள், எழுத்துப்பிரதிகள், ஒளிப்படங்கள் மற்றும் ஒளி

ஒலி தொகுப்புகளின் தரம் மற்றும் எண்ணிக்கையை வலுப்படுத்துதல். மின் நூலகத்தின் செயல் திறனை மாற்றுத்திறனாளிகள் உட்பட அனைவரும் பயன்படுத்தும் வகையில் அனைத்து மின்னனு சாதனங்களில் இயங்க ஏதுவாக மின்நூலகம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

#### 5.3.2.1. தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளை ஆவணப்படுத்தலும், காப்பதும்

தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் தொடர்பான அரிய பொருட்கள் மற்றும் ஆவணங்களை மின்னுருவடிவில் பாதுகாத்து ஆவணப்படுத்தி தேடுதல் வசதியுடன் இணையத்தில் பதிவேற்றம் செய்து உலகெங்கும் உள்ள ஆய்வாளர்கள் பயன்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 5.3.3. கணினித் தமிழ்

கணினித் தமிழ் ஆய்வினை ஊக்குவிக்க, தமிழ் இணையக் கல்விக்கழகம் தேவையான தரவுகளையும் தமிழ் மென்பொருட்களையும் உருவாக்குகிறது.

### 5.3.4. தமிழ் மென்பொருள் உருவாக்கல்

தமிழ் இணையக் கல்விக்கழகம் தமிழக அரசின் முகவராக செயல்பட்டு தமிழில் மென்பொருள்களை உருவாக்குவதற்கு நிதியுதவு அளிக்கிறது. மேலும், பொதுமக்கள் / நிறுவனங்கள் உருவாக்கும் மென்பொருள்களைச் சோதித்துச் சான்றளித்தல் ஆகிய பணிகளைச் செய்துவருகிறது.

### 5.4. கல்வித் திட்டங்கள்

தமிழ் இணையக் கல்விக்கழகம் மழலைக் கல்வி, சான்றிதழ்க் கல்வி, பட்டயம், மேற்பட்டயம், இளநிலைத் தமிழியல் பட்டம் ஆகிய கல்வித் திட்டங்களை அளித்து வருகிறது. இக்கல்வித் திட்டங்களில் பயில்வதற்கு வயது உச்சவரம்பு ஏதுமில்லை. அதன் விவரங்கள் பின்வருமாறு:

### 5.4.1 மழலைக் கல்வி

தமிழ்ப் பாடங்களைப் படங்கள், காட்சிகள், படக்கதைகள், கவிதைகள் மற்றும் பாடல்கள் மூலமாகவும்

பார்த்தும் கேட்டும் மகிழ்ந்து ஆர்வத்துடன் கற்கும் வகையில் மழலைக் கல்வி என்ற பகுதியில் பாடங்கள் தரப்பட்டுள்ளன. இதில், எழுத்துகள், உரையாடல், கதைகள், பாடல்கள், வழக்குச் சொற்கள், ஒலி, ஒளிக் காட்சிகள் வாயிலான இயக்கப்படங்கள் ஆகியவை அடங்கும்.

### 5.4.2. சான்றிதழ் (1 முதல் 6 ஆம் வகுப்பு வரை)

சான்றிதழ்க் கல்வி கீழ்க்காணும் மூன்று நிலைகளை உடையது.

- அடிப்படை நிலை (வகுப்புகள் 1&2)
- இடை நிலை (வகுப்புகள் 3&4)
- மேல் நிலை (வகுப்புகள் 5&6)

### 5.4.3. மேற்சான்றிதழ் (7 முதல் 12 ஆம் வகுப்பு வரை)

மேற்சான்றிதழ்க் கல்வி கீழ்க்காணும் மூன்று நிலைகளை உடையது.

- நிலை 1 (வகுப்புகள் 7&8)
- நிலை 2 (வகுப்புகள் 9&10)
- நிலை 3 (வகுப்புகள் 11&12)

### 5.4.4. இளநிலைத் தமிழியல் பட்டக் கல்வி

இளநிலைத் தமிழியல் பட்டக் கல்வியில் பட்டயம், மேற்பட்டயம் மற்றும் பட்டச் சான்றிதழ்கள் ஒருங்கிணைத்து வழங்கப்படுகிறன.

தமிழ் இணையக் கல்விக்கழகம் வழங்கும் பல்வேறு பாடத்திட்டங்களுக்குப் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 18012 மாணவர்கள் பதிவு செய்துள்ளனர்.

சான்றிதழ், பட்டயம், மற்றும் பட்டம் பெற்ற மாணவர்களின் விவரங்கள் பின்வருமாறு :-

| வ.எண் | நாடு | சான்றிதழ் | மேற்சான்றிதழ் | பட்டயம் | மேற்பட்டயம் | பட்டம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஆஸ்திரேலியா | 3 | 1 | 0 | 0 | 0 |
| 2 | கனடா | 0 | 0 | 0 | 0 | 0 |
| 3 | பிஜி தீவுகள் | 0 | 0 | 0 | 0 | 0 |
| 4 | பிரான்சு | 0 | 75 | 44 | 29 | 21 |
| 5 | ஜெர்மனி | 0 | 2 | 1 | 0 | 0 |

| வ.எண் | நாடு | சான்றிதழ் | மேற்சான்றிதழ் | பட்டயம் | மேற்பட்டயம் | பட்டம் |
|---|---|---|---|---|---|---|
| 6 | ஹாங்காங் | 91 | 0 | 0 | 0 | 0 |
| 7 | இந்தியா | 2857 | 155 | 4 | 2 | 1 |
| 8 | கென்யா | 0 | 0 | 0 | 0 | 0 |
| 9 | மலேசியா | 0 | 0 | 0 | 0 | 0 |
| 10 | மொரிசியஸ் | 18 | 0 | 0 | 0 | 0 |
| 11 | நியூஸ்லாந்து | 0 | 0 | 0 | 0 | 0 |
| 12 | மியான்மர் | 0 | 0 | 0 | 0 | 0 |
| 13 | ரீயூனியன் | 14 | 0 | 0 | 0 | 0 |
| 14 | செஷல்ஸ் | 0 | 0 | 0 | 0 | 0 |
| 15 | தென் ஆப்பிரிக்கா | 1 | 0 | 0 | 0 | 0 |
| 16 | சுவிட்சர்லாந்து | 0 | 0 | 0 | 0 | 0 |
| 17 | ஸ்ரீலங்கா | 0 | 149 | 674 | 381 | 262 |
| 18 | ஓமன் | 1805 | 84 | 0 | 0 | 0 |
| 19 | ஐரோப்பா | 13 | 1 | 0 | 0 | 0 |
| 20 | அமெரிக்கா | 2060 | 12 | 11 | 9 | 0 |
| | மொத்தம் | 6862 | 479 | 734 | 421 | 284 |
| | மொத்தக் கூட்டுத் தொகை | | | | | 8780 |

மேற்கண்ட கல்வித் திட்டங்கள் 20 நாடுகளில் உள்ள 90 தொடர்பு மையங்கள் மூலமாக நடைபெறுகின்றன.

தமிழ் இணையக் கல்விக்கழகம் உலகெங்கும் உள்ள மாணவர்களின் நலனுக்காக மழலை, அடிப்படை நிலை, இடைநிலை மற்றும் மேல்நிலை தமிழ்ப் பாடங்களைக் கற்க பின்வரும் குறுவட்டுகளை உருவாக்கி வெளியிட்டுள்ளது

- தமிழ் கற்க
- தமிழ் கற்போம்
- திருக்குறள்
- கலைச்சொல் பேரகராதி

### 5.5. தமிழர் தகவலாற்றுப்படை

மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110-ன் கீழ் 11.08.2014 அன்று அறிவித்தபடி, தமிழர்களின் சாதனை தமிழ்மொழி மற்றும் இலக்கியம் ஆகியவைக் குறித்த விரிவான மற்றும் ஒருங்கிணைந்த தகவல் களஞ்சியம் (தகவலாற்றுப்படை) ஒன்றினை உருவாக்க ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி தொல்லியல் மற்றும் வரலாறு சார்ந்த பிரிவுகளில் தொல் பழங்காலம், அகழாய்வுகள், கல்வெட்டுகள், வழிபாட்டுத்


தலங்கள், சிற்பங்கள், நாணயங்கள், செப்பேடுகள், வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் ஓவியங்கள் தொடர்பான மொத்தம் 627 தொன்மை ஆய்விடங்களுக்கான ஒளிப்படங்கள் விளக்கமான மீத்தரவுகளுடன் http://tagavalaatruppadai.in என்ற இணையத்தில் பதிவேற்றப்பட்டு 11.10.2017 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் முறைப்படித் தொடங்கி வைக்கப்பட்டது. மேலும் தொல்லியல் மற்றும் வரலாறு பிரிவுகளின் மீத்தரவுகளை ஒளிப்படங்களோடு ஆவணப்படுத்துதல் மற்றும் தரவேற்றப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.




**படம் – 33**

## 5.6. தமிழ் மின்நிகண்டு

தமிழ் மின்நிகண்டு என்பது, ஒத்தப் பொருள்களைக் கொண்ட சொற்களை ஒன்று சேர்த்து சொற்களுக்குத் தகுந்தாற்போல் அளித்தலாகும். இது அகராதியிலிருந்து சற்று மாறுபட்டதாகும். இம்மின்நிகண்டினை உருவாக்க தமிழக அரசு ₹27.42 இலட்சத்தை அளித்தது. இந்த மின்நிகண்டு 3 நிலைகளில் உருவாக்கப்பட்டுள்ளது. 1. டாட்நெட், 2. கட்டற்ற மென்பொருள் மற்றும் 3. கைப்பேசி செயலி. இவை அனைத்தும் தமிழ் இணையக் கல்விக்கழக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. மேலும் கைப்பேசியின் செயலி கூகுள் பிளே ஸ்டோரில் இரண்டாம் நிலையில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.





படம் – 34

## 5.7. தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் மின்கற்றலுக்கான இணையதளம் (e-Learning Web Portal)

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் செயல்பாடுகளை மேலும் மேம்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 11.10.2017 அன்று தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் புதுப்பிக்கப்பட்ட மின் கற்றலுக்கான இணையதளத்தைத் தொடங்கி வைத்தார்கள். இவ்விணையதளத்தில் மாணவர் பதிவு, தேர்வுக்கான தளம், தொடர்பு மையங்களின் மேலாண்மை

போன்றவைகள் உள்ளன. இதற்காக தமிழக அரசு ₹12.26 இலட்சத்தைத் தமிழ் இணையக் கல்விக்கழகத்திற்கு அளித்தது.





**படம் – 35**

### 5.8. மின்நூலகம் உருவாக்குதல்

உலகெங்கும் வாழும் தமிழர்கள் மற்றும் ஆய்வாளர்கள் அனைவரும் பயன்படுத்தும் வகையில் அரிய நூல்கள், இதழ்கள், ஆவணங்கள் உள்ளடக்கிய மின்நூலகம் ஒன்று தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மின்நூலக உருவாக்கத்திற்கு

₹1 கோடி தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 24,656 அரிய நூல்களிலிருந்து 53,27,879 பக்கங்கள் மின்னுருவாக்கம் செய்யப்பட்டுள்ளன. மேலும், முப்பதிற்கும் மேற்பட்ட நிறுவனங்களிடமிருந்து மின்னுருவாக்கம் செய்யப்பட்ட மின்நூல்கள், அரிய கையெழுத்து பிரதிகள் 9.12 TB அளவில் சேகரிக்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக, 11,283 நூல்கள் மற்றும் பருவ இதழ்கள் http://tamildigitallibrary.in என்ற இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இம்மின்நூலகம் 11.10.2017 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. மேலும், ஆய்வாதாரங்கள் அனைத்தும் வகைப்படுத்தி MARC 21 முறையில் மீத்தரவுகளுடன் இணையதளத்தில் பதிவேற்றும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.




**படம் – 36**

## 5.9. ஓலைச்சுவடிகளை மின்னுருவாக்கம் மற்றும் நூலடைவு செய்தல்

தென்னிந்தியாவில் உள்ள ஓலைச் சுவடிகளில் அங்குள்ள மக்கள், நிலம், கல்வி மற்றும் கலாச்சாரம் தொடர்புடைய செய்திகள் கிடைக்கப் பெறுகின்றன. இந்த ஓலைச்சுவடிகளை மின்னுருவாக்கம் செய்வதின் மூலம் பொது நூலகத்தில் கிடைக்கும் ஓலைச்சுவடித் தொகுப்புகளை (தகவலை) விட இதில் பல அரிய, சிறப்பான சேகரிப்புகள் கிடைக்கப்பெறும். இது நம் பண்பாட்டினைப் பாதுகாத்து உலகளவில் கொண்டு சேர்க்க இயலும். இதன் பொருட்டு டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் நூலகம், இந்திய

மருத்துவம் & ஓமியோபதி இயக்ககம் மற்றும் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் உள்ள ஓலைச்சுவடிகளை மின்னுருவாக்கம் மற்றும் நூலடைவு செய்யும் பணிக்காக ₹105 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து பணி நடைபெற்று வருகின்றது.

**5.10. மாதாந்திரச் சொற்பொழிவு**

தமிழ் பாரம்பரியம், கலை மற்றும் பண்பாடு பற்றிய தொடர் சொற்பொழிவு தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் மாதந்தோறும் நடத்தப்பட்டு வருகிறது. இதில் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் சார்ந்த பல்வேறு துறைகளிடமிருந்து சிறந்த அறிஞர்கள் மற்றும் வல்லுநர்கள் சொற்பொழிவு ஆற்றி வருகிறார்கள். இவை அனைத்தும் பதிவு செய்யப்பட்டு, உலகெங்கும் வாழும் தமிழர்கள் பார்த்துப் பயன்பெறும் வகையில் இணையதளத்தில் தரவேற்றி (webcast) ஆவணப்படுத்தப்பட்டு வருகிறது. தமிழர்களின் சிற்பக்கலை, தமிழர் நாகரிகத்தின் பழமை குறித்துத்

தலைச் சிறந்த அறிஞர்களைக் கொண்டு இதுவரை 36 சொற்பொழிவுகள் நடைபெற்றுள்ளன.

## 5.11. தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் பரப்புரைப் பணிகள்

தமிழ் இணையக் கல்விக்கழகம் அனைத்து நிலைகளிலும் கணினித் தமிழை வளப்படுத்தவும், வலுப்படுத்தவும் ஒருங்கிணைந்த முறையிலான பரப்புரைப் பணிகளைக் மேற்கொண்டு வருகின்றது. அவை, (i) தமிழ்நாட்டின் உயர்க்கல்வி நிறுவனங்களில் "**கணித்தமிழ்ப் பேரவை**", (ii) இணையம் சார்ந்த தமிழ் உள்ளடங்கங்களை மேம்படுத்த "**தமிழ்ப் பெருங்களஞ்சியம்**" (iii) கான் கல்விக்கழகக் காணொலிகளைத் தமிழாக்கம் செய்யும் திட்டம். (iv) கட்டற்ற மென்பொருள் மற்றும் படைப்பாக்கத்திற்கான பொது முயற்சிகள் ஆகியவை ஆகும்.

### 5.11.1. கணித்தமிழ்ப் பேரவை

கணினித் தமிழின் இன்றியமையாமையை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் என்னும் அடிப்படையில் கணித்தமிழ்ப் பேரவைகள் தமிழக உயர்கல்வி நிறுவனங்களில் தொடங்கப்பட்டுள்ளன. இதுவரை அறிவியல், பொறியியல், மேலாண்மை மற்றும் மருத்துவம் உள்ளிட்ட 100 கல்லூரிகளில் கணித்தமிழ்ப் பேரவைகள் தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் தொடங்கப்பட்டு இப்பேரவைகளில் பல்வேறு பல்கலைக்கழகங்கள் / கல்லூரிகளைச் சார்ந்த 10,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இம்மாணவர்கள் தமிழில் வலைப்பூக்கள் மற்றும் குறுஞ்செயலிகளை உருவாக்க தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் பயிற்சி அளிக்கப்படுகிறது. ₹25 இலட்சத்தினை இத்திட்டத்திற்காக அரசு அளித்துள்ளது. ஒரு கல்லூரிக்கு ₹25,000/- வீதம் கணித்தமிழ்ப் பேரவைத் தொடங்க ஆதார நிதியாக வழங்கப்பட்டுள்ளது. கணித்தமிழ்ப் பேரவை செயற்பாடுகளின் அடிப்படையில்

மேலும் தமிழகத்திலுள்ள பல கல்லூரிகளுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.11.2 தமிழ்ப் பெருங்களஞ்சியத் திட்டம்

தமிழ்ப் பெருங்களஞ்சியத்தினைப் பொருத்த வரையில், 84000 த்திற்கும் மேற்பட்ட தமிழ்க் கட்டுரைகள் வேளாண்மை, மீன்வளம், வேதியியல், உயிரியியல், இயற்பியல் போன்ற துறைகளிலிருந்து பெறப்பட்டு www.tamilkalanjiam.in என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில், இவை பல்லூடகப் பொருள்களாக அளிக்கப்படும்.

### 5.11.3 கான் கல்விக்கழகத்தின் கல்விச் சார்ந்த காணொலிகள்

தமிழ் இணையக் கல்விக்கழகம் 8706 கான் கல்விக்கழக ஆங்கில காணொலிகளைக் கான் கல்விக்கழகத்திடமிருந்து பெற்றுள்ளது. இதுவரையில் 2025 காணொலிகள் தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளன. மேலும், 1721 காணொலிகள்

தமிழ் இணையக் கல்விக்கழக இணையதளத்திலும். Youtube.com என்ற இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன, மீதமுள்ள காணொலிகளை மொழிமாற்றம் செய்யும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

### 5.11.4 படைப்பாக்கப் பொது முயற்சி

அரசாணை எண்.105, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்திதுறை (TD2-2) நாள்: 01.07.2016-இன்படி, தமிழ் வளர்ச்சித் துறை சார்ந்த பணிகள் (நூல்கள் முனைவர் பட்ட ஆய்வேடுகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் போன்றவை) மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடுகள் அனைத்தும் படைப்பாக்கப் பொது உரிமத்தின் படி அனைவருக்கும் பகிரப்படும். தமிழ்ச் சார்ந்த அறிவு அனைவருக்கும் சட்டப்படி கிடைக்கப்பெறுவது இதன் நோக்கம் ஆகும். இதனை நிறைவேற்றும் விதமாக 11.283 நூல்கள் தமிழ் இணையக் கல்விக்கழக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. தமிழ்மொழியின் பயன்பாடு

அதிகரிக்க தமிழ் இணையக் கல்விக்கழகமும் விக்கிபீடியாவும் சேர்ந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளைப் பள்ளி மற்றும் கல்லூரிகளில் நடத்திட ஊக்குவிக்கிறது.

### 5.12. நடைபெற்றுவரும் திட்டங்கள்

உலகெங்கிலும் உள்ள தமிழர்களுக்குத் கணினித் தமிழைப் பரப்புவதற்கு தமிழ் அறிஞர்கள், மொழியியலாளர்கள், தமிழ் வல்லுநர்கள் மற்றும் பல்வேறு அரசு நிறுவனங்களின் உறுப்பினர்கள் ஆகியோரின் உதவியுடன் புதுமையான திட்டங்கள் கண்டறியப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

#### 5.12.1. தமிழ் மென்பொருள்கள் உருவாக்கம்

தமிழ் ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்குச் சிறந்த ஆய்வுச்சூழலை உருவாக்க தமிழ் இணையக் கல்விக்கழகம் தமிழ் மொழித் தொழில்நுட்பம் (Tamil Language Technology) மற்றும் இயற்கை மொழி (Nautural Language) ஆய்விற்காக நீண்ட

கால ஆராய்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அதன் மூலம் சொல்லாளர், பிழைதிருத்தி, ஒளி வழி எழுத்தறிவான் ஆகிய மென்பொருட்களைச் செம்மையாக்குவதுடன் ஒருங்குறி மாற்றி, உரை உணர்தல், உரைச் சுருக்கம் தருதல், பேச்சு உணர்தல் மற்றும் பகுத்தல், தானியங்கி மொழிபெயர்ப்பு போன்ற பலவகைப் பயன்பாட்டு மென்பொருட்களும் உருவாக்கப்படும். தமிழ் மொழியியல் ஆராய்ச்சிக்காக மிகப்பெரிய தரவகம் மற்றும் மின்-அகராதி உருவாக்கம் நடைபெற்று வருகின்றது.

தமிழ்நாடு புதுமை திட்டங்கள் முயற்சி (TANII) (2015-16) நிதியின் மூலமாக 15 தமிழ் மென்பொருள்கள் வல்லுநர் குழு மூலம் கண்டறியப்பட்டன. அவற்றுள் 12 தமிழிணையத் திட்டங்கள் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 23.5.2017, 11.10.2017 மற்றும் 13.03.2018 ஆகிய நாட்களில் துவக்கி வைக்கப்பட்டன.

இத்திட்டங்கள் கணினித் தமிழ் ஆராய்ச்சியாளர்களுக்கும், மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மென்பொருள் உருவாக்குபவர்களுக்கும் பயன்படுவதுடன், ஒருங்குறியைப் (UNICODE) பரவலாக்கவும் உதவும். இதர திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

### 5.12.2. புதிய பாடத்திட்டங்கள் உருவாக்குதல்

உலகெங்கும் வாழும் தமிழர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு தமிழ் இணையக் கல்விக்கழகப் பாடத்திட்டங்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. பாடத்திட்டக் குழுவால் பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டு, பாடங்கள் எழுதும் பணி நடைபெற்று வருகின்றது.

### 5.12.3. புதிய கல்வித்திட்டம்

தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் நடத்தப்படும் பட்டயம், மேற்பட்டயம் மற்றும் பட்டக் கல்வி படிப்புகளின் சான்றிதழ்கள் தமிழ்ப் பல்கலைக்கழகம்,

தஞ்சாவூர் வழியாக அளிக்கப்படுகிறது. இப்பல்கலைக்கழகம் இந்தியாவிலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களாலும் அங்கீகரிக்கப்பட்டது. மேலும் உலகெங்கும் உள்ள புலம்பெயர்ந்த தமிழர்கள் தமிழைக் கற்க ஏதுவாக முதுநிலை பட்டப் படிப்பும், முதுகலைப்பட்டயப் படிப்பும் தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் அறிமுகப்படுத்தப்படும்.

### 5.12.4. மாணவர்களுக்கான குறுஞ்செயலிகள்

இணைய உலகத்தில் பாடம் கற்பித்தல் முறையில் மிகப்பெரிய மாற்றம் அடைந்துள்ளது. தற்போது கணினி வழியாகப் பாடம் கற்கும் முறை மாறி செல்பேசி வழியாக மொழி கற்பிக்கப்படுகிறது. ஆதலால் தமிழ் இணையக் கல்விக்கழகம் தமிழ் மொழி கற்றல் (ம) கற்பித்தலுக்காக செல்பேசி செயலிகளை உருவாக்கும்.

### 5.12.5. உரை மற்றும் பேச்சு இயக்க மென்பொருட்கள்

2017-2018 தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின் (TANII) மூலம் தமிழ் உரை மற்றும் பேச்சு இயக்க மென்பொருள் உருவாக்கம் நடைபெற்று வருகிறது. உரைப் பகுப்பாய்வுக் கருவி பிழைகளை முன்னிலைப்படுத்தி, பரிந்துரைகளையும் வழங்கும். இந்த இலக்கண சரிபார்ப்புக் கருவி குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கும் பொருத்தமான சொற்களஞ்சியமாகவும் மற்றும் இலக்கண விதிகளைப் பயன்படுத்தி அறிய பயனுள்ளதாகவும் இருக்கும். பார்வைத்திறன் குறைபாடுள்ளோர் எளிதில் வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் உதவக் கூடிய பேச்சு செயலாக்க கருவி உருவாக்கப்படும்.

### 5.12.6. இயந்திர மொழி பெயர்ப்பிற்கான தமிழ் மொழியின் சொற்றொடர் அமைப்பு மற்றும் விதிமுறைகள்.

2017-2018 தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின் (TANII) கீழ் ₹72.72 இலட்சம் இயந்திர மொழி பெயர்ப்பிற்கான தமிழ் மொழியின் சொற்றொடர் அமைப்பு

மற்றும் விதிமுறைகளுக்காக அளிக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் ஆங்கில மொழியில் சொற்றொடர் அமைப்பு மற்றும் விதிமுறைகள் கண்டறியப்பட்டது போல் தமிழ் மொழியிலும் கண்டறிவதாகும்.

### 5.13. எதிர்காலத்திட்டம்

#### 5.13.1. கணினித் தமிழ்த் துறை

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் செயல்பாடுகளை மேலும் மேம்படுத்த '**கணினித் தமிழ்த் துறை**' என்னும் ஒரு தனித் துறையை உருவாக்க தமிழ் இணையக் கல்விக்கழம் விருப்பம் கொண்டுள்ளது. தமிழ் இணையக் கல்விக்கழதத்தின் எல்லாப் பணிகளும் தமிழ் மொழி, இலக்கியம், மற்றும் கணினி தொடர்புடையதாக இருப்பதால் தனித்துறை உருவாக்கம் மிகவும் உதவிகரமாக இருக்கும்.

**இக்கணினித் தமிழ்த் துறையின் செயல்பாடுகள்:-**

I. தமிழ்மொழி, இலக்கியங்களுக்கான கணினித் தமிழ் இலக்கணம் உருவாக்குதல்,

II. பல வகையான மொழியியல் அடிப்படையில் மின்தரவு ஒன்று கணினித் தமிழுக்காக உருவாக்குதல்,

III. பல மொழிகளில் தரவுகளும் உருவாக்குதல் (தமிழ், ஆங்கிலம். பிரெஞ்ச்)

IV. கைப்பேசிகளுக்கான செயலி மென்பொருள்கள் உருவாக்குதல்,

V. தமிழக அரசின் அனைத்து இணையதளங்களும் தமிழாக்கம் செய்தல்,

VI. பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் தமிழ் மென்பொருட்கள் உருவாக்கி அளித்தல்,

VII. தமிழ் மொழிக்குப் பொதுவான ஒரு தேடுபொறி உருவாக்குதல் ஆகும்.

# அத்தியாயம் - VI

# தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம்

# (ICT ACADEMY OF TAMIL NADU)

## 6.1 முன்னுரை

ஐசிடி அகாடமி மத்திய அரசு, தமிழக அரசு மற்றும் தொழில் துறையின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். ஐசிடி அகாடமி ஒரு சுயாட்சி உரிமையுள்ள, இலாபத்தைக் கருதிச் செயல்படாத நிறுவனமாகும். இது பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சியில் தகவல் தொழில்நுட்பத்தில் அடுத்த தலைமுறை உயர்கல்வி ஆசியர்களுக்கும், மாணவர்களுக்கும் பயிற்சி அளித்து, அதன் மூலம் மாணவர்களைத் தொழில் துறைக்கான தகுதி பெறச் செய்யும் நோக்கில் ஏற்படுத்தப்பட்ட ஒரு முன்னோடி நிறுவனமாகும்.

இந்நிறுவனம் கீழ்க்கண்ட தமிழக அரசு பிரதிநிதிகளைக் கொண்ட நிர்வாக குழு மற்றும் ஆலோசனை வாரியத்தில் ஒரு அங்கமாக அமைந்து செயல்பட்டு வருகிறது.

**நிர்வாகக் குழுமம்**

- செயலாளர் - தகவல் தொழில்நுட்பவியல் துறை, தமிழ்நாடு அரசு.

- நிர்வாக இயக்குநர், எல்காட் நிறுவனம்
- ஆணையர் மற்றும் முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு மின்-ஆளுமை முகமை.


**ஆலோசனை வாரியத்தின் உறுப்பினர்கள்**:

- கூடுதல் தலைமை செயலாளர் – தொழில் துறை, தமிழ்நாடு அரசு.
- முதன்மை செயலாளர் - தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தமிழ்நாடு அரசு.

- முதன்மை செயலாளர் – உயர்கல்வித் துறை, தமிழ்நாடு அரசு.

## 6.2. செயல்பாடுகள்

தமிழ்நாடு ஐசிடி அகாடமி பின்வரும் 7 முக்கிய செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.




**படம் – 37**

## 6.3. ஆசிரியர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் (2017-18)

ஐசிடி அகாடமி பல்வேறு ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்களை வடிவமைத்து,

மாநிலமெங்கும் பணிபுரியும் தகவல் தொழில்நுட்பத் துறை சார்ந்த ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கி வருகிறது. அதன் விபரம் கீழ்க்கண்டவாறு.

| | |
|---|---|
| பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் | 6,303 |
| பயன் பெற்ற மாணவர்கள் | 2,52,120 |
| பயனடைந்த கல்வி நிறுவனங்கள் | 591 |
| நடத்தப்பட்ட ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் | 258 |

### 6.4. திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் (2017-18)

இந்திய மாணவர்களின் தொழில்நுட்ப ஆற்றல்களை மேம்படுத்தும் வகையில் இளைஞர்களின் தொழில்நுட்ப திறனை வளர்த்திட ஐசிடி அகாடமி இளைஞர் திறன் மேம்படுத்துவதில் கவனம் செலுத்தி வருகிறது,

பயிற்சி விபரம்

| | |
|---|---|
| பயிற்சி அளிக்கப்பட்ட மாணவர்கள் | 17,185 |
| சான்றளிக்கப்பட்ட மாணவர்கள் | 17,185 |

## 6.5. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (2017-18)

தொழில் முனைவோர் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றனர். வெற்றிகரமான தொழில் முனைவோர் நூதன முறையில் புதிய பொருட்கள் மற்றும் கருத்துகளைச் சந்தைப்படுத்தி, சந்தைத் திறனை கூட்டி, வளங்களை அதிகரித்து, வேலைவாய்ப்பை உருவாக்கி, பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்பர். மேலும் உலகமயமாகும் பொருளாதாரச் சூழலில் தொழில் முனைவோர் சந்தைப் போட்டிக்கு ஈடுகொடுக்க தேவையான கருத்துக்களை நூதன முறையில் உருவாக்குகின்றனர்.

| | |
|---|---|
| தொழில் முனைவோர் விழிப்புணர்வுத் திட்டம் | 11,281 |
| தொழில் முனைவோர் மேம்பாடு பயிற்சி திட்டம் | 250 |

## 6.6. இளைஞர் மேம்பாட்டுத் திட்டம் (2017-18)

இளைஞர்களின் தொழில்சார் எதிர்காலத்தைச் செம்மைப்படுத்துதல் என்பது அவர்களின் திறன்

மேம்பாட்டிற்கு இன்றியமையாதது என்பதை உணர்ந்து ஐசிடி அகாடமி இளைஞர் மேம்பாட்டை தனது ஒரு செயல்திட்டமாக செயல்படுத்தி வருகிறது.

| | |
|---|---|
| இளைஞர் உச்சி மாநாடுகள் | 3 |
| உச்சி மாநாடு பங்கேற்பாளர்கள் | 8,469 |
| பவர் கருத்தரங்கம் | 44 |
| இளைஞர்களுக்கான போட்டி | 22,862 |
| இளைஞர் அங்கீகாரம் | 31 |

**6.7. ஆய்வுகள் மற்றும் பிரசுரங்கள் (2017-18 டிஜிட்டல் ஆப்ஜெக்ட் ஐடன்டிபையர்:**

ஐசிடி அகாடமி சஞ்சிகைகளில் பிரசுரமாகும் அனைத்து ஆய்வுக் கட்டுரைகளும் டிஜிட்டல் ஆப்ஜெக்ட் ஐடண்டிபையர் (Digital Objective Identifier) என்ற தனிப்பட்ட குறியிட்டை பெறுகிறது, DOI எண்ணெழுத்துச் சரம் சர்வதேச டிஓஐ பவுண்டேஷன் என்னும் பதிவு முகவர் நிறுவனத்தால் வழங்கப்படுகிறது. இந்த எண்ணை வழங்குவதன் மூலம் அக்கட்டுரைகளுக்கான நிரந்தர இணைய இணைப்பு முகவரியைக் கொண்டு வாசகர்கள்

இலகுவாக கட்டுரைகளைத் தேடி எடுக்க டிஜிட்டல் ஆப்ஜெக்ட் ஐடண்டிபையர் வகை செய்கிறது.

**இன்டெக்ஸ் காப்பர்நிக்கஸ்:**

ஐசிடி அகாடமி சஞ்சிகைகள் இன்டெக்ஸ் காப்பர்நிக்கஸ் நிறுவனத்தால் குறியீடு செய்யப்பட்டுள்ளது, இன்டெக்ஸ் காப்பர் நிக்கஸ் என்பது இணைய வழி பயணர் பங்களிப்பின் தரவுகளை உள்ளடக்கியதாகும் இது அறிவியல் சமூகவியல் உறுப்பினர்கள், ஐரோப்பிய பிராந்தியத்திலுள்ள போலந்து நாட்டில் அமைந்துள்ளது. இது போலந்தில் அமையப்பெற்றுள்ள இன்டெக்ஸ் காப்பர்நிக்கஸ் நிறுவனம் அறிவியல் ரீதியான வெளியீடுகள் மற்றும் ஆய்வுச் சாத்தியங்கள் பரிசோதிக்க பல்-அளவுரு ஆய்வை மேற்கொள்கிறது. இத்தரவுத்தளமானது இன்டெக்ஸ் காப்பாநிக்கஸால் இயக்கப்படுகிறது..

| | |
|---|---|
| சர்வதேச சஞ்சிகைகள் | **5** |
| ஆய்வுக் கட்டுரைகள் | 157 |
| இதழாசிரியர் மற்றும் மதிப்பு ஆய்வு குழு | 45 |
| உலகளாவிய சுட்டுவரிசையாக்கம் | 6 |

**6.8. டிஜிட்டல் மேம்பாட்டுத் திட்டம் (2017-18)**

மாணவர்கள் டிஜிட்டல் சமுதாயத்தில் கற்கவும், பணிபுரியவும் இச்சூழலுக்கேற்ப வாழும் வகையில் டிஜிட்டல் கல்வி அறிவு திட்டத்தில் ஐசிடி அகாடமி கவனம் செலுத்தி வருகிறது.

| | |
|---|---|
| பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் | 120 |
| மதிப்பிடப் பட்டு சான்றளிக்கப்பட்டவை | 300 |
| NDLM சான்றளிப்பு | 6847 |

**6.9. தொழில் மற்றும் கல்வி நிறுவனங்களின் தொடர்பு திட்டம் (2017-2018)**

கல்வி மற்றும் தொழில் நிறுவனங்களின் இடையேயான இடைவெளியைக் குறைக்கும் வழிகளை ஐசிடி அகாடமி உருவாக்கியுள்ளது.

ஐசிடி அகாடமி இதுவரை 2 தொழில் மற்றும் - கல்வி நிறுவன ஊடாடல் மாநாடுகளை (Bridge) முறையே சென்னை மற்றும் கோவையில் நடத்தியுள்ளது.

| வ. எண் | மாநாடு | கருப்பொருள் | பங்கேற்பாளரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பிரிட்ஜ் கோயம்புத்தூர் 2017 | தி ப்யூச்சர் ஆப் ஒர்க் (The Future of worK | 328 |
| 2. | பிரிட்ஜ் சென்னை- 2018 | தி ப்யூச்சர் ஆஃப் ஒர்க் (The Future of worK | 1,825 |

## 6.10 ஐசிடி அகடமியால் கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (2017-18)

| வ. எண். | கார்ப்பரேட் பார்ட்னர் கள் | விவரம் | பார்வையாளர்கள் |
|---|---|---|---|
| 1 | Sales force | சிறந்த கற்றல் அனுபவம் மற்றும் வேலைவாய்ப்புத் திறன்மிக்க மாணவர்களை உருவாக்கும் வகையில் பிரத்தியேகமாக வடிவமைக்கப் பட்டுள்ளன. | உறுப்பினர் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் |

| | | | |
|---|---|---|---|
| 2 | Amazon Web Services | ஐசிடி அகடாமியின் உறுப்பு கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மேகக் கணினியில் பயிற்சி வழங்கி வருகிறது. | உறுப்பினர், கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் |
| 3 | NVIDIA | NVIDIA தேர்ச்சிபெற்ற கல்வியாளர்கள் மூலம் அவர்களது பல்கலைக்கழக வளாகங்களில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஆய்வாளர் களுக் கு இலவசமாக பயிற்சி பட்டரை நடத்தி வருகிறது. | உறுப்பினர் கல்லூரி ஆசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் மாணவர்கள் |

| | | | |
|---|---|---|---|
| 4 | STEP – தி ஹிந்து குழுமம் | வேலை வாய்ப்பை மையமாகக் கொண்டு ஆங்கில மொழிப் பயிற்சிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தி ஹிந்து குழுமத்துடன் கையொப்பம் இடப்பட்டது. இந் நிறுவனங்கள் கூட்டாக சேர்ந்து ஆங்கிலத் திறன் மதிப்பீட்டுத் தினம் பட்டறைகள் கருத்தரங்கள் நடத்தும். இதன் மூலம் மாணவர்களின் ஆங்கிலத் திறன் மேம்படும் | உறுப்பினர் கல்லூரி மாணவர்கள் |

| | | | |
|---|---|---|---|
| 5 | கேட் மையங்கள் | கேட் மையம் தனது ப்ளான் கேட் நெக்ஸ்ட் என்ற பயிற்சித் திட்டத்தை ஐசிடிஏசிடியின் உறுப்பினர் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பொறியியல் பயிலும் மாணவர்களுக்கு வழங்குவதோடு, ஆசிரியர்களுக் கான மேம்பட்ட ஆசிரியர் திறன் திட்டங்களையும் வழங்கவுள்ளது.. | உறுப்பினர் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் |

### 6.11 2017-2018-ல் நிறைவு செய்யப்பட்ட திட்டங்கள்

பயிற்சி அளிக்கும் திறனை ஒருங்கே பெற்ற ஐசிடி அகாடமி, அரசுத்துறை பணியாளர்களுக்கு தகவல் மற்றும்

தகவல் தொடர்பபுத் தொழில்நுட்பம் மற்றும் மின் ஆளுமையில் பயிற்சி அளித்து வருகிறது.

2017-2018-ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட சில திட்டங்கள் பின்வருமாறு:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | துறை |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு ஹவுஸ் - டெல்லியில் பணிபுரியும் 30 ஊழியர்களுக்கு அடிப்படை கணினி இயக்க பயிற்சித் திட்டம் | மின் ஆளுமை ஆணையரகம் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, (TNeGA) |
| 2 | மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு-1000 பட்டப்படிப்பு இறுதி ஆண்டு மாணவர்களுக்கு தமிழ்நாடு ஐசிடி நிறுவனம் மூலம் தகவல் தொழில்நுட்ப மற்றும் மென்திறன் பயிற்சி வழங்குதல் | தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனம் (Tamil Nadu Skill Development Corporation) |

| | | |
|---|---|---|
| 3 | 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் 31,000 பட்டப்படிப்பு இறுதியாண்டு மாணவர்களுக்கு மென்திறன் மற்றும் தொழில் விழிப்புணர்வு பயிற்சி திட்டம் | தமிழ்நாடு உயர்கல்வி மாநில மன்றம் (TANSCHE) |

**6.12 2018- 2019-ல் நடைமுறையில் உள்ள தமிழக அரசின் திட்டங்கள்**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | துறை |
|---|---|---|
| 1 | 1200 பட்டப் படிப்பு பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு வேலை வாய்ப்புத் திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் | தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO) |

| | | |
|---|---|---|
| 2 | சமூகநலத்துறையால் நடத்தப்படும் விடுதிகளில் உள்ள 80 மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு திறன் பயிற்சி திட்டம். | சமூக நலம் மற்றும் சத்துணவவுத் திட்டத் துறை (Social Welfare and Nutritious Meal Programme Department) |

## 6.13. 2018-2019-ல் முன்மொழியப்பட்ட பயிற்சிகள்

| வ.எண் | திட்டத்தின் பெயர் | துறை |
|---|---|---|
| 1 | மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு -9000 பட்டப்படிப்பு இறுதி ஆண்டு மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப மற்றும் மென்திறன் பயிற்சி வழங்குதல் | தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனம் (Tamil Nadu Skill Development Corporation) |

| | | |
|---|---|---|
| 2 | 700 பட்டப்படிப்பு இறுதி ஆண்டு மாணவர்களுக்கு “மேம்பட்ட ஐடி மற்றும் ஐடீஇஎஸ் துறைசார் “(Advanced IT/ITES) பயிற்சி வழங்குதல் . | தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனம் (Tamil Nadu Skill Development Corporation) |
| 3 | இந்து சமயம் மற்றும் அறநிலைய துறையில் - பணிபுரியும் 40,000 ஊழியர்களுக்கு அடிப்படை கணினி இயக்கப் பயிற்சி வழங்குதல் . | இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் (Hindu Religious and Charitable Endowments) |

## அத்தியாயம் – VII

## தமிழ்நாடு ஃபைபர்நெட் கார்ப்பரேஷன் லிமிடெட் (TANFINET)

14.9.2015 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் விதி 110-ன் கீழ், மத்திய அரசின் பாரத்நெட் திட்டமானது தமிழ்நாட்டில், மாநில திட்ட உருவத்தில், தமிழ்நாடு பைபர்நெட் நிறுவனம் (Tamil Nadu Fibrenet Corporation Limited) என்ற சிறப்பு நோக்கு நிறுவனத்தின் (Special Purpose Vehicle) மூலம் செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்கள். அதன்படி, கண்ணாடி இழை வலையமைப்பை தமிழகத்தில் உருவாக்கி, செயல்படுத்தி, சுயமாகப் பராமரிக்க தமிழ்நாடு பைபர்நெட் கார்ப்பரேஷன் லிமிடெட் என்னும் நிறுவனத்தைத் தோற்றுவிக்க தமிழ்நாடு அரசு 01.02.2016 அன்று ஆணை பிறப்பித்தது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 14.07.2017 அன்று சட்டமன்றப் பேரவையில் விதி 110-ன்கீழ், “கிராமப்புற பகுதிகளில் செயல்படுத்தப்படும் மேற்கண்ட

திட்டத்தின் பயன்கள் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளைச் சென்றடைய Optical Fibre மூலம் இணைத்து, டிஜிட்டல் புரட்சியின் பயன்களை தமிழ்நாட்டிலிலுள்ள அனைவரும் பயன்பெறும் வகையிலும், அவரவர் இல்லங்களுக்கு அருகில் தமிழ்நாடு அரசின் பல்வேறு சேவைகளை இணையம் மூலம் பெறவும், நகர்ப்புற பகுதிகளிலும் Optical Fibre நெட்வொர்க் திட்டத்தை செயல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. இத்திட்டம் "தமிழ்நெட்" (TamilNet) என்று அழைக்கப்படும். இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு தமிழ்நாடு அரசு கேபிள் டிவி மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் போன்ற நிறுவனங்களிடமிருந்தும், பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சியிலும் செயல்படுத்தப்படும்." என்று அறிவித்தார்கள். TANTRANSCO நிறுவனத்தால் நிர்மாணிக்கப் பட்டுள்ள மற்றும் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ள கண்ணாடி இழைகளை பயன்படுத்தி தமிழ்நெட் வலையமைப்பு உருவாக்கப்படும். தமிழ்நெட்

திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படவுள்ளது.

தமிழ்நாடு பைபர்நெட் நிறுவனம் அமைப்பதற்கான வரைவு Memorandum of Association மற்றும் Articles of Association ஆகியவை 14.05.2018 அன்று அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பதிவு செய்யும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாடு பைபர்நெட் நிறுவனம் பாரத்நெட் மற்றும் தமிழ்நெட் திட்டங்களைச் செயல்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும்.

**டாக்டர். எம். மணிகண்டன்**
**தகவல் தொழில்நுட்பவியல் துறை**
**அமைச்சர்**